Registered as a News Paper

விலை: 12.00

# ஈழநாதம்

பக்கம் - 16 + ||

வெள்ளிநாதம் Weekly

நாதம்—14 வெள்ளி—15 06—12 ஜூன் 2003



ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி 06.06.2003

# காரியத்தில் கண்ணாக...

ரோக்கியோ உதவி வழங்கும் மாநாட்டில் புலிகள் பங்குபற்றுவதற்கான எந்தவாய்ப்பையும் அரசு வைக்கவில்லை.

இதையடுத்து சமாதானத்தேர் முற்றாக புதையுண்டு போய்க் கிடக்கிறது பெரும் நம்பிக்கையோடு ஆரம்பித்த அரசு – புலிகள் சமாதான பேச்சுக்கள் இப்போது நம்பிக்கையற்றுக்கிடக்கிறது.

ஆறு கட்ட சமாதானப் பேச்சுக்களின் போதும் சமாதான முயற்சி தொடரவேண்டு மென்பதற்காக புலிகள் எல்லா வகையிலும் தமது நல்லெண்ண சமிக்ஞைகளை வெளிப்படுத்தத்தவறவில்லை.

ஆனால் அரசோ தனது தரப்பிலிருந்து பல வாக்குறுதிகளை அளித்ததோடு அவை நடைமுறைக்கு வரக்கூடியதாக எந்தவித முயற்சிகளையும் எடுக்கவில்லை.

ஆனால் அவற்றை நியாயப் படுத்தலிற்காக மாத்திரம் எல்லாவித தந்திரங்களையும் அரங்கேற்றத் தவறவில்லை.

புலிகள் ரோக்கியோ மாநாட்டில் வழங்கப்படும் நிதியினை பாதிக்கப்பட்ட தமிழ் மக்களிற்கு சென்றடைய வேண்டுமென்றால் வடக்கு கிழக்கில் நிதி, நிர்வாக மற்றும் ஏனைய அலகுகளில் அதிகாரம் உள்ள கட்டமைப்பை ஏற்படுத்த வேண்டும் எனக்கோரியபோதும் அரசு அதைப்பற்றி எதனையும் பிரஸ்தாபிக்காமல் அதற்குப்பதிலாக மாற்று யோசனைகளை வைத்து காலத்தை இழுத்தடிக்கிறது.

தமிழ்மக்களின் சார்பில் கோரப்பட்ட நியாயமான எந்த திட்டத்திற்கும் பதிலில்லை

இந்நிலையில் அரசு புலிகளிற்கிடையில் தொடரும் இரண்டரை தசாப்தகால போரில் பல தடவைகள் பல்வேறு பேச்சுக்கள் நடைபெற்றுள்ளன.

ஆனால் இம்முறையே மூன்றாந்தரப்பு அனுசரணையுடன் சமாதான அரங்கேற்றம் பல்வேறு நாடுகளில் நகரங்களில் மேடையேற்றப்பட்டன.

இதனால் இந்த சமாதானத்தில் வலுமிக்க சக்தியான புலிகளின் பங்களிப்பை உறுதிசெய்யவேண்டிய கடப்பாடு சர்வதேசசமூகத்திற்கும் இருந்தது.

ஆனால் ரோக்கியோ மாநாட்டை ஒழுங்குசெய்துள்ள ஜப்பானோ அல்லது நோர்வேயோ அல்லது ஏனைய எந்த உலக நாடுகளாயினும் சரி போதிய கரிசனைகொண்டதாகத் தெரியவில்லை.

மாறாக தமிழ் மக்களின் கோரிக்கைகளிற்கு முக்கியத்துவம் அளிக்காது ரோக்கியோ மாநாட்டை எப்படியாவது நடத்தி முடிப்பதிலேயே கவனமாக இருக்கின்றன.

இது தமிழ்மக்கள் சந்தேகம் கொள்ளவேண்டியது இலங்கை அரசைமட்டுமல்ல சர்வதேச சமூகத்தையும் தான் என்பது போல உள்ளது.

உறுதிப்பாடுகள் எதுவுமில்லாது சந்தேகங்கள் வலுக்கக்கூடிய பதில்களை மட்டும் கொண்டு புலிகள் ரோக்கியோ மாநாட்டில் பங்குபற்ற வேண்டுமென விரும்பிய சக்திகள் எல்லாம் ஏமாந்து போய்விட்டன.

அப்படித்தான் புலிகள் பங்குபற்றியிருந்தாலும் தமிழ்மக்களின் தியாகங்களை அடகுவைத்து அரசின் கைகளில் கொடுத்ததாகிவிடும்.

இது புலிகள்மீது தமிழ்மக்கள் விசனமடையச் செய்யவே உதவும்.

இதற்கிடையில் அமைச்சர் பீரிஸ் புலிகள் கோரும் இடைக்கால நிர்வாகம் பற்றி ரோக்கியோ மாநாட்டின் பின் பேசுவோம் எனத் தெரிவித் துள்ளார்.

ஏமாற்றம் விரத்தி என விசனப்பட்டுபோய் இருக்கும் தமிழ் மக்களை அமைச்சர் பீரிஸின் பேச்சு மேலும் கோபமடையவே செய்யும்.

ஏனென்றால் புலிகள், ரோக்கியோ மாநாட்டுக்கு முன்பு இது தொடர்பாக அரசுமுடிவினை எட்டப் போதிய கால அவகாசத்தை அளித்திருந்தனர்.

அரசு அக்கால அவகாசத்தை உரிய முறையில் பயன்படுத்தாமல் தனது நிலையிலிருந்து கீழிறங்காமல் இருந்துவிட்டு இப்போது ரோக்கியோ மாநாட்டிற்கு பின் பேசுவோம் எனத் தெரிவிப்பது எத்தனைதூரம் நன்மை பயக்கப் போகிறது.

ஆகவே இம்முறை சர்வதேச சமூகமும் சமாதான நடவடிக்கைகள் வலுப்பெற வேண்டுமென்பதில் ஒரு பக்க விட்டுக்கொடுப்புக்களையே எதிர் பார்த்திருக்கிறது போலத்தெரிகிறது.

இதனையே இறுதிவரை புலிகள் மாநாட்டில் பங்குபற்றவேண்டுமென் பதற்காக பல்வேறு அழுத்தங்களை பிரயோகிக்க முயல்கின்றன.

இழைக்கப்பட்ட தவறையும் முடக்கத்தையும் சர்வதேசம் சரியான வகையில் இனங்கண்டு கொள்வது மிக முக்கியம்.

இனி எத்தகைய சமிக்ஞைகளை வெளிப்படுத்தப்போகின்றன என்பதில் தான் சமாதானத்தின் ஆயுள் வலுப்பெறப்போகிறது.




# குத்துச்சண்டைகளும் குத்துக்கரணங்களும்
## பழைய மோந்தையில் புதிய கள்

தாரகன்

தமிழ மக்களின் உரிமையைப் பெற்றுக்கொள்ள எல்லாவகையிலும் தமிழ் மக்கள் போராடி விட்ட நிலையில் அவர்களின் நியாயத் தன்மையோ அல்லது அவர்களின் குரல்களுக்கு மதிப்பளிக்கவோ சிங்கள ஆளும் வர்க்கம் இன்னும் தயாராக இல்லை

> **சகல உரிமைகளையும் சகல இனங்களுக்கும் பகிரப்பட வேண்டும் என்பது வெறும் சுற்று நிருபங்களுக்குள் மட்டும் புதைந்து போகின்ற நிலை மாறவேண்டும்.**

என்பது போலத்தெரிகிறது.

ஏனென்றால் இலங்கையின் முன்னாள் சனாதிபதி ஜே.ஆர் ஜெயவர்த்தனா பரிசளித்துவிட்டுப்போன அரசியல் யாப்பின் நடைமுறையின் பின் தென்னிலங்கை ஆளும், எதிர்க்கட்சிகள் மாறிமாறி தமக்குள் போர்ப்பிரகடனம் செய்வது வழமையாகி விட்டது.

இதனைத் தமிழ் மக்கள் அரை நூற்றாண்டுக்கு முன்னரே பார்த்தாகிவிட்டது.

இலங்கைத்தீவில் தமிழ் மக்கள் சகல உரிமைகளோடும் சுயமரியாதையோடும் வாழவேண்டும் என்றால் பிரிந்து போய் நாடமைக்க வேண்டுமேயொழிய வேறு வழியில்லை என்ற நிலைக்கு வந்து போராடத்தொடங்கிவிட்டபோதும் சிங்கள ஆளும் தரப்பு தமது குத்துச்சண்டைகளை காரணம் காட்டி தமிழர் உரிமைகளை உதாசீனம் செய்யும் பல்லவி தொடரவே செய்கின்றது.

இன்றைய சமாதான தேக்க நிலைக்கும் இந்த குத்துச்சண்டைப்பல்லவியைக் காரணம்காட்ட முயல்வதும் அதனை சர்வதேச உலகம் நம்பிவிடப்பார்ப்பதும் ஒரு நகைப்புக்கிடமான செயலாகவே உள்ளது.

ஏனென்றால் இலங்கையின் அரசியல் வரலாற்றில் தொடர்ந்தும் தீர்க்கப்படாது புரையோடிக்கிடக்கும் முக்கியத்துவமிக்க பல செயற்பாடுகள் இன்றும் பல சிக்கல்களின் தோற்றுவாய்களாக இருப்பது என்பதாகும்.

இலங்கையின் அரசியல் வரலாற்றில் யாப்பும் அதன் தன்மைகளும் மாறக்கூடிய சாத்தியப்பாடுகளும் இல்லை. அதன் ஊடாக எந்தவித தீர்வையும் முன்வைக்கப்படும் என்ற நம்பிக்கையும் இல்லை என்கின்ற நிலையே தொடர்கின்றது.

உலகம் எதனை எதுவரை கொண்டு செல்ல நினைக்கின்றது என்பது அவர்களின் கைகளிலும் இல்லை.

அது சிங்களத்தின் குதர்க்கத்திற்குள் தோய்ந்து போய்க்கிடக்கிறது.

சகல உரிமைகளையும் சகல இனங்களுக்கும் பகிரப்படவேண்டும் என்பது வெறும் சுற்று நிருபங்களுக்குள் மட்டும் புதைந்து போகின்ற நிலை மாறவேண்டும்.

ஆனால் அவ்வாறு மாறும் என்ற எந்தவித நம்பிக்கைகளும் இல்லை என்கின்ற தொனியே இப்போதும் காணப்படுகின்றது.

முதலில் இழைக்கப்பட்ட அநீதிகளும் அதற்காக தமிழ் மக்கள் செலுத்திய விலையையும் கவனித்தல் வேண்டும். எத்தனையோ இடர்பாடுகள், துன்பங்கள் என்பவற்றை மீண்டும் மீண்டும் தமிழ் மக்களின் தலைகளில் சுமத்தியவர்கள்.

தற்போது ஒரு தேக்க நிலையில் இருக்கும் சமாதானப் பேச்சுவார்த்தைக்கான ஒரு சிறிய இடரையே அகற்றமுடியாதவர்களாக உள்ளனர்.

இவ்வாறெனில் தமிழ் மக்கள் இத்தகைய அரசிடம் இருந்து ஒரு தீர்க்கமான நிரந்தரத் தீர்வை எப்படி எதிர்பார்க்க முடியும்.

ரணிலின் அரசும் தன்னுடைய நலனிற்காகவே தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை பலியிடநினைக்கின்றது.

இவ்வாறு பலதடவைகள் தமிழர் போராட்டம் பல்வேறு நெருக்கடிகளைச் சந்தித்தே வந்துள்ளது.

இவர்களின் பலிபீடங்களுக்குள் அகப்பட்டுப்போயிருந்தால் எப்போதோ தமிழினம் அழிந்து போயிருக்கும் ●





# ரணில் விக்கிரமசிங்க நழுவத்தொடங்கி விட்டாரா?

**நிலாந்தன்**



சமாதானத தூதுவர்களில் ஒருவரான கெல்ஹெசன் கடைசியாக வன்னிக்கு வந்த போது மீடியாக்காரர்கள் கேட்டார்களாம் புலிகளின் நிலைப்பாட்டை நீங்கள் ஆதரிக்கிறீர்களா என்று.

அதற்கு நேரடியாகப் பதில் சொல்வதைத்தவிர்த்த கெல்ஹெசன் முந்நாள் செகஸ்லோ வாக்கிய சனாதிபதி ஒருவரின் கூற்றை மேற்கோள்காட்டி பின்வருமாறு கூறினாராம்.... "நான் யாரையும் ஆதரிக்கவுமில்லை யாரையும் எதிர்க்கவும் இல்லை. பதிலாக நான் இப்பொழுதும் நம்பிக்கையோடேயே இருக்கிறேன்...." என்று.

கெல்ஹெசன் இப்பொழுதும் நம்பிக்கையோடுதான் இருக்கிறாரோ இல்லையோ தெரியவில்லை. ஆனால் புலிகள் பங்குபற்றாத ரோக்கியோ மாநாடு நம்பிக்கைகளைச் சோரச்செய்வது மட்டுமல்ல, இனி அடுத்தது யுத்தமா என்ற பயங்கலந்த ஊகங்களையும் தூண்டுவதாய் உள்ளது.

அதோடு, மீண்டும் பகிரங்கமாக ஆட்ச்சேர்ப்பில் இறங்கியதன் மூலம் அரசாங்கத்துக்கு எதையோ கூராகவும், தெளிவாகவும் கூறவிரும்புவது போல தெரிகிறது.

ஆயின் அடுத்தது என்ன?

பல ஆண்டுகளுக்கு முன்பு இலங்கைக்கான இந்தியத் தூதுவராக இருந்த டிக்சிற் ஒருமுறை சொன்னார்- புலிகள் தமது பேரம் பேசும் சக்தி மிக உச்சமாக இருக்கும் ஒரு காலகட்டத்தில் தான் எப்பொழுதும் சமாதானத்தை முறிக்கிறார்கள் என்று.

இங்கு டிக்சிற் பேரம் பேசும் சக்தி உச்சமாய் இருக்கும் காலம் என்று கருதியது, தமிழர்களுக்கு கொடுக்கக் கூடிய ஆக உச்சமான தீர்வு என்று அவர்கள் கருதிய ஒரு "தீர்வை" புலிகளுக்குக் கொடுப்பதற்கு இந்தியர்கள் தயாராக இருந்த ஒரு காலகட்டத்தையே.

அவர்களுடைய கணக்குப்படி அது ஒரு மாகாண சபை. இப்பொழுது ரணிலுடைய கணக்குப்படி, வரும் ஜனாதிபதித்தேர்தல்வரை அது ஒரு அதிகாரசபை.

டிக்சிற்றும் அமெரிக்கர்களும் ஜப்பானியர்களும் என்ன நினைக்கிறார்கள் என்றால் - தமிழர்களுக்குக் கொடுக்கக்கூடிய மிக உச்சமான தீர்வு என்று அவர்கள் கணக்குப்போடும் ஏதோ ஒரு தீர்வை, புலிகளை ஏகபிரதிநிதிகளாக ஏற்றுக்கொண்டு கொடுக்கத்தயாராக இருக்கும் போது புலிகள் ஆகக்கூடிய பட்சம் விட்டுக்கொடுத்து நடந்து கொள்ள வேண்டும் என்பதைத் தான்.

புலிகள் நெகிழ்ந்து கொடுக்கவேண்டும் என்று அண்மையில் ரணில் கூறியதும் இத்தகைய அர்த்தத்தில்தான்.

புலிகள் இடைக்கால நிர்வாகசபை கேட்டதற்கு, சர்வதேச அளவில்காட்டப்படும் எதிர்வினையும் இதைத்தான் பிரதிபலிப்பதாகக் காணப்படுகிறது.

இதில் நோர்வே மட்டும் ஓரளவுக்கு விதிவிலக்காய் இருக்கிறது. நோர்வீஜியப் பிரதமர் இது தொடர்பாக ஜப்பானில் வைத்துக்கூறியவை ஏனைய நாடுகள் கூறியவற்றோடு ஒப்பிடுகையில் புலிகளுக்குச் சாதகமாகக் காணப்படுகிறது.

மற்றும்படி, புலிகள் இடைக்கால நிர்வாக அமைப்பொன்றைக் கேட்டதன் மூலம் பேச்சுக்களைக் குழப்புகிறார்கள் என்பதான ஒரு தோற்றமே சர்வதேச அளவில் உருவாகி வருகிறது.

இதில் ரணில் விக்கிரமசிங்கவை பழியிலிருந்து விடுவிக்கும் ஒரு போக்கே சர்வதேச அளவில் பரவலாகக் காணப்படுகிறது.

மரபு ரீதியிலான அரசுகள் எப்பொழுதும் மரபு ரீதியிலான அரசுகளையே நம்புவதும் ஆதரிப்பதும் அங்கீகரிப்பதும் ஆபாத்தான வேளைகளில் காப்பாற்றுவதும் வழமை.

இம்முறையும், ரணிலின் இயலாத்தனம் அல்லது மந்தத்தனம் அல்லது விசுவாசமின்மை போன்றவை அதிகம் விவாதிக்கப்படவில்லை. மாறாக புலிகளின் நெகிழாத்தன்மையே அதிகம் பேசப்படுகிறது.

யுத்தத்தில் தியாகம் செய்த தமிழர்களையே சமாதானத்திலும் தியாகம் செய்யுமாறு கேட்கும் நீதியற்ற ஒரு போக்கே இது எனலாமா?

இதன்படி கூறின், சர்வதேச சமூகத்தின் ஆதரவு எனப்படுவது துப்பாக்கிகள் பீரங்கிகள் இன்றித் தமிழர்களைச் சுற்றிவளைக்கும் ஒரு முயற்சிதான் எனலாமா?

நோர்வேயைத் தவிர வேறெந்தவொரு நாடும் இதுவரை ரணிலின் பொறுப்பை சுட்டிக்காட்டவில்லை என்பது இங்கு முக்கியமாக கவனிக்கப்பட வேண்டியது.

அபிவிருத்தி லொத்தர் சபையைப் பறித்ததன் மூலம் சந்திரிகா ரணிலை உள்நாட்டில் பலவீனப்படுத்தியிருக்கலாம். ஆனால் சர்வதேச அளவில் அவர் ரணிலைப்பலப்படுத்தி விட்டிருக்கிறார்.

குறிப்பாக, புலிகளுக்கு விட்டுக்கொடுக்க முடியாத ஒரு நிலையில் ரணில் இருப்பது போன்ற ஒரு தோற்றத்தை நிரூபிக்கும் ஆகப்பிந்திய ஒரு சான்றை சந்திரிகா சர்வதேச சமூகத்துக்கு வழங்கியிருக்கிறார்.

இதன்மூலம் அவர் என்ன செய்ய நினைத்தாரோ அதற்கு நேர் எதிர்மாறான ஒரு விளைவே கிடைத்திருக்கிறது. ரணில் ரோக்கியோவுக்குப் போவதைத் தடுக்க அவரால் முடியவில்லை. மாறாக, சர்வதேச அளவில் ரணிலுக்கு அனுதாபம் அதிகரித்திருக்கிறது. வெள்ளப்பெருக்கும் ரணிலை இரக்கத்துக்குரியவர் ஆக்கியிருக்கிறது.

அரசியலமைப்பு. ரணிலைப் பொறுத்தவரை பிச்சைக்காரனின் புண்போலாகிவிட்டது.

ரோக்கியோவுக்கு புலிகளை அழைத்துச்செல்லத் தேவையான தியாகங்கள் எதையும் செய்யும் நிலையில் அவர் இல்லை.

மொழிக்கவர்ச்சி மிக்க ஆனால் உள்ளடக்கக் கவர்ச்சி ஏதுமற்ற, வழுவழுத்த வார்த்தைகளாலான அவருடைய பேச்சுக்களும் அறிக்கைகளும் கடிதங்களும் அவர் அத்தகைய தியாகங்கள் எதையும் செய்யும் திராணி அற்றவர் என்பதையே காட்டுகின்றன.

கடந்த கிழமை புலிகளால் நிராகரிக்கப்பட்ட அவருடைய யோசனைகளை அனுப்பும் போதே, புலிகளின் பதில் இப்படித்தானிருக்கும் என்று ரணிலுக்கு ஏற்கனவே தெரியுமாம்.

அந்த யோசனைகளின் பின்னால் இந்தியாவின் வற்புறுத்தல்கள் இருந்ததாக நம்பப்படுகிறது. புலிகளை ஏக பிரதிநிதிகளாக அங்கீகரிக்கும் எந்தவொரு இடைக்கால ஏற்பாட்டிற்கும் இந்தியா தடைபோடுவதாகக் கூறப்படுகிறது.

இந்நிலையில் ரணில் விக்கிரமசிங்க எல்லாருக்கும் பயந்து எல்லாருக்கும் சிரித்து எல்லாரையும் சமாளித்து அரசியல் செய்ய முயல்வது என்பது கடைசியில் இச்சிறுதீவை பேரரசுகளின் குத்துச் சண்டைக் களமாக மாற்றுவதில் தான் கொண்டு போய்விடும்.

இப்பொழுதுள்ள நிலமைகளின்படி - அதாவது இந்தியாவுக்கு தெரிவுகள் மிகக் குறைந்த ஒரு பின்னணியில் - கொழும்பில் உள்ள சிங்களத் தலைவர்களுக்கு இரண்டே இரண்டு தெரிவுகள்தான் உண்டு.

ஒன்று, தலைவர்கள் தாங்கள் தியாகம் செய்வது.

மற்றது, மக்களையும் சிப்பாய்களையும் தியாகம் செய்யவைப்பது. தலைவர்கள் தாங்கள் தியாகம் செய்வது என்பது, சமாதானத்துக்காக சில துணிச்சலான முடிவுகளை எடுப்பதன் மூலம் தமது கட்சியின் நலன்களை பலியிடத் தயாராக இருக்க வேண்டும்.

உலகில் இதுவரையிலுமான உதாரணங்களின்படி, தீர்க்க தரிசனத்துடன் முடிவுகளை எடுத்த தலைவர்கள் பெரும்பாலும் அவர்களுடைய சொந்த இனத்திலிருந்து வந்த அதிதீவிரவாதிகளாலேயே அழிக்கப்பட்டிருக்கிறார்கள். நிச்சயமாக எதிரிகளால் அல்ல.

இந்தியாவில் காந்தியும் இஸ்ரேலில் றாபினும் இப்படித் தான் கொல்லப்பட்டார்கள்.

இதையெல்லாம் இங்கே எழுதுவதன் அர்த்தம், ரணில் விக்கிரமசிங்க சமாதானத்துக்கான தற்கொலைப் படையொன்றை அமைத்து அதன் தளபதியாக வேண்டும் என்ற அர்த்தத்தில் அல்ல.

அவர் ஆகக் குறைந்த பட்சம் சிலவிசயங்களையாவது தியாகம் செய்யாவிட்டால் சமாதானத்தை அதன் அடுத்தடுத்த கட்டங்களுக்கு அசைக்க முடியாது என்ற அர்த்தத்திலேயே.

இல்லையென்றால், முன்சொன்ன இரண்டாவது தெரிவின்படி அவர் யுத்தத்தைத் தொடங்கலாம். அதில் சிப்பாய்களையும் சனங்களையும் பலியிடுவதன் மூலம் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளலாம்.

இதைத்தான் அவருடைய மாமனார் செய்தார், பிறேமதாசாவும் செய்தார், சந்திரிகாவும் செய்தார்.

ஆனால் இந்தத் தெரிவிலும் ஆபத்துக்கள் உண்டு. நீண்டகாலத்துக்கு சிப்பாய்களின் தியாகங்களில் தொங்கிக் கொண்டிருக்க முடியாது. ஒரு கட்டத்தில் சிங்களவர்களுக்கு யுத்தம் சலிக்கும். அப்பொழுது சமாதானத்தை ஆதரிக்கும் கட்சியே அவர்களின் அபிமானத்தைப் பெறும். எனவே யுத்தம் வந்தால் அடுத்த தேர்தலில் ரணில் இப்பொழுது பெற்ற அதே வெற்றிகளை பெறுவதற்கான வாய்ப்புகள் குறைந்துவிடும்.

அதோடு, இங்கே முக்கியமாக ஒன்றைக் கவனிக்க வேண்டும். இலங்கைத்தீவில் இப்பொழுது இரண்டு அதிகார மையங்கள் இருப்பதற்கு அரசியல் அமைப்பு மட்டும் காரணம் அல்ல. ஈழப்போரும் காரணம் தான்.

எவ்வாறெனில் -யுத்தத்தால் சலித்திருந்த சிங்கள மக்களுக்கு சமாதானத்தை வாக்களித்து சந்திரிகா பதவிக்கு வந்தார். ஆனால் அவரால் சமாதானத்தை வளர்த்துச் செல்ல முடியவில்லை. அதாவது அவர் தியாகங்கள் செய்யத்தயாராக இருக்கவில்லை. எனவே சமாதானத்தை முறித்து "சமாதா னத்துக்கான யுத்தம்" தொடங்கியது. இந்த யுத்தமும் ஒரு நாள் சலிக்கும் நிலை வந்தது. அப்பொழுது வந்த தேர்தலில் சிங்களவர்கள் சமாதானத்தை வாக்களித்து ரணிலைத் தெரிவுசெய்தார்கள்.

முன்பு சமாதானத்தை வாக்களித்து வெற்றிபெற்ற சந்திரிகாவுக்கும், பின்பு சமாதானத்தை வாக்களித்து வெற்றி பெற்ற ரணிலுக்கும் இடையிலான அதிகாரப்போட்டியே இப்பொழுதுள்ள கொழும்பு அரசியல். இதில் உள்ள பயங்கரம் என்னவென்றால் - முன்பு சமாதானத்தை வாக்களித்த சந்திரிகாவுக்கும் இப்பொழுது சமாதானத்தை வாக்களித்த ரணிலுக்கும் இடையிலான போட்டிக்குள் சிக்கியிருப்பதும் சமாதானம் என்பதுதான்.

எனவே, ரணிலின் முன்னால் இருக்கும் தெரிவுகள் இரண்டுதான். ஒன்றில் தான் தியாகம் செய்வது அல்லது சிப்பாய்களைத் தியாகம்செய்ய விடுவது.

யுத்தம் என்று தொடங்கி விட்டால் இருபத்தியோராம் நூற்றாண்டின் இனவாதத்துக்கு தலைமைதாங்குவதைத் தவிர வேறெந்தத் தெரிவும் அவருக்கில்லை.

சர்வதேச பின்பலம் கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் பலியிடப்படுவது சிப்பாய்களும் அப்பாவிச் சனங்களும் தான்.

அந்த யுத்தமும் ஒரு நாள் சலிக்கும்.

பிறகுமொரு சமாதானம் வரும்.

நிச்சயமாக, அதில் ரணில் விக்கிரமசிங்க கதாநாயகனாக இருக்கப்போவதில்லை. ■

# யுத்தம் இன்னும் நின்றுபோகவில்லை

கொழும்பு தாஜ்சமுத்திரா ஹோட்டலில் ஆசிய தாராள சிந்தனாவாதிகள், சனநாயகவாதிகள் பேரவையின் மாநாடு சென்றவாரம் நிகழ்ந்தபோது அதில் உரையாற்றிய பிரதமர் ஷஷகோரிக் கைவிடுவது ஒரு விடயம். அதனை நிறைவேற்றுவது சுலபமாக்க மேற்கொள்ளக்



கூடியதல்ல. பொறுப்புவாய்ந்த அரசாங்கம் என்ற வகையில்· நாட்டின் சட்டவிதிகளுககுட்பட்டே நாம் செயற்பட வேண்டியிருக்கிறது" என்றார்.

தென்னிலங்கை ஊடகங்கள் இன்று அதிகம் பிரஸ்தாபிக்கும் அரசியல் விடயம் இடைக்கால நிர்வாகம் அல்லது அதற்கு மாற்றீடான ஒன்று அரசியல் யாப்பிற்கு வெளியில் எப்படிச் சாத்தியம் என்பதாகவே

> **சிங்கள மக்களின் நலன்களுக்காக தமிழ்மக்களைப் பலிகொள்ளத் தக்க ஆயுதமாக அரசியல் யாப்பையே சிங்கள ஆட்சியாளர்கள் பயன்படுத்தி வந்திருக்கிறார்கள். எனவே தமிழ் மக்களுடனான யுத்தத்தில் அரசியல் யாப்பென்பது ஒரு வலிமைமிக்க போராயுதம். அது ஒரு பிரமாஸ்தரம்.**

இருக்கிறது.

இது குறித்து என்னிடம் இவர்களை நோக்கிச் சில கேள்விகள் இருக்கின்றன.

அரசியல் யாப்பிற்கு வெளியில் நீங்கள் சிந்திக்க முடியாமல் சட்டம் என்ற மகா புனிதத்திற்கு நீங்கள் கட்டுப்பட்டவர்கள் என்கிறீர்கள் அது சரிதானே என்று தலையாட்ட ஒரு தரப்பும் இருக்கத்தான் செய்கிறது.

அப்படியானால் ரணில் விக்கிரமசிங்க சமாதானப் பேச்சிற்கு வரும் போது அரசியல் தீர்வொன்றிற்காக தன்னால் அரசியல்யாப்பு விதிகளுக்கு அமைவாகவா அந்த அரசியலமைப்பை மாற்றியமைக்க முடியும் என்று நம்பிச் சமாதானத்துக்கு வந்தார்? சமாதானத்தைப்போற்றி வேத சுலோகம் எழுப்பிய ஊடகங்கள் அரசியல் யாப்பை மாற்றிவிடக்கூடய சூழல் இருக்கிறதென்றா நம்பின?

ஆளும் கட்சியோ அல்லது அதற்கு ஆலோசனை வழங்க வல்லவர்களோ/ வல்லவைகளோ அரசியல் குருடர்களாக இருந்திருக்க நியாயமில்லையே.

அப்படியாயின், அரசியல் யாப்புத் திருத்தம் தேவையில்லாமலேயே தமிழர்களுக்குத் தீர்வளிக்கக்கூடிய அதுவும் புலிகளுடன் பேசித்தீர்வளிக்கக்கூடிய ஒரு தீர்வுத்திட்டம் வைத்திருக்கிறீர்களா? ஆயின் ஒருமுறை முன்னாள் சனாதிபதி ஆர். பிறேமதாசா பிரதமமந்திரியாக இருந்தபோது ஒரு சந்தர்ப்பத்தில் கூறியதுபோன்று 'தமிழர்களின் பிரச்சினைக்கு கிராமோதைய சபை தான் பொருத்தமான தீர்வு' என்று மீளவும் நம்பிவிட்டீர்களா?

அதுவும் இல்லையென்றால் பேச்சை ஒரு கண்ணாம்மூஞ்சி விளையாட்டாக எடுத்து ஆரியக்கூத்தாடிக் கொண்டே காரியத்தைச்சாதிக்கலாம் என்று நம்பிவிட்டீர்களா?

இராணுவத் தோல்வி, பொருளாதாரப் பின்னடைவு எதிர்த்தரப்பு சனாதிபதிப் பதவியில் தொக்கியிருக்கும் நிலைமை இதையெல்லாம் பார்த்தால் நீங்கள் பேச்சை எந்த அர்த்தத்தில் விசுவாசித்தீர்கள் என்று நாங்கள் நம்பட்டும்.

அரசியல் யாப்பை மீறமுடியாது என்ற வியாக்கியானங்களைத் தமிழ் மக்களை நோக்கித்தருபவர்களிடம் தமிழ் மக்களின் நோக்கு நிலையில் அரசியல்யாப்பை விளக்கவேண்டியிருக்கிறது.

வெள்ளையர்கள் இத்தீவுக்கு வரும்போது இத்தீவில் தமிழர்களுக்கென்று ஒரு தனியான இராட்சியம் இருந்தது , தமிழர்களுக்கென்று தெளிவான ஒரு தாயக பூமியும் இருந்தது. சர்வதேச அரசியலில் நிகழ்ந்த மாற்றத்தினால் பிரித்தானியர்கள் இத்தீவை விட்டுச்செல்லத்தீர்மானித்த போது இருதரப்பு பரஸ்பர நலன்களுக்கேற்ப டி.எஸ் சேனநாயக்கா- சோல்பரி இரகசிய உடன்பாட்டின்படி இலங்கை ஒரு ஒற்றையாட்சி நாடாக இருக்கவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

ஒற்றையாட்சி என்ற சொல்லுக்குள் சிங்கள மனப்பாங்கில் ஒரு போதை இருக்கிறது. அந்தச்சொல்லிற்குள் தான் நாட்டைப் பிளவுபடுத்த முடியாத மாய மந்திரம் இருப்பதாக அவர்கள் நம்பினார்கள் அல்லது நம்புவிக்கப்பட்டார்கள்.

தமிழ்மக்களை ஒடுக்கவேண்டும் அல்லது ஒடுக்குகிறோம் இத்தீவைத் தமதாக்கவேண்டும் அல்லது தமதாக்க முனைகிறோம் என்று அவர்கள் உணரும் போதெல்லாம் இதைப்பிளவுபடுத்த முடியாத ஒரு மாய மந்திரம் தேவையென அவர்கள் எண்ணுகிறார்கள். ஒற்றையாட்சி என்ற சொல்லுக்குள் அந்த மாயசக்தி இருப்பதாக நம்புகிறார்கள்.


நாட்டின் இறைமையை சோல்பரியின் கோரிக்கைக்கு விட்டுக்கொடுக்க அவர்கள் கூசவில்லை. அதற்கு நிகராக ஒற்றையாட்சி அரசியல் யாப்பொன்றை கேட்டுப்பெற்றுக்கொள்வதுதகும் என்று எண்ணினார்கள். அது கிடைத்தபோது சுக்கிராச்சாரியாருக்குப் பணிவிடை செய்து அவரை மகிழ்வித்து சிரஞ்சீவி மந்திரத்தைப் பெற்றுவிட்ட சந்தோசிப்பு அவர்களுக்கு.

அரசியல் யாப்பை சோல்பரி உருவாக்கியபோது ஒற்றையாட்சிக்குள் செனற்சபை, பிரதிநிதிகள் சபையென இரு சபைகளை வைத்தார். செனற்சபையை அவர் உருவாக்கியதன் நோக்கம் சிறுபான்மையின மக்கள் தமக்கு அநீதி இழைக்கப்படும் போது குறைந்த பட்சம் தம்மீது கவனத்தை ஈர்க்கக் கூடியவாறு அல்லது குரல்கொடுக்கக் கூடியவாறு ஒரு மேடையாகவேனும் இதைப் பயன்படுத்தமுடியும் என்று நம்பியதும் ஒரு காரணம் என்று கூறப்படுகிறது.

1970ஆம் ஆண்டு சிறிமா மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் ஆட்சிக்கு வந்தபோது அரசியல்யாப்பை மாற்றி எழுத உத்தரவிட்டிருந்தும் கூட அது தயாராக முன்னர் உடனடியாகவே செனற்சபையைக் கலைத்தார். இதில்காட்டப்பட்ட அவசரத்தின் மூலம் சிறுபான்மையோர் குரல் தரவேனும் ஒரு வழியிருப்பதை விரும்பாமல் அதை அடைத்து ஒற்றையாட்சியை மேலும் உறுதிப்படுத்த விளைந்த சிங்கள மனோபாவத்தை விளங்கமுடியும்.

1972ஆம் ஆண்டு அரசியல் யாப்பு சிங்கள இனத்தவர் இலங்கையின் முதற் பிரஜை என்றது. சிங்கள மொழி அரச மொழியாக அரசியல்யாப்பு அந்தஸ்த்தைப் பெற்றது. செனற்சபையை நீக்கி தேசிய அரசுப் பேரவை என்றது. ஒற்றையாட்சிக்குள் ஒரு இனம் ஒருமொழி ஒருசபை கொண்டநாடாக அது உருவாக்கியது.

மேலும் அதுவரையிருந்த அரசசேவை ஆணைக்குழு அரசசேவை ஆலோசனைக் குழுவாகமாற்றப்பட்டது. அரச நிர்வாகங்களில் இருந்து தமிழர்களை அப்புறப்படுத்தும் உள்னோக்கம் அதற்கு இருந்தது. ஆணைக் குழுவின் அதிகாரியாக தமிழர் ஒருவர் வரும் பட்சத்தில் அரசசேவையில் தமிழர்களே நிரம்பியிருக்கும் வாய்ப்பு அன்று இருந்தது. எனவே அரசசேவையில் அதிகாரமட்டத்தில் இருந்த தமிழர்களை அப்புறப்படுத்தவும் இனி நியமிக்காதிருக்கவும் வேண்டி இது ஆலோசனைக் குழுவாக மாற்றப்பட்டது. இதன்மூலம் நியமனத்துக்கான முடிவெடுக்கும் அதிகாரம் அமைச்சிடம் விடப்பட்டது.



(நன்றி ஐலண்ட் 1989)

இதனால் தமிழர் ஒருவர் உயர்அதிகாரத்திற்கு வரவேண்டுமாயின் அது முழுக்கமுழுக்க சிங்கள ஆட்சியாளரின் தயவில் தங்கிநிற்க வேண்டியதாயிற்று. உயர் பதவிக்கு வருவதற்காக கல்வித் தகைமையோ செயல்திறனோ அனுபவமோ தேவை என்பதற்கு மாறாக சிங்கள ஆட்சியாளர்களிடம் கீழ்ப்பணிவையும் விசுவாசத்தையும் நிருபிக்க வேண்டியதாயிற்று எனவே உயர்பதவியில் அமர்பவர்கள் தமிழ் மக்களுக்கு எதிராகச் செயல்படவேண்டியவர்களாயினர். இதை அரசியல் யாப்பு மூலம் தோற்றுவிக்க முடிந்தது.

ஒற்றை ஆட்சியின் வலிமையில் திருப்தியுறாத சிங்கள மனோபாவத்தின் செயற்பாட்டை ஐம்பது வருடகால வரலாறெங்கனும் நாம் காணலாம்.

மலையக மக்களின் வாக்குரிமையை பறித்ததன் மூலமும் தேர்தல் தொகுதிகளை மீள் ஒழுங்கு படுத்தியதன் மூலமும் இன்னபிறவழிகள் மூலமும் தமிழ்மக்களின் பிரதிநிதித்துவம் பாராளுமன்றில் குறைக்கப்பட்டது.

1978ஆம் ஆண்டு அரசியல் யாப்பு இவை யாவற்றையும் உள்ளடக்கி ஒற்றையாட்சியின் தேவைக்கான சிங்கள மக்களின் கனவை சர்வநிச்சயமாய் உறுதி செய்ததோடு இதுவரை அதில் இருந்த சந்தேகங்களையும் அது களைந்தெடுத்தது.

1978ஆம் ஆண்டு அரசியல் யாப்பில் இலங்கையின் முதன் மதம் பௌத்தம் என்றும் அதனைப்பேணிப் பாதுகாப்பதும் போஷிப்பதும் ஆட்சியாளரின் கடமை என்றும் ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கிறது. இதன்படி பௌத்த விகாரையோ கலாச்சார நிலையத்தையோ வேறுமதத்தவர் வாழும் அவர்களின் தாயகப் பிரதேசத்தில் நிறுவ முடியும். மட்டுமல்ல அதற்கான நிதியை அரசாங்கம் வளங்க வேண்டும். அரசாங்கத்தின் நிதி என்பது மக்களின் வரிப்பணம்தான். ஆயின் சைவனும் ஸ்லாமியனும் கிறீஸ்தவனும் பௌத்தத்தின் வளர்ச்சிக்காக வரி வளங்க வேண்டியவனாகிறான். ஸ்லாமியன் பிறமதத்தின் வளர்ச்சிக்கு உதவுவது அவனது மத ஒழுக்கப்படி மதச்சடங்குகளில் இருந்து ஒதுக்கப்படத்தக்க (கறாம்) குற்றத்துக் குரியது. அவனும்இதற்கு உட்பட்டே ஆகவேண்டியிருக்கிறது.

1978ஆம் ஆண்டு அரசியல்யாப்பு தமிழர்களின் உரிமையை நசுக்கி சிங்கள மக்களின் அரசியல் கனவுகளை நிறை வேற்றி அதைப்பாதுகாப்பதற்கான அசைக்க வியலாத அரண்களை எழுப்பியது என்பது ஒருபுறம். மறுபுறமோ தமிழர்கள் அதற்கெதிராக குரல் எழுப்பமுயன்றால் அதனை ஈவிரக்கமின்றி வன்முறையால் முறியடிக்கவும் மனித உரிமைத் தத்துவங்களையெல்லாம் சனநாயக அர்த்தப்படுத்தலோடு மீறவும் அரசபயங்கரவாதத்தினை சட்டத்தின் பெயரால் கட்டவிழ்த்து விடவும் வல்லதான அதிகாரத்தை 'பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டம்' என்ற பெயரின்கீழ் அரசியல் யாப்பில் உருவாக்கினார் ஜெயவர்த்தனா.

ஜெயவர்த்தனா சிங்களவர்க்கு சர்வவல்லமை பொருந்திய ஒற்றையாட்சி அரசியல்யாப்பை உருவாக்கியமை மட்டுமல்ல அதை நெகிழ்ச்சியுறாதவாறும் இலங்கை அரசியல் யதார்த்தத்தில் அதை மாற்றியமைக்க முடியாதவாறு விகிதாசாரத் தேர்தல் முறையைப்புகுத்தி ஏகநிச்சயமான அரசியல் யாப்பாக அதையவர் உருவாக்கிவிட்டார்.

இலங்கையின் அரசில் யாப்பு ப்பற்றி சிந்திக்கப்பட்ட போதெல்லாம் முதன்மை பெறுவது ஒற்றையாட்சியை எப்படி வலிமைபடுத்துவது என்பதைப் பற்றியே. ஒற்றையாட்சியை வலிமைப்படுத்துவது என்பது தமிழர்களை எப்படி ஓரங்கட்டுவது என்பதாகவே இருந்தது.

**கு.கவியழகன்**

யுத்தத்தின் கொடூரம் உயிர்களைப் பலிகொள்வது என்பது மட்டுமல்ல அதைவிடக் கொடூரம் வாழ்வையே பலிகொள்வதுதான். இலங்கையின் அரசியல் யாப்புக்கள் தமிழ் மக்களின் வாழ்வைப் பலிகொண்டன் அதற்காகவே உருவாக்கப்பட்டன. எனவே இலங்கை அரசியல் யாப்புக்கள் இடையுறாது தமிழ் மக்கள் மீது யுத்தத்தையே நிகழ்த்தி வந்திருக்கின்றன.

சிங்கள மக்களின் நலன்களுக்காக தமிழ்மக்களைப் பலிகொள்ளத்தக்க ஆயுதமாக அரசியல் யாப்பையே சிங்கள ஆட்சியாளர்கள் பயன்படுத்தி வந்திருக்கிறார்கள்.எனவே தமிழ்மக்களுடனான யுத்தத்தில் அரசியல் யாப்பென்பது ஒரு வலிமைமிக்க போராயுதம். அது ஒரு பிரமாஸ்தரம்.

சமாதானம் என்பது யுத்தத்திற்கு எதிர்முனையில் இருந்து சிந்திக்க வேண்டியது. ஆயின் சமாதானம் அரசியல் யாப்புக்கும் எதிர்முனையில் நின்று சிந்திக்க வேண்டியது.

சமாதானம் ஆயுதங்களை மௌனப்படுத்திவிட்டு பேசப்படவேண்டியது. எனவே அரசியல் யாப்பும் இங்கு மௌனிக்கப்படவைக்க வேண்டியிருக்கிறது.

சமாதானப் பேச்சிற்கு யுத்தம் இடைநிறுத்தப்படுவது அதன் சாதகச் சூழ்நிலைக்கு முன் நிபந்தனையானது. எனவே அரசியல் யாப்பு இடை நிறுத்தப்படுவதும் பேச்சின் சாதகச்சூழலுக்கு ஒரு முன் நிபந்தனைதான்.

அனுபவம் என்ற வளைவை அடித்தளமாய்க் கொண்டு, கட்டடம் கட்டவேண்டும். - ஹென்ரிப்ரூக்ஸ் ஆடம்ஸ்

# “மீண்டும் வேதாளம் முருங்கை மரம் ஏறுகிறதா...?”

**தமிழ் மக்கள் ஏ – 9 வீதியைப் புனரமைப்பதற்காகவா போராடினார்கள். ரணிலின் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசின் நேர்மையும் துணிவும் இப்போது சாதாரண சனங்களின் கிண்டலுக்கு உள்ளாகிவிட்டது.**



ரோக்கியோ மாநாட்டிற்கான நாட்கள் நெருங்கிக்கொண்டிருக்கின்றன. ஆனால் இதில் புலிகள் பங்கு கொள்வதற்கான ஏதுநிலைகள் எதனையும் அரசு செய்துள்ளதாகத் தெரியவில்லை.

இந்நிலையில் ரணில் தமிழ் மக்களிற்கான பங்களிப்பு தொடர்பாக இன்னமும் என்ன நினைத்துக் கொண்டிருக்கின்றார் என்பது அவர் புலிகளின் இடைக்கால நிர்வாகம் தொடர்பான கோரிக்கைக்கு வைத்திருக்கும் பதிலிலிருந்தும் அதனை புலிகள் நிராகரித்த போது அதற்கு இரண்டாவது விளக்கம் அளித்ததிலிருந்தும் புரிந்து கொள்ளக்கூடியதாக இருக்கின்றது.

இதே போன்று புலிகளும் தமிழ் மக்களிற்கான பங்களிப்புத் தொடர்பாக எதனை விரும்புகின்றார்கள் என்பதனையும் தெளிவாக்கிவிட்டார்கள்.

இப்போது இந்த இழுபறிக்குள் சாதாரண சனங்கள் என்ன நினைக்கிறார்கள்.

வழமையாக இலங்கைத் தீவில் புதிதாக ஒருவரின் தலைமையில் ஆட்சியைக்கைப்பற்றுவதும் அதன் பின்னர் புலிகளோடு சிலமாதங்களிற்கு பேச்சுவார்த்தை என்ற கோதாவில் பேசுவதும் பின்னர் அவர்கள் தங்களை ஒரு நிலைக்கு பலப்படுத்திக் கொண்டு மோதலைத் தொடங்க தூண்டி விடுவதும் இது தான் இலங்கைத் தீவில் ஆட்சிப்பொறுப்பையேற்ற எல்லா சனாதிபதிகளும், பிரதமர்களும் கையாளும் உத்தி.

இந்த உத்தியை சர்வ தேச சமூகம் புரிந்து கொண்டதோ இல்லையோ தமிழ் மக்கள் தெளிவாகவே புரிந்து வைத்திருக்கின்றனர்.

அரசு தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்காக, அன்றிலிருந்து இன்றுவரை வைத்திருக்கும் பாதுகாப்பு கவசங்கள் ஒரே மாதிரியானவை.

அரசியலமைப்பு

எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பு

உச்சநீதிமன்றின் தீர்ப்பு

இதனை தேவையான பொழுது தேவையான இடத்தில் பயன்படுத்திக் கொள்வார்கள்.

ஆனால் தமிழ் மக்கள் மீண்டும் ஒரு முறை ஏமாற்றப்பட்டு போருக்கு முகம் கொடுத்து தமது இருப்பை உறுதி செய்து கொள்ள வேண்டிய நிலைக்கு தள்ளப் படுவார்கள்.

இதற்காகவே புலிகள் தமிழ் மக்களிற்கான தமது ஒரே தீர்விலிருந்து இறங்கிவராமல் இறுகப்பற்றியபடி இருந்தனர்.

எந்த தீர்வையுமே தமிழ் மக்களிற்கான திட்டமாக அரசு தரப்போவதில்லை என்பது தான் தமிழ் மக்கள் கற்ற பாடங்களாக இருந்தது.

இந்த முறைமட்டும் ரணில் என்ன செய்து விட நினைக்கிறார். எல்லா சிங்கள தலைவர்களையும் போலவே அவரும் நடந்து கொள்ள முயல்கிறார்.

**சிறி-இந்திரகுமார்**

ஆனால் புலிகளோ எல்லாவகையிலும் ரணில் ஒரு தீர்வை எட்டுவதற்கு ஏற்ற நிலையில் தமது விட்டுக்கொடுப்புகளை மேற்கொண்டார்கள்.

ஆனால் இவையாவற்றையும் ரணில் ஒரு தீர்வை நோக்கி நகர்வதற்கு ஏற்றவாறு பயன்படுத்தாமல் தமது அரசிற்கு தேவையான பொருண்மிய மீட்சிக்கான நிதியை நோக்கி நகர்வதற்கே பயன்படுத்த முனைகிறார்.

சாதாரண சனங்கள் இப்போது தாங்கள் போரின் மூலம் பெற்றதை சமாதானத்தில் இழக்க வேண்டி ஏற்படுகின்றது எனப் பேசத் தொடங்கிவிட்டார்கள்.

புலிகள் ஆரம்பத்திலிருந்தே இறுக்கமாக இருந்திருக்க வேண்டும் சாதாரணமான ஒரு கோரிக்கையினையே நிறைவு செய்யமுடியாது இவர்களிற்கு அதிக விட்டுக் கொடுப்புக்களை செய்திருக்கத் தேவையில்லை என கூறத்தொடங்கிவிட்டார்கள்.

இந்த நிலையில் சமாதானத்தின் பெயரால் தமிழ் மக்கள் எதனைப் பெற்றுவிட்டார்கள் சமாதானம் எதனையுமே தர வில்லை.

அமைச்சர் பீரிஸ் ஏ-9 வீதி புனரமைக்கப்படுவது ஒரு சமாதானம் போலவே பேசியிருக்கின்றார். அது தமிழ் மக்களிற்கு வழங்கப்பட்ட பெரிய தொரு சலுகை போலவும் பத்திரிகையாளர்களிடம் தெரிவித்திருக்கிறார்.

தமிழ் மக்கள் ஏ-9 வீதியைப்புனரமைப்பதற்காகவா போராடினார்கள். ரணிலின் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசின் நேர்மையும் துணிவும் இப்போது சாதாரண சனங்களின் கிண்டலுக்கு உள்ளாகிவிட்டது.

இவ்வளவிற்கு பிறகும் புலிகளிடமிருந்து நெகிழ்ச்சிப் போக்கை எதிர்பார்ப்பதாக கூறுவது சமாதானத்தின் எதிர்காலத்தையே கேள்விக்குறிக்குள்ளாக்குகின்றது.

ரணில் தன்னை ஒரு கனவான் போல காட்டிக் கொள்வதும் புலிகள் கோரும் கேள்விகளுக்கோ அல்லது விடயத்தையோ தொடாது வேறு விடயங்களைப் பற்றி பேசி நிலைமையை சமாளித்துவிட முயல்கின்றார்.

இதன் மூலம் தனக்கு எதிரான விமர்சனங்களை தவிர்த்துக் கொள்ளப்பார்க்கிறார்.

இது பிரச்சினையை இன்னும் தீவிரமாக்க உதவுமேயொழிய பிரச்சினையைத் தணித்துக் கொள்ள உதவாது.

அரசு அரசியல் யாப்பிற்கமையவே நடந்து கொள்ள முடியும் எனத் தெரிவித்துள்ளமை புலிகளையும் அரசியல் யாப்பிற்கு அமையவே நடந்து கொள்ளவேண்டும் என நினைப்பது போலவே இருக்கின்றது.

புலிகள் சிறிலங்கா அரசின் நாடாளுமன்றத்திலும் அதன் அரசியலமைப்பிலும் முற்று முழுதாக நம்பிக்கை இழந்த பின்பே ஆயுதப்போராட்டத்தை தொடங்கினார்கள் என்பதை மறந்துவிட்டது போல தெரிகிறது.

ரணில் ஒரு முற்போக்காகவும் தற்துணிவோடும் இந்தப் பிரச்சினையைக் கையாளத் தவறியவராக இருந்தால் சமாதானத்தின் தோல்வியின் பங்கில் அவருக்கான பங்கு இருக்கும்.

அரசு எப்போது தன்னுடைய மேலாதிக்க மனநிலையிலிருந்து விடுபடப்போகிறது.

இதற்கான பதிலை அரசு தேடாது போனால் வரலாற்றில் மீண்டும் ஒரு கேள்வி காத்திருக்கும்.

---

# இந்து மாநாட்டில் ஈழத்தமிழரின் வரலாறு குதறப்பட்டது

**ஈழத்தில் – தமிழர்கள் பூர்வீக குடிகள் என்பதையும் – தற்கால மனிதமூதாதையர்களின் தொடர்ச்சியாக ஈழத்தில் வாழ்பவர்கள் எனவும் – இவர்களுக்கான கட்டடக்கலை 2800 ஆண்டுகளுக்கு முன்பதாக அதாவது விஜயன் வருகைக்கு முன்பதாகவே இருந்து வளர்ச்சியடைந்த தனித்துவம் பெற்றது எனவும் – ஈழத்தமிழர்களுக்கு தனித்துவ மன்னராட்சி இருந்தது என்றும் அவர் சான்றுகளுடன் பேசிஅமர்ந்தார்.**

ஈழத்தமிழர்கள் தம் வரலாற்றை நிறுவுவதற்காக சான்றாதாரங்களைத் தேடி நிறுவுவதில் பெரும் பிரயத்தனங்களைச் செலவிட - 2ம் உலக இந்து மாநாட்டில் ஈழத்தமிழர்களின் வரலாறு குதறப்பட்டதை அறிந்தால் வரலாற்றாய்வாளர்கள், ஆர்வலர்கள் ஏங்கித்திணறுவர்.

குதறியது யார் என்றால் பல்கலைக்கழக தமிழ் -வரலாற்றுத்துறை பேராசிரியர் ஒருவரும், கலாநிதி ஒருவரும்தான் -

அரங்கில் இந்து மதத்தோடு பிணைக்கப்பட்டு ஈழத் தமிழர் வரலாறு பற்றிப் பேசப்பட வேண்டும். முதலில் மேடையேறியவர் வரலாற்றுக் கலாநிதி- இவர் வரலாற்றை தொல்லியல் ரீதியாக ஆராய்ந்து நிறுவி வருபவர். இவர் ஈழத்தமிழர் வரலாறு - ஈழத்துக்குரிய தனித்துவமுடையது என்பதை ஆணித்தரமாக நிறுவினார். ஈழத்தமிழர் வரலாறு இந்தியாவின் புலப்பெயர்வு என்ற கருத்தை அவர் ஆதாரங்களுடன் நிராகரித்தார்.

ஈழத்தில் - தமிழர்கள் பூர்வீக குடிகள் என்பதையும் - தற்கால மனிதமூதாதையர்களின் தொடர்ச்சியாக ஈழத்தில் வாழ்பவர்கள் எனவும் - இவர்களுக்கான கட்டடக்கலை 2800 ஆண்டுகளுக்கு முன்பதாக. அதாவது விஜயன் வருகைக்கு முன்பதாகவே இருந்து வளர்ச்சியடைந்த தனித்துவம் பெற்றது எனவும் - ஈழத்தமிழர்களுக்கு தனித்துவ மன்னராட்சி இருந்தது என்றும் அவர் சான்றுகளுடன் பேசி அமர்ந்தார்.

அடுத்ததாக பேராசிரியர் கூறினார், வடஇந்தியாவில் சிந்துவெளியில் பரிணமித்த தமிழர் வாழ்வு அங்கிருந்து தென்னிந்தியாவுக்கு வந்து - தென்னிந்தியாவிலிருந்துதான் ஈழத்துக்கு வந்தது என அவர் அடித்துச் சொன்னார். பேராசிரியரின் சான்றுகள், நூல்கள் மட்டுமே. பேராசிரியர் எழுதிவரும் ஈழத்தமிழர்வரலாறு தழிழகத்தின் தொடர்ச்சியே என்ற கருத்தை ஆதாரமாகக் கொண்டதாகும்.

உண்மையில் அதற்கு சான்றுகள் ஏதுமில்லை. இலங்கையில் மனித மூதாதைகளின் வாழ்வு தமிழர் தாயகத்திலேதான் இருந்தது என்பதும் - முதல்தற்கால சான்றுகள் தமிழர்தாயகத்தில் தான் இருந்தது என்பதும் அறிவியல் பூர்வமாக நிறுவப்பட்ட வரலாறு.

கிளிநொச்சி அக்கராயனில் கண்டறியப்பட்ட பெருங்கற்கால (3000 ஆண்டு தொன்மையாக) சான்றுகள் பற்றி பேராசிரியருக்கு அவற்றைக் கண்டவர்கள் ஆய்வுசெய்ய வருமாறு அழைப்பு விடுத்த போதும் அவர் அதன்மீது அக்கறை செலுத்தவில்லை.

அந்த விடயத்தை ஒரு புறம் வைப்போம் - அது ஒரு துன்பக்கதை.

2ம் உலக இந்து மாநாட்டில் ஈழத்தில் தமிழரின் தொன்மை பகரும் ஈமச்சின்னங்கள் என்ற பெயரில் ஒளிப்படங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

அந்த ஈமச்சின்னங்களில் பெரும்பாலானவை இந்தியாவில் இருந்து தென்னக திராவிட ஈமச்சின்னங்களும் தமிழக - தென்னக திராவிட ஈமச்சின்னங்களுக்கும், ஈழத்தில் ஈமச்சின்னங்களுக்கும் - இடையே வேற்றுமைத்தன்மைகள் இருக்கின்றன.

இத்தனைக்கும் ஈழத்தில் புத்தளம் பொம்பறிப்பு, யாழ்ப்பாணத்தில் ஆனைக்கோட்டை, சந்திராந்தை, வன்னியில் அக்கராயன், பழைய முறிகண்டிக்குளம், பூநகரி உட்பட்டபகுதிகளில் அதிகளவில் ஈமச்சின்னங்கள் 1997ன் பின்னர் கண்டு பிடிக்கப்பட்டு அவற்றின் படங்களும் ஊடகங்களில் வெளியிடப்பட்டன.

ஆனால் அவற்றின் படங்கள் அதாவது தமிழர் தாயகத்துக்குரிய ஈமச்சின்னங்கள் இருக்கத்தக்கதாக - தமிழக - தென்னக ஈழச்சின்னங்களை ஈழத்தமிழருடையவை என பொய் கூறிவைப்பதன் நோக்கம் என்ன - உலகம் முழுவதும் இருந்து - குறிப்பாக தமிழகம் - இந்தியாவிலிருந்து வந்த ஆய்வாளர்கள் இந்த பொய்மையை உணர்ந்தால் - ஈழத் தமிழருக்கு வரலாறு இல்லை எனக்கூறி இகழ்வர்.

பிரபல கல் வெட்டு சாசனவியலாளரான தமிழகத்தின் ஐராவாதம் மகாதேவன் கடல் கொண்டதாக கூறப்படும் முதல் சங்கம் ஈழத்திலேயே இருப்பதாகவும் - அதற்கான சான்றுகள் ஈழத்தில் உள்ளன எனவும் அவற்றை பாதுகாத்து காலம் களிகையில் அதை நிறுவலாம் என்றும் குறிப்பிட்டதை இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

ஆக ஈழத்தமிழரின் சுய தொல்வரலாறு உலக இந்து மாநாட்டில் குதறப்பட்டது. கலாநிதியை விட பேராசிரியரே தகைமையில் உயர்ந்தவர் என்பதால் பேராசிரியர் சொன்னதையே உண்மை என யாவரும் நம்புவர். அவர்களுக்குத் தெரியுமா? காலநிதியுடன் பேராசிரியருக்கிருக்கும் புலமைகள் காட்டம். கடைசியாக முடிவுக்குள் ஒரு விடயம் -

யாழ் கந்தரோடை தொல்லியல் சின்னவளாகத்தை சிங்கள பௌத்தத்தின் இடமாக கூறி அங்கு ஒரு கொட்டகையை அமைத்து புத்தர்சிலையை நிறுவி முகாம் ஒன்றையும் அங்கு சிறிலங்கா இராணுவம் உருவாக்கியது. ‘புராணரஜமகாவிகாரை’ என சிங்களத்திலும், ஆங்கிலத்திலும் பெயர்ப்பலகை நிறுத்தப்பட்டது.

**த.திருநிலவன்**

ஒரு விகாரையையும் அங்கு அமைக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த சூழலில் யாழ்ப்பாணத்தில் எதிர் அறிக்கைகள் விடப்பட்டன. அவ் வேளை ஊடகவியலாளர் ஒருவர் பேராசிரியரை அணுகி நீங்கள் ஒரு மூத்த வரலாற்றுப் பேராசிரியர் நீங்கள் இது பற்றி கூறினால் யாவரும் கருத்திலெடுப்பார்கள் எனக் கேட்டார்.

இதற்குப் பேராசிரியர் பதிலளித்தார்.

தம்பி முதல்லவிகாரையை கட்டட்டும் நாங்கள் அப்ப அடிப்பம். இப்பகட்டமுதலே ஏன் கத்து வான். முதல்ல அவை செயல்ல இறங்கட்டும் அப்ப பாப்பம்.-

# அமெரிக்க கொடியிலிருந்து கற்றுக்கொள்ளுதல்

கடந்த 9.4.2003 அன்று தொலைக் காட்சியில் காட்டப்பட்ட ஈராக்கில் சதாம் ஹுசெய்னின் சிலை நிலத்தில் வீழ்த்தப்படும் நிகழ்வு என்றுமே அழியமுடியாத அளவுக்கு எமது மனதில் பதிந்து விட்டிருக்கிறது.

ஈராக் மீதான போருக்கும் போருக்கு பின்னான ஈராக்குடைய புனர் நிர்மானத்துக்கும் செல வழிக்கப்படப்போகும் மில்லியன் கணக்கான டொலர்கள் அளவினதான முதலீட்டினுடைய பலன் அதுதான். ஆனால் அந்தக் கணத்தினுடைய மகிமையானது அந்தக் கணத்தில் எதையுமே சிந்திக்காமல், சதாமின் சிலையினுடைய முகத்தின் மீது அமெரிக்க கொடியை போர்த்திய மரீன் வீரர் ஒருவருடைய செயலால்

எப்படி பிடிசாம்பலாகப்போனது எதையுமே சிந்திக்காமல். ஆனால் முழுமையாகவே தேசபக்தி இயல்பானதும் தனியொரு முதிர்ச்சியற்ற மரீன் வீரனால் மேற்கொள்ளப்பட்டதுமான அச்செயற்பாடு வருடக்கணக்காக மேற்கொள்ளப்பட்ட இராசதந்திரத்தை வீரயமாக்கிவிட்டது. அமெரிக்காவை முழுமைக்கு குறைவான உற்சாகத்துடன் நோக்கும் ஒவ்வொருநாட்டிலும் அது எச்சரிக்கை மணிகளை ஒலிக்கச் செய்திருக்கும் என்பதில் எந்தச்சந்தேகமுமில்லை.


1994 ம் ஆண்டில் அமெரிக்க மரீன்கள் பரிசை விடுவித்த பொழுது பரிஸ் மக்கள் தாய்கள் பிரியத்துக்குரிய மூவர்ண கொடிகளுடன் அமெரிக்ககொடிகளையும் அசைத்து அவர்களின் பாதையில் பூக்களைத் தூவினார்கள். அமெரிக்க வீரர்கள் குவைத்தையும் பனாமாவையும் விடுவித்தபொழுதும் இதே போன்ற உணர்வலைகளே பொது மக்களால் வெளிக்காட்டப்பட்டன. எனினும் ஈராக் நிலைமை முற்றிலும் வேறுபட்டது.

எது எப்படியாயினும் இதில எமக்கு ஒரு பாடம் இருக்கிறது.

ஈழத்துக்கான போரின் ஆரம்பத்திலிருந்து அடுத்தடுத்து அதிகாரத்துக்கு வந்த அரசுகள், தமிழ்மக்களை புலிகளின் அடக்குமுறையில் இருந்து விடுவிக்கப் போகின்ற மீட்பர்களாகவே தங்களைக் கருதி வந்திருக்கின்றனர். அமெரிக்கா ஈராக்கியர்களை நோக்குவதற்கு ஒப்பானதாக இது இருக்கிறது. சுயநிர்ணயத்துக்கான தமிழ் மக்களின் போராட்டத்தை நாம் ஒரு பயங்கரவாத பிரச்சினையாக (பெருமளவில் அது அப்படித்தான் இருந்தது)வும் சட்ட நடைமுறைப்படுத்தலுக்குட்பட வேண்டிய வியடமாகவுமே நோக்கியுள்ளோம். இது இஸ்லாமிய பயங்கரவாதம் தொடர்பான அமெரிக்க மனப்போக்கை ஒத்ததாகவே இருக்கிறது.

1995ம் ஆண்டு யாழ் கோட்டை சிறிலங்கா இராணுவத்தால் மீட்கப்பட்டபோது, அப்போதைய பிரதிப்பாதுகாப்பமைச்சர் அனுருத்த ரத்வத்த, வடக்குக்கு பறந்து சென்று, சிங்கக் கொடியை ஏற்றுவது பொருத்தமான செயல் என நினைத்தார். அந்த அமெரிக்க மரீனுக்கு இருந்த அதே உரிமை அப்படிச் செய்வதற்கு ரத்வத்தவுக்கும் (உண்மையைச் சொல்லப்போனால் ஒரே இரவில் அவர் லெப். கேணல் பதவியிலிருந்து ஐந்து படிகள் தாண்டி ஜெனரலாக உயர்த்தப்பட்டார்) இருக்கிறது. இறைமையை உறுதிப்படுத்தியதற்கு நாம் கொடுத்திருக்கும் விலை உண்மையில் மிகமிக அதிகமானது.

ஒரு முரண்பாட்டுக்கு பின்னர் ஒரு கொடியை ஏற்றுவது அபாயகரமானது. குறியீட்டு இயல்பான அம்சங்களால் அது நிரம்பி வழிவதோடு, அநேக மனங்களில் அழியாத விதத்தில் செதுக்கப்பட்டு, வருடக்கணக்காக உலுப்பியெடுக்கும் விம்பமாகவும் அது இருக்கிறது. ரத்வத்தையின் அந்த புகழ் கெடுக்கும் செயற்பாடு நினைவுக்கு வந்ததும் தமது இரத்த அழுத்தம் உயர்ந்து செல்வதை உணரும் பல தமிழர்கள் இப்போதும் இருப்பார்கள் என்பதில் எந்தச் சந்தேகமுமில்லை. ரத்வத்தையின் கோணத்திலே வெளிப்படையான ஒரு விடயத்தையே அதன் மூலம் கூறினார். கொள்ளைக்காரர்களால் தவறான முறையில் கைப்பற்றப்பட்ட ஒரு பகுதியிலே அரசின் ஆணை மீள நிலைநிறுத்தப்படுகிறது என்பதே அவ்விடயமாகும். ஆனால், தமிழ் மக்களின் சுயகௌரவத்தின் மீது இந்த அவமரியாதை ஏற்படுத்திய தாக்கம் கணிக்க முடியாததாக இருந்தது. எதிர்வரவிருந்த பல வருடங்களுக்கு சந்திரிகா குமாரணதுங்கவை தமிழ் மக்களிடமிருந்து அந்நியப்படுத்தி வைக்கப்போகும் செயலாகவும் அது இருந்தது.



பலருக்கு கவலையூட்டும் விதத்திலே சதாமை வீழ்த்துவதற்கான ஆங்கிலேய அமெரிக்கக் கூட்டை நாம் ஆதரித்தோம். பாதுகாப்புக் கவுண்சிலின் ஒப்புதலை பெற்றால் நல்லது என்று நினைத்தோம். பரிசினதும் மொஸ்கோவினதும் ஒப்புதலை பெறுவதில் புஷ் சிறிது காலத்தை செலவழித்திருந்தால் தனது முயற்சியை மிகச்சிறப்பாக நிறைவேற்றியிருக்கலாம் என்று நினைத்தோம்.

கடந்தவாரம் எமக்கு கிடைத்த பாடமானது சிறிலங்காவின் தமிழர்கள் தாங்கள் பிறந்த நாட்டிலேயே தாங்கள் பாதுகாப்பாக இல்லை என்று உணரவைத்த அவமரியாதைகளின் தொடர் இன்னமும் முடிவுக்கு வந்தபாடாக இல்லை என்பதை எமக்கு உணர்த்தியிருக்க வேண்டும்.

அரசியலமைப்பு சபை கலைக்கப்பட்ட திலிருந்து சிங்களம் மட்டும் தேசிய மொழியாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, அடுத்தடுத்து வந்த இரு குடியரசு அரசியலமைப்புக்களினால், சமயச்சார்பற்ற ஆட்சிமுறை கைவிடப்பட்டதுவரை, எமது தமிழ் சகோதரர்களை அந்நியப்படுத்த எம்மால் முடிந்த அனைத்து வழிகளிலும் முயன்றிருக்கிறோம். காலில் மிதிபட தமிழ் மக்கள் மறுத்ததற்கும், கோழிக்குஞ்சுகளின் கழுத்து திருகப்படுவதற்கும் ஒப்பாக தமது கழுத்து திருகப்படுவதற்கு விருப்பற்று இருந்தமைக்கும் நன்றி சொல்ல, நாங்கள் எங்கள் தவறுகளை நினைத்து வருந்த இரண்டு தசாப்தங்கள் எங்களுக்கு கிடைக்கும்படி செய்திருக்கிறார்கள்.

சுதந்திரத்துக்குப் பின்னான சிறிலங்காவின் கதையாக "அவசர அவசரமாக தவறு செய்துவிட்டு ஆறுதலாக வருந்துதல" இருக்கிறது. தமிழர்களுக்கு ஏற்படுத்தப்பட்ட அவமரியாதைகளின், ஒன்று திரள்வானது (இவைகளுள் அநேகமானவற்றை தமிழர்களே வலிந்து பெற்றார்கள் என்றுதான் கூற வேண்டும்) வெறுப்பையும் கசப்பையுமே உருவாக்கிவிட்டிருக்கிறது. இவற்றை காலம்தான் குணப்படுத்தவேண்டும்.

இதற்கான காலத்தைப் பெற்றுக் கொடுத்து குணமாக்கல் செய்முறை நிகழச்செய்வதையே ரணில் ஒரு சூதாட்டமாக ஏற்றுள்ளார்.

துன்பமான விதத்திலே, தங்களை முன்னர் ஒடுக்குறைக்கு உட்படுத்தியவர்கள் என்று அவர்கள் கருதுபவர்கள் மீது, அதாவது, எங்கள் மீது, அவமரியாதைகளை அள்ளிவீசும் வாய்ப்பு இப்போது புலிகளுடையதாக இருக்கிறது.

நீண்ட காலம் இழுபடக் கூடிய கசப்பான போர் ஒன்றுக்குள் எமது நாட்டை மீண்டும் இழுத்து விடாமல், எமது தன் முனைப்புகள் மீது விழும் அடிகளை ஏற்றுக் கொள்வது எமக்கு நன்மை பயப்பதாகவே இருக்கும்.

தீவிரவாதம் அமைதியைத் தராது. இராணுவபலமும் அதனைத் தராது. இஸ்ரேலை எடுத்துப் பாருங்கள். ஆயிரம் வருடங்கள் அலைவு வாழ்க்கை. பாதுகாப்பான ஒரு நாடு இல்லை. ஒவ்வொரு வாரமும் கொன்று கொண்டும் கொல்லப்பட்டுக் கொண்டும்... இருக்கிறார்கள். இந்த கிரகத்திலேயே ஆகப்பழமையான மரபுகளின் பாதுகாவலர்கள்... இருந்தும்... அமைதி இல்லை.

ரணிலினுடைய காலம் என்ற மாபெரும் அனைத்து ரோக நிவாரணி சரியான ஒன்றாகவே தோன்றுகிறது. நாம் ஒருவர் மற்றவர் மீது ஏற்படுத்தியிருக்கும் ரணங்கள் குணமாக காலம் எடுக்கும்.

தேசபக்தி கொண்ட அந்த இளம் மரீன் வீரன் அமெரிக்கக் கொடியை சதாம் மீது போர்த்துவது கண்டு ரொனிபிளேயரும் புஷ்சும் தங்கள் இருக்கைகளில் இருந்தபடி குறுகிப்போயிருப்பார்கள். அதை அகற்றும்படி கட்டளையிட ஒரே நேரத்தில் தொலைபேசியை தூக்கியிருப்பார்கள். அந்தக் கொடி 85 செக்கன்களுக்கே இருந்தது. யாரையுமே கொல்லாமல் அன்பை வெறுப்பாக மாற்றுவதற்கு அது போதுமானதாகும்.

அப்படியானால் 1958 இல், ஒரே இரவில் தமிழ் மக்கள் மீது சிங்கள சிறி வாகன இலக்கத் தகடுகள் வலிந்து திணிக்கப்பட்ட போது அவர்கள் மனங்களில் பெருக்கெடுத்திருக்கக்கூடிய உணர்வலைகள் எப்படியானவை என்பதை உங்களால் கற்பனை செய்து பார்க்க முடிகிறதா?

இந்த வாரம் புதிய வருடம் ஒன்றினுள் அடியெடுத்துவைக்கும் எமது சொந்த சகோதரர்கள் மீது நாம் கொண்டுள்ள வெறுப்பையும் தப்பெண்ணங்களையும் ஒதுக்கிவிட்டு ஒரே மக்களாக முன்னேறிச்செல்ல உறுதியெடுப்போம். அப்போது தான் எமது நாட்டு மக்கள் உண்மையாகவே விடுவிக்கப்படுவார்கள்.

என்ன நம்ப முடியாமல் தவிக்கிறீர்களா? இது, ஏப்ரல் 13ம் திகதி சண்டேலீடர் பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கம் தான். இது டெய்லி நியூசைப்போல் "பச்சைத் தண் ணி"யோ அல்லது தஜலண்டைப் போல் தீவிர இனவாத "நெருப்புத் தண்ணி"-யோ அல்ல. இரண்டுக்கும் இடைப்பட்ட சராசரி ரகமாக காட்டிக் கொள்ளமுயலும் ஒரு தென்னிலங்கை பத்திரிகை. இது சராசரி சிங்கள மக்களின் உணர்வுகளை பிரதிபலிப்பதாக கொள்ளலாம்.

இதே பக்கத்தில், இன்னுமொரு கட்டுரை வெளிவந்திருக்கிறது. புலனாய்வு அறிக்கைகள் தெரிவிப்பதன்படி, அண்மையில் சனாதிபதி சந்திரிகா, இந்தியா செல்வதற்கு முன்பதாக அதாவது ஏப்ரல் 6ம் திகதி ஈ.பி.டி.பி தலைவர் டக்ளஸ் தேவானந்தாவையும் ஈரோஸ் தலைவர் சங்கர் ராஜி அல்லது திரு. நேசனையும் சந்தித்திருக்கிறார்.

அண்மையான எதிர்காலத்திலே மாற்று அரசொன்றை அமைக்க தான் முயற்சியெடுத்தால், புலிஎதிர்ப்பு கூட்டு தொடர்பாக உங்களது நிலைப்பாடு எப்படியிருக்கும் என்று அவர்களைக் கேட்டிருக்கிறார்.

இந்திய அரசும் அதிகார பீடத் தினரும் (றோ) புலிகள் எதிர்ப்பு நிலைப்பாட்டை கொண்டிருப்பதாகவும் புலிகள் வடக்கு கிழக்கின் கட்டுப்பாட்டைக்கைப்பற்றுவதை தடுக்க இயன்ற அனைத்தையும் செய்வார்கள் என்றும் மேற்படி இருவரும் கூறியிருக்கிறார்கள்.

**இதன்போது தான் மாற்று அரசை அமைத்தாலும் புலிகளுடன் தான் அமைதிப் பேச்சுவார்த்தைகளை நடத்தவேண்டும் என்று சனாதிபதி வெளிப்படுத்தியிருக்கிறார்.**

இந்திய அதிகார பீடத்தினரோடு தமக்கு தொடர்பு இருப்பதாகவும் இந்திய மத்திய அரசின் அரசியல் தலைவர்கள், இந்திய மேற்பார்வையிலான அமைதிப்பேச்சுக்களை வரவேற்கக் கூடுமெனினும் அதிகாரபீடத்தினர் கடுமையான புலிகள் எதிர்ப்பு நிலைப்பாட்டை கொண்டிருப்பதாகவும் டக்களஸ் தேவானந்தா, சங்கர்ராஜி ஆகிய இருவரும் தெரிவித்திருக்கிறார்கள்.

இயலாமையின் வெளிப்பாடாய் புலம்பும் இவர்கள் அமெரிக்க கொடியில் இருந்து மட்டுமல்ல, புத்த பெருமானே புதிதாக ஒரு கொடியைக் கொண்டு வந்து காட்டினாலும் அதிலிருந்தும் எதையும் கற்றுக்கொள்ளப்போவதில்லை. எமது போராட்டத்தை நியாயமானதாக ஏற்றுக் கொள்வதற்கோ அல்லது இப்போராட்டத்தை முனைப்புப்படுத்திவிட்டது "தரப்படுத்தல்" தான் என்ற விடயத்தையோ அல்லது பதவி ஆசையில் எம்மை பகடைக்காயாக்க முனைகிறார்கள் என்பதையோ இவர்கள் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை.

மொழிபெயர்ப்பும்
ஆக்கமும்
வின்சென்ற் புளோறன்ஸ்

**ஒரு முரண்பாட்டுக்கு பின்னர் ஒரு கொடியை ஏற்றுவது அபாயகரமானது. குறியீட்டு இயல்பான அம்சங்களால் அது நிரம்பி வழிவதோடு, அநேக மனங்களில் அழியாத விதத்தில் செதுக்கப்பட்டு, வருடக்கணக்காக உலுப்பியெடுக்கும் விம்பமாகவும் அது இருக்கும்.**

ஒன்று மட்டுமே நான் அறிவேன்; நான் எதையும் அறியேன் என்பதே அது. - ஸாக்ரட்டீஸ்



# தொடர்கதை

## அத்தியாயம்-12

ஆங்கில மூலம்
பிளானறி ஓ கொனரின்

# இடம் பெயர்ந்தவன்

தமிழில்
சு.மகேந்திரன்

அவள் அவ்வேலைகளைச் செய்யும் போதெல்லாம் அடிக்கடி அவளது முகம் சிவந்தது. பின் வெளிறி மீண்டும் சிவக்கத் தொடங்கியது.

விடிவதற்கு சற்றுமுன் மழைத்தூறல் ஆரம்பித்திருந்தது. அவர்கள் அவ்வேளையில் அங்கிருந்து வெளியேறினர். மூட்டைகளும் பெட்டிகளும் நிறைந்திருந்த அந்தக் காரில் அவர்கள் அடைபட்டுக் கொண்டு அமர்ந்து இருந்தனர். அந்தச் சதுர வடிவமான கார் வழமையாகப் போடும் இடிப்பது போன்ற சத்தத்தை விட பாரமிகுதியால் அதிக சத்தத்துடன் செல்லத்தொடங்கியது. பின்சீற்றில் மஞ்சல் நிறத்தலைமயிர் உடைய மெலிந்த நெடிய தோற்றம் கொண்ட அந்த இரண்டு பெண் பிள்ளைகளும் அடைந்து கிடந்த பெட்டிகளின் மேல் அமர்திருந்தனர். போர்வையின் கீழே வேட்டைநாயொன்றும் பூனை ஒன்றும் அதனது இரு குட்டிகளும் கிடந்தன. கார் அதிக பாரம் ஏற்றப்பட்ட ஒழுக்குடைய ஒரு படகு போடும் வகையிலான சத்தத்தை எழுப்பியபடி அவர்களது வீட்டைத் தாண்டி சென்று கொண்டிருந்தது. திருமதி மக்கின்ரயரின் வெள்ளை நிறம் தீட்டப்பட்ட வீட்டையும் கடந்து கார் சென்று கொண்டிருந்தது. திருமதி மக்கின்ரயர் வீட்டினுள், இன்று தனது பசுக்களில் பால் கறக்க சோட்லி வரமாட்டான் என்பது தெரியாது அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தாள். கார் மலையின் மேல் ஏறி போலிஸ்காரர்களின் கொட்டகைகளையும் தாண்டி கேற்றிக்கு புகும் பாதையால் போய்க்கொண்டிருந்தது. பால் கறப்பதற்கு உதவி வரும் என்று இரண்டு நீகிரோக்களும் ஒருவர் பின் ஒருவராக வந்துகொண் டிருந்தனர்.

திருமதி சோட்லியின் ஒரு கால் பொருட்கள் கொண்ட பெட்டியின் மேல் இருந்தது. அதனால் அவளது தொடை வயிற்றுக்குள் அமிழ்ந்து போனது போலாயிற்று. சோட்லியின் முழங்கை அவளது மூக்கிற்கு அருகிலும் முன்சீற்றின் மேலாகக் கிடந்த பின்சீற்றில் இருந்த மகள் ஒருத்தியின் வெறுங்கால்கள் அவளது காதைத்தொடும்வகையிலும் இருந்தன.

"நாம் எங்கே போகிறோம்'' என சோட்லி திரும்பவும் கேட்டான். பயங்கரமான உஸ்ணம் மெதுவாக மிஸிஸ் சோட்லியின் முகத்தில் உண்டாகியது. கடைசியான தாக்குதலுக்கு தயாராகியது போல் அது அவளது முகம் முழுவதும் பரவியது. அவளின் ஒரு கால் கீழே முறுகிய நிலையிலும் மற்றத் தொடை கழுத்துக்கு அண்மையிலும் இருந்ததால் நிமிர்ந்தே அவள் இருக்க வேண்டியிருந்தது. அவளது வெளா நீலநிறக்கண்கள் அசாதாரணமான முறையில் ஒளி அற்று இருந்தன. அவளது பார்வை முழுவதும் சுற்றிச் சுழன்று அவளுள்ளேயே போய்விட்டது. அவள் சடுதியாக சோட்லியின் முழங்கையையும் பெண்பிள்ளையின் கால்களையும் ஒரே சமயத்தில் இறுக்கமாகப் பற்றிக்கொண்டு அவற்றைத்தனது உடம்புடன் ஒன்றாக இணைப்பதற்கான பாவனையுடன் பிரயாசப்பட்டு இழுத் தாள். ஏசியபடி சோட்லி காரை நிறுத்தினான். மகள் கூச்சலிட்டபடி காரிலிருந்து வெளியே போகப் போவதாகக்கத் தினாள். காரில் இருந்த எல்லாவற்றையும் இப் போது வேறு முறையில் ஒழுங்குபடுத்தி வைப்பதற்கான முயற்சியில் அவள் ஈடுபட்டிருந்ததை தெளிவாககக்காணக் கூடியதாக இருந்தது. அவள் முன்னும் பின்னும் வேகமாக அசைந்தாள். கையில் தட்டுப்பட்டதையெல்லாம் இறுக்கமாகப் பற்றிக்கொண்டு இறுக அணைத்துக்கொண்டாள். சோட்லியின் தலையை மகளின் கால்களை பூனையை மெத்தைகளை சந்திரன் போன்ற தனது தொடைகள் என்பனவற்றையெல் லாம அணைத்துக்கொண்ட பின் அவளில் தெரிந்த பயங்கரத் தோற்றம் மறைந்து, அது திகைப்பாக மாறியது. அப்போது எதை அவள் பிடித்திருந்தாளோ அந்தப்பிடி தளர்ந்தது. ஒரு கண் மற்றதுடன் செருகியது. அதன் பின் அவள் அசையவில்லை.

என்ன நடந்தது என்பதை அறியாத அந்த சிறுமிகள் இருவரும் 'அம்மா எங்கே அம்மா போகிறோம்' எனக்கூறியபடியே இருந்தனர். அம்மா பரிகாசத்துக்காக இப்படிச் செய்கிறாள் எனவும், அவர்களது தகப்பனார் தாயாரை இழந்துவிட்ட ஒரு மனிதனின் நிலையில் அதனைப் பார்த்துக் கொண்டிருக்கிறார் எனவும் நினைத்தார்கள். அவள் மிகப்பெரிய அனுபவம் ஒன்றை அனுபவித்து, அதனால் எல்லாவற்றையும் இழந்து நிற்கிறாள் என அவர்களுக்கு விளங்கவில்லை. எதிரே இருக்கும் அந்தக் கறுத்த வளுவளுப்பான றோட் அவர்களுக்குப் பயத்தை உண்டு பண்ணியது. பலத்த குரலில் 'அம்மா நாங்கள் எங்கே போகிறோம்? எங்கே போகிறோம்?' எனக் கத்தியபடி இருந்தனர். அவர்களது தாயின் உடம்பு சீற்றில் உருண்டு பின் நிலையாகக் கிடந்தது. அவளது கண்கள் நீலநிறம் தீட்டப்பட்ட கண்ணாடிபோல தென்பட்டது.




தனது தாய் நாட்டின் மிக விஸ்தீரணமான எல்லைகள் எல்லாவற்றையும் ஒன்றாக நினைத்து சிந்தனையில் ஆழ்ந்து விட்டவள் போல் தோற்றமளித்தாள் மிஸிஸ் சோட்லி.

(பகுதி-I முற்றும்)

(தொடரும்...)

## சிந்திக்கவைத்த சந்திப்பு

# ஐயோ... ஸ்னைக்! ஸ்னைக்!




ஒரு காலை நேரம்...

பள்ளிக்கூடப் பிள்ளைகளும், அலுவலக மனிதர்களும், வாகனங்களும், நடைவாசி களுமாய் தெரு இயங்கிக் கொண்டிருந்தது.

அப்போது நான் இடம் பெயர்ந்து வந்த புதிசு. வேலைகள் எதுவும் தேடவில்லை. காலை சாப்பிட்டதும் வீதிக்கு வரும் வயது.

"தமிழீழம் நல்லாயிருக்கு"

தெருவால் போகும் இளைஞர்கள் இருவர் சைக்கிள்களில் செல்லும் போது கதைத்துக் கொண்டு போனது எனது காதில் விழுந்தது. "தமிழீழம்" என்று கூறியது அவர் கள் புதுக்குடியிருப்பைத்தான். ஏனென்றால் முல்லைத தீவால் இடம் பெயர்ந்தவர்களும், மன்னார்,, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை என்றும் முன்னைய கலவரங்களின் போது தென் பகுதியாலும் இடம் பெயர்ந்தவர்களோடு, யாழ்ப்பாண இடப்பெயர்வு மனிதர்களும் வந்து கூடுதலாக இருந்த இடமும் புதுக்குடியிருப்பேயாகும்.

அப்படி, எல்லா மக்களும் துன்பமற்று ஒன்றாக வாழும் அந்தத் "தமிழீழம்" என்ற வார்த்தைகள் ஒரு சந்தோசத்தைக் கொடுக்க அந்த வீதியால் நடந்து செல்கிறேன்.

'அவள்' சைக்கிளில் வந்து கொண்டிருந்தாள். அவளை இனி எங்கையாவது கண்டால் 'அன்ரா' என்று தான் கூப்பிடவேணும் என அடிக்கடி நினைப்பதுண்டு. ஏனென்றால், அவளை ஒரு தடவை 'அம்மா' என்று சொல்லி விட்டு மிகவும் வருந்தியிருக்கிறேன். அந்த வருந்தல் அவளுடனான முதல் சந்திப்பில் தான் நிகழ்ந்தது.

அந்த முதல் சந்திப்பானது 'சூரியக்கதிர்' இடப்பெயர்வின் போது பூநகரியிலிருந்து புதுக்குடியிருப்பு நோக்கி வரும் 'பஸ்'சில் தான் நடந்தது.

அது இலவசமாய் சனங்களை ஏற்றிப் பறிக்கும் பஸ். அவளுக்கும், மகனுக்கும் அந்தப் பஸ்சில் இருக்கச் 'சீற்' கிடைக்கவில்லை. மகனுக்கு ஐந்து வயது வரும். அவளுக்கு நாப்பதுக்கு மேல்.... முடி நரைத்து முகத்தோல் சுருங்கியிருந்தது. அவள் கம்பியில் தூங்கிக் கொண்டு நிற்க, மகன் முழங்கால்களுக்கு மேலிருக்கும் அவளின் சட்டையில் இறுக்கிப் பிடித்தபடி நின்றான்.

"ப்ளீஸ் அம்மா. இருங்கோ..."

எழும்பினேன். 'சட்'டென்று அவள் முகம் இரைஞ்சது. மேல் சொண்டை சுழிச்சுக் கொண்டு என்னைப் பார்த்தாள். பார்க்கும் போது மூக்கில் தொங்கிய கண்ணாடியை கொஞ்சம் மேலே உயர்த்தினாள். அப்போது தான் விளங்கியது அவள் ஒரு 'மம்மி ரைப்' பென்று.

மகன் எனது சீற்றில் வந்து இருந்தான். மகன் மூலமாகத்தான் அவள் மானிப்பாயைச் சேர்ந்தவள் என்றும், கணவன் வெளிநாடொன்றில் வசிப்பதாகவும் அறிந்தேன்.

அவளை, அந்தச் சைக்கிளில் பார்த்ததும் அந்தப் 'பஸ்' ஞாபகங்கள் தான் அலையாய் எழுந்தது. கொஞ்ச நேரம் அவளையே பார்த்துக் கொண்டு நின்றேன்.

சாதாரண ஒரு கவுனோடும் தோளில் சிறிய கான் பாய்க் கோடும் மிகவும் அவசரமாய் போய்க் கொண்டிருந்தாள். அவளின் அவசரத்தைப் பார்க்க ஏதோ சீரியஸ் பிரச்சினை போல் தோன்றியது. அநேகம் அந்த றோட்டில் அப்படி சீரியஸ் கேஸ்களை கண்டால் அவர்களின் பயணம் வைத்தியசாலையாய்த் தானிருக்கும்.

வைத்தியசாலை அருகில் என்பதால், அப்படியே நின்று அவளையே பார்த்தேன். எனது ஊகம் சரியாயிருந்தது. அவளின் மகன் "டர்ஷன்"ஞாபகத்தில் வர, நானும் அவசரமாய் அந்த வைத்தியசாலைக்குப் போனேன்.

அவள் "விறுக் விறுக்" என்று 'வாட்' ஒன்றுக்குள் போனாள்.

குதி மிதந்த செருப்பின் "டொக் டொக்" கென்ற சத்தம் சிறிதாய் விழுந்து கொண்டிருந்தது. எல்லோரும் அவளையே பார்த்தபடி நின்றார்கள்.

'பெற்'றில் ஒரு அம்மா படுத்திருந்தாள். நல்ல சுருள் மயிர். 'நீக்ரோ' போல் ஒட்டியிருந்தது. எண்ணை வழிந்த முகத்தில் குங்குமம் கரைந்திருந்தது. பட்டுப் பட்டாய் தும்புகள் எழும்பிய 'மஞ்சள் நூல்'த்தாலியில் ஊத்தை முடிச்சுக்களாய் திரண்டிருந்தது.

அம்மாவுக்கு பக்கத்தில் அவள் நின்றாள். பழைய சீலையுடன் நீட்டி நிமிர்ந்து படுத்திருக்கும் அந்த அம்மாவின் கையில் 'சேலைன்' ஏறிக் கொண்டிருந்தது. நிச்சயம் அவளின் அம்மாவாக இருக்க முடியாததென நினைத்துக்கொண்டு அந்த அம்மாவையே பார்த்தபடி நின்றேன்.

அவள் என்னைக் கண்டுவிட்டாள். சிரித்தாள். அந்தச் சிரிப்பு ஒரு அறிமுகமானவனைக் கண்டு சிரிக்கும் சிரிப்பாக இருக்கவில்லை. அந்தச் சிரிப்புக்குள் திடீரென ஒரு 'வெட்கம்' புரையோடியது. கீழ்ச் சொண்டை பற்களால் கடித்துக் கொண்டு கொஞ்ச நேரம் நின்றவளுக்கு ஒரு கூச்சம் முகத்தில் புரண்டது.

"இது வீட்டில் நிற்கிற வேலைககாரி. மகனை வீட்டில் விட்டிட்டு நான் கடைக்குப் போனனான். அப்ப வீட்டிக்குள் இருந்த 'பொக்ஸ்'சுக்குள் பாம்பு இருந்தது. மகன் பாம்பைக் கண்டதும் "மம்மி சினைக்.... மம்மி சினைக்"என்று கத்தினவன். "சினைக்கென்றால் பாம்பு என்று டமிழ்சொல்லிக் குடுக்கேல்லை. டமிழ் பெரிசா மகனுக்குத் தெரியாது நாங்கள் "யெவ்னா" தானே...

அதுதான்- இந்த அம்மா 'பொக்ஸ்'சுக்குள் ஏதோ விளையாட்டுத் திங்ஸ்தான் இருக்கு. அதுக்குத்தான் மகன் அழுகிறானென்று நினைத்து 'பொக்ஸ்'சுக்குள் கையை வைச்சிட்டா"

புகழ்ந்து சொல்லி முடிந்த பின் தான் லேசாய் வேதனை அவளின் முகத்தில் தெரிந்தது.

நான் அவளையே கொஞ்ச நேரம் பார்த்துக்கொண்டு நின்றேன். மகனுக்குத் தமிழ் பெரிசாய்த் தெரியாது என்று சொல்லும் போது அவளின் முகத்தில் எவ்வளவு மகிழ்ச்சி பூத்திருந்தது.

தமிழை மறப்பதே மகிழ்வென எண்ணும் அவர்கள் இருக்கும் வரை தமிழ் எப்படி உயிர்வாழும்..?

எரிசரன்

எதிர் காலங்கள் அனைத்தையும், கடந்த காலங்களின் கனிகளாக ஆக்குவது - அனுபவம். - தாமஸ் ஆர்னால்ட்.




# உயிரில் ஒன்றாய்க் கலந்தவன்

**கோணாவில் கிருபா**

மருதுவைச் சுமந்தபடி மிதிவண்டி 'பெண்கள் புனர்வாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தை' தேடி ஓடிக்கொண்டிருந்தது. அவனின் மனவோட்டம் காலையில் பொறுப்பாளர் திரும்பத்திரும்ப கேட்டதிலேயே ஆழ்ந்திருந்தது.

"மருது நீர் திருமணம் செய்து கொள்ள ஒரேயடியாக மறுக்கிறதுக்குரிய காரணத்தை தெரிந்து கொள்ளலாமா...?"

"மூர்த்தியண்ணை... என்னைவிட வயதில மூத்தவர் நீங்கள்... இயக்க வாழ்க்கையிலும் அஞ்சு வருடங்கள் சீனியர்! உங்கட கருத்தை மறுக்கிறதாக எடுக்காதேங்கோ.... எனக்கு திருமணம் செய்து கொண்டு குடும்ப வட்டத்துக்குள் போகிற நினைப்பு துளியேனும் இல்லை"

"இது சம்பந்தமாக நீர் பிழையான கருத்தோட்டத்தைக் கொண்டிருக்கிறதாக எனக்குப் படுகுது.... இயக்கமும் காதலிக்கிறதை அனுமதிச்சிருக்கு... குறித்த வயதின்பின் திருமண உறவையும் ஏற்றுக்கொள்ளுது. மருது, உமக்கு வயது முப்பத்தியைந்து கடந்திட்டுது.

ஒருவேளை இப்பிடி யோசிக்கிறீரோ - ஒரு காலும் இல்லாமற் போட்டுது. இந்த ஊனத்தோடு குடும்பச் சுமையை என்னென்று தாங்குவதென்று..."

மருது அவசரமாக மறுத்தான். "....இல்லை, என்னோட களத்தில நின்ற எவ்வளவோ பெடியள் சண்டைகளில உயிரை விட்டிட்டாங்கள்....! இன்னும் சிலர் அவயவங்கள் செயலிழந்து, பார்வை பறிபோய் அன்றாடம் எனக்கு முன்னால உலாவுகிறார்கள். இந்த யதார்த்தத்தை புறக்கணிச்சிட்டு என்னைச் சுற்றி தனிவட்டமொன்றை ஏற்படுத்திக் கொள்ள நான் விரும்பவில்லை..."

"குடும்பம் ஆகின பிறகும் நீர் உமக்குரிய போராட்டக் கடமைகளைத் தொடரலாம் தானே. எத்தனை தளபதிகள் குடும்பம், குழந்தைகளைக் கண்டதுக்குப் பிறகும் வெடிச்சத்தங்களுக்கு மத்தியில களத்தில நிற்கினம், உயிரைத் தற்கொடையாக்கின உதாரணங்களும் நிறைய இருக்கு - குமரப்பா, புலேந்திரன்.... இப்பிடி ஏராளம்! அதோட எங்கட அமைப்பின் கிளைநிறுவனங்களை உயர்ந்த மனப்பக்குவத்தோடு வழிநடத்துகினம். சரி, இதுக்குமேலும் நான் உம்மை வற்புறுத்தேல்ல.... ஆழமாக சிந்திச்சு இறுதியான முடிவை எடுங்கோ"

ஆழ்ந்த சிந்தனையோடு வேகத்தை மட்டுப்படுத்தாது திறந்திருந்த படலையினூடு உள்ளே செலுத்த மதிலுக்குப் பின்னாலிருந்து சிறிய உருவமொன்று குறுக்கே வர...சமநிலை தவறி பொத்தெனச் சரிந்தான். அருகே மிதிவண்டி சாய்ந்து கிடக்க சக்கரங்கள் சுழன்றன.


"அ....ப்....பா....அப்பா"

'அடடா, பாப்பாவை நாயென்று பயந்து... இடறுப்பட்டு' அவனுக்கே சிரிப்பு வந்தது. குழந்தை தத்திவந்து அப்பாவென்று தோள்களைத் தொட்டது. உருண்டைத்தலை, அகன்ற கபடமில்லாத கண்களை உருட்டியது. அணிந்திருந்த சட்டையை புழுதியில் நனைத்து நின்றது அப்பெண்குழந்தை!

சத்தம் கேட்டு உள்ளேயிருந்து நடுத்தரவயதுப் பெண்மணியொருவர் முற்றத்துக்கு ஓடி வந்தார். "அச்சச்சோ மோதிட்டீங்களா, பலத்த அடிபட்டிச்சா...."

"நல்லவேளை, நான் விழுந்ததால குழந்தை பிழைச்சிட்டுது... சின்னக் குழந்தையை தெருவிலே தனித்து விடலாமா காவேரியம்மா?"

"சற்றுக் கவனக் குறைவாக இருந்திட்டன். நம்ம மதுமிதா இங்கே தான் தினமும் அப்பாவை எதிர்பாத்திட்டிருப்பா... பாவம், அவள் அம்மா சொன்னதை நம்பி அப்பா வரவை பாத்திட்டிருப்பா. ஆனால் அப்பா திரும்பி வரப் போறதில்லைங்கற உண்மை இந்தப் பிஞ்சிற்குத் தெரிய நியாயமில்லை!"



"என்ன சொல்றீங்க காவேரியம்மா - குழந்தையின்ர அப்பாவுக்கு என்ன நடந்தது?" செயற்கைக் காலைச் சரிப்படுத்திக் கொண்டு எழுந்தவன் திகைப்பாக வினவினான்.

"மதுமிதாவோட அம்மா ஏற்கனவே உனக்கு அறிமுகமானவள், மருது. சென்றதடவை இங்கு வந்து உங்களுக்கான சீருடைகளைத் தைத்து வழங்குவதற்கு ஒப்பந்த அடிப்படையில் ஒருத்தியைக் கேட்டிருந்தாயல்லவா...?"

நிறுவனத்தின் தலைவி சொன்னதும் மருதுவுக்கு சட்டென ஞாபகத்திற்கு வந்தது. வயதுக்குச் சற்றேனும் பொருந்தாத உடல்வாகுடன் வெற்று நெற்றி, கம்மல்கள் இல்லாத காதுமடல்கள், படைவீரனை போன்ற இறுகியமுகம் இவற்றோடு ஏழ்மையை வெளிக்காட்டியவாறு நின்றாளே, அவளா...!

"அந்தப் பெண்ணோட பேரு என்ன சொன்னீங்கள்?"

"அமுதா...அவளுடைய கணவன் எல்லைப்படை வீரராக பணியாற்றியவர். ஓயாத அலைகள் மூன்று ஆரம்பித்த சமயம் ஒட்டுசுட்டான், மணலாறு, மன்னார்... மற்ற இடங்களிலும் செயற்பட்டவர், கடைசியாக அரியாலையில் 'கிபிர்' விமானம் வீசின குண்டில...."

அவனுக்குள் ஏதோ பொறிதட்ட அவசரமாக "....அவள் கணவன் பெயர்...?" என்று கேட்டான்.

"சேகர்... செல்லமாக அகத்தியர் அப்படியென்று சொல்லுவார்கள்"

அதைக்கேட்டதும் அவனுள் துயரம் பீறிட்டெழுந்தது, அந்தச் சின்ன உருவத்தின் சலியாத உழைப்பு, சாந்தமான முகம்.... எல்லாமே நினைவில் வந்தன. அந்த சேகரை எவ்வாறு மறந்து போனான்.

"சென்ற ஆண்டில் இதே நாளிற்தான் சேகரின் பிரிவுத் துயரும் நிகழ்ந்தது, தம்பி!"

'ஓ....அவன் உயிர் உடற்கூட்டை விட்டுப் பறந்து ஒரு வருடம் ஓடிவிட்டதா....?'

"சேகரின் அந்த இறுதி நிமிடங்களில் நானும் அவருடன் நின்றிருந்தேன், காவேரியம்மா.... விழுப்புண்ணடைந்த சேகரை சுமந்துவரும் போதுதான் விமானக்குண்டிலை சிக்கி அவர்.... என்னுடைய காலும் அந்தச் சந்தர்ப்பத்திலதான் சிதைஞ்சு போனது! சேகர் ஒரு அருமையான மனிதர், ஆற்றல்மிக்க போராளி" அவன் சொன்னதைக்கேட்டு காவேரியம்மா ஆச்சரியப்பட்டார்.

குழந்தை பின்னால் வந்து கால்களைக் கட்டிக் கொண்டு "அப்பா..." என்று மழலைமொழிந்தாள்.

"உள்ளே வாங்கோ மருது. சற்றைக்கெல்லாம் அமுதா துயிலுமில்லத்திலிருந்து திரும்பி விடுவாள். தன் கணவனோட பணியாற்றிய உங்களைக் கண்டு உரையாடினால் சிறு ஆறுதலேனும் அவளுக்குக் கிடைக்கக்கூடும். ஆகவே எங்கள் கூட இருந்து மதியச் சாப்பாட்டை முடித்துக்கொண்டுதான் கிளம்ப வேணும்" என்று கண்டிப்பாகச் சொன்னாள்.

மதுமிதாவைத் தூக்கிக் கொண்டு காவேரியம்மாவின் அலுவலகத்தினுள் நுழைந்தான். வாசற்கதவின் எதிர்ச்சுவரில் சேகரின் மார்பளவு படம் கண்ணாடி பிரேமுக்குள்... இங்கு அவனது உறவுகள் இரண்டு வேரிழந்து நிற்பதை உணர முடியாதவனாக சிரித்தவாறு காட்சியளித்தான்.

வலது மூலையில் திருமண வாழ்த்து மடலொன்று தொங்கியது. எழுந்து அருகிற் சென்றான். சேகரும் அமுதாவும் மணக்கோலத்தில்.... கழுத்து நிறைந்த மாலைகளோடும் கண்களில் எதிர்காலம் பற்றிய அதீத கற்பனைகளோடும்.... சேகரின் சக கூட்டுறவுப் பணியாளர்கள் அதில் வாழ்த்தியிருந்தார்கள்!

காவேரியம்மாள் குவளையில் தேநீரோடு வந்தார்.

"தம்பி, இங்கு தொழிற்பயிற்சி பெறுகின்ற பெண்கள் அனேகமாக வெளியே சென்று வாழப் பிரியப்படல்லை. சிலருக்கு எங்கட சமுதாயத்தின் மீது நிறையக் கோபம் கூட உண்டு.... நீங்கள் கேட்டபடி உங்களிடத்துக்கு வந்து தைப்பதற்கு அமுதா மாத்திரமே தயாராக இருக்கிறா. மற்றவர்கள் இப்போதுதான் தையல்பயிற்சி கற்றுக் கொண்டிருக்கிறார்கள்."

முற்றத்தில் மேய்ந்து கொண்டிருந்த கோழியொன்று சிறகுகளை படபடவென அடித்துக் கொண்டு வாசலினூடு உள்ளே வர, காவேரியம்மா "ச்சூய்ய்...ஓடு வெளியே...!" என்று கைகளை வீசி விரட்டினார். அபயக்குரலெழுப்பியவாறு ஓடிய அதனை இரண்டு சேவல்கள் விரட்டின. அஃறிணைப் பிராணிகளாயினும் வேலியில்லா விட்டால் நித்திய கண்டம் என்ற நிலைதான்!'

"தனித்துப் போய்விட்ட அமுதாவையும் அவள் குழந்தையையும் பெற்றோர் உறவுகள் கிட்ட சேர்பிக்க நீங்கள் முயற்சிக்கல்லையா?" சிந்தனையோடு கேட்டான்.

"நான்கு நாள் முன்னாடி அமுதாவோட பெற்றோர் இங்கு வந்திருந்தார்கள். அவங்கள் உறவில மைத்துனன் முறைப் பையன் அமுதாவை ஏற்க - மறுவாழ்வு தர தயாராக இருப்பதாகச் சொன்னார்கள்...."

"அதற்கு அமுதாவோட பதில் என்ன?" என்றான் ஆர்வமாக.

"குழந்தையைக் கைவிட்டு வெறுங்கையுடன் கிளம்பச் சொன்னதும் பதறிப் போயிட்டா.... கணவன் மீதிருந்த அன்பின் அடையாளமாக எஞ்சி நிற்கின்ற இந்தப் பிஞ்சை ஆயுளுக்கும் கைவிட மாட்டேன்னுட்டா! அமுதா மட்டுமில்லை, எந்தவொரு தாயுமே இப்பிடியொரு அபத்தமான நிபந்தனையை ஏத்துக்க மாட்டாள்...."

மருதுவுக்கு நெஞ்சம் வலித்தது. 'இந்த நாட்டுக்காக எருவாகிப் போனவனின் எச்சமொன்று நாளை முகவரியிழந்து போவதா...? அவன் தியாகம் அவ்வளவு மலிவாகிப் போய்விடுமோ....!'

மருது ஒரு முடிவிற்கு வந்தான்.

*********

"மருது நீர் சொல்லுறது உண்மையா, அல்லது என்னைச் சமாளிப்பதற்காக நீர் அவிழ்த்து விடுகிற கற்பனை நாடகமா......"

"ஓமண்ணை காலையில் நிறுவனத் தலைவி காவேரியம்மா வந்திருந்தா. அமுதாவுக்கு இந்தக் கல்யாணத்தில பூரண சம்மதம் என்று சொன்னார்"

மூர்த்தி அருகில் வந்து முதுகில் தட்டினான். "உம்மட பெருந்தன்மை, பரந்தநோக்கு இதுகளை இன்றைக்குத்தான் நேரடியாகப் பார்க்கிறன். நாங்கள் நாட்டு விடுதலையை கொள்கையாக வரித்து ஆயுதம் தூக்கியதைவிட, நீர் இனிச் செய்ய எண்ணியிருக்கிறது தான் உயர்ந்த சமுதாயப் புரட்சி! இன்னமும் எங்கட சமுதாயத்தைப் பிணைத்து வைச்சிருக்கிற சில மூடக்கொள்கைகள், வரம்புகள் இதுமாதிரியான மாற்றங்களால நிச்சயம் அறுத்தெறியப்படும்..."

"அமுதாவின் மனநிலையில் இப்படியொரு மாற்றத்தை ஏற்படுத்த காவேரியம்மாதான் காரணம்."

"அந்தப் பெண் அமுதாவிற்கும். அவள் குழந்தைக்கும் வளமான ஒரு எதிர்காலம் கிடைக்கிறதையிட்டு மகிழ்ச்சி, அந்த நம்பிக்கையைத் தந்த உமக்கு என்னுடைய மனம் நிறைந்த வாழ்த்துக்கள், மருது."

"அமுதா இன்னும் பழசுகளை மறக்கல்லை. கல்யாணம் எளிமையாக நடக்கணும் என்று விரும்பறா..." "அது நியாயம்தானே!"

"எனக்கும் கூட உறவு என்று சொல்லிக் கொள்ள யாருமில்லையே!"

"ஏன் நானில்லையா...?" மூர்த்தி ஆதரவாக தோளைப் பற்றினான்.

வெளியே இருள் கவிந்திருந்தது. உள்ளறையில் அமுதா ஏற்றியிருந்த நெய்விளக்கு ஒளிர்ந்து கொண்டிருந்தது. திருமணத்திற்கு வந்திருந்த விரல் விட்டு

→

எண்ணக் கூடியவர்களும் சாப்பாட்டின் பின்புறப்பட்டு விட்டார்கள். மூர்த்தி உணவு எடுத்து வந்த பாத்திரங்களை மோட்டார் வண்டியில் அடுக்கிக் கொண்டு கிளப்பினான்.

மருது தட்டிலிருந்த சோற்றை அளவான கறியுடன் பிசைந்து அவ்வப்போது மதுமிதாவுக்கும் ஊட்டியபடி சாப்பிட்டுக் கொண்டிருந்தான். மனம் என்றுமில்லாதவாறு நிறைந்திருந்தது. மூர்த்தியண்ணை சொன்னது உண்மைதான் - இப்போதிருக்கின்ற குதூகலம் முன்னொரு போதும் அனுபவித்திராதது!

புதிதாக ஆயுள்பந்தமொன்று அமைந்து விட்ட மகிழ்ச்சியா.... ஆதரவின்றி நின்றவளையும் அவள் குழந்தையையும் அரவணைத்து எதிர்காலம் பற்றிய உறுதியான நம்பிக்கையை தந்ததனால் கிடைத்த திருப்தியா.... இதில் எதுவாகவும் இருக்கலாம்.

“தட்டில உள்ள சோறு போதும். இன்றைக்கு வயிறு, மனசு எல்லாமே நிறைஞ்சிருக்கு....! இதுக்கு மேல வேணாம்...” அவன் மறுத்து அவள் கையைப் பற்றித்தடுக்க மறுகணம் வெடுக்கெனக் கையை இழுத்துக் கொண்டாள், கையை தீயினுள் வைத்த உணர்வு அவளுக்குள்....

அமுதா குழந்தையை வாங்கிக் கொண்டு தண்ணீர்ச் செம்பைத்தந்தாள் சாப்பாட்டிற் குப்பிறகு கிணற்றடிக்குச் சென்று பற்களைத் தூரிகை உதவியினால். சுத்தப்படுத்திக் கொண்டு மீண்டான். இதுவரை கண்டிராத கற்பனை உலகினுள்.... கட்டற்ற வானில்... உலாப்போகும் கனவுகள் அவனுள் அலை பாய்ந்தன!

குழந்தை மதுமிதா வாசற்கதவருகில் அழுதவாறு நின்றாள். கையை நீட்டி தூக்கி தோளிற் சாய்த்தான்.

‘அமுதா எங்கே போய் விட்டாள்...? குழந்தை அழுவதையும் கூடக்கவனிக்காமல்....’ செருப்பை கழற்றிவிட்டு ஆச்சரியத்துடன் உள்ளே நடந்தான். அங்கே அமுதா.....

சுவரில் தொங்கும் சேகரின் படத்தின் முன்பாக முழங்கால்களிடையே முகம் புதைத்தவாறு அழுதுகொண்டிருந்தாள். ‘ஓ...., சேகரின் பிரிவு அவளுள் ஏற்படுத்தியிருக்கும் அந்த ரணம் ஆறப்போவதில்லையா...? ம்... அவளாகவே அழுது ஓயட்டும்!’ அவளது தனிமையைக் குலைக்காது சத்தமிடாது கதவைத்திறந்து சென்று படுக்கையில் சரிந்தான். சற்றுமுன் அவனுள் ஊற்றெடுத்திருந்த வண்ணக் கனவுகள் யாவும் காற்றுப்போன பலூனாக சுருங்கிப் போயின. இரண்டு நாட்களாக ஓய்வின்றி பம்பரம் போல் இயங்கியதன் விளைவு உடம்பெங்கும் விண்ணென்று வலித்தது, செயற்கைக்கால் விளிம்பு முழங்காலைப் பதம் பார்த்து எரிச்சலை ஏற்படுத்தியது. மனம்வேறு பெரும்பாறையாகக் கனத்தது! நித்திரை அவனை ஆட்கொள்ள வெகுநேரம் பிடித்தது.

பாயில் உடம்பைக் குறுக்கிக் கொண்டு படுத்திருந்த அமுதா உறக்கமின்றி அப்படியும் இப்படியும் புரண்டாள். வழமையான இரவுகளில் அவள் மார்புக்குள் முகம் புதைத்து மெத்தென்ற பிஞ்சுக்கைகளால் கழுத்தைக் கட்டியபடி தூங்கிப் போகும் மகளின் ஸ்பரிசத்தில் கவலைகள் காணாமலே போய்விடும்! குழந்தை அருகிலில்லாத வெறுமையை முதற்தடவையாக உணர்கிறாள்.

> **மூர்த்தி அருகில்வந்து முதுகில் தட்டினான். “உம்மட பெருந்தன்மை, பரந்தநோக்கு இதுகளை இன்றைக்குத்தான் நேரடியாகப் பார்க்கிறன். நாங்கள் நாட்டுவிடுதலையை கொள்கையாக வரித்து ஆயுதம் தூக்கியதைவிட, நீர் இனிச் செய்ய எண்ணியிருக்கிறது தான் உயர்ந்த சமுதாயப் புரட்சி!**

கண்ணீரிற் குளித்த தலையணையை மறுபக்கம் மாற்றிப் போட்டுக் கொண்டு மேலும் கண்ணீர் உகுத்தாள். ஆனந்தத்தையும் ஆறுதலையும் தரவேண்டிய மணவாழ்வின் ஆரம்பநாளே அவளுக்குள் பெரும் போராட்டத்தை மூட்டிவிட்டிருக்கிறது.

இது நியாயமா, மனம் ஒத்து மணமுடித்த சேகரின் பசுமையான நினைவுகளை துடைத்தெறிந்து ‘விட்டு இடையில் இன்னொரு ஆடவனை கணவனாக வரித்துக் கொள்வது அவனைச் சிறுமைப்படுத்துவது ஆகாதா....?

‘ச்சே, இறுதியில் நானும் மற்ற சராசரிப் பெண்களைப் போல தனிமனித உணர்ச்சிகளுக்கு ஆட்பட்டு...புதிய வாழ்க்கையினூடாக அதற்கு வடிகால் தேடமுனைந்து எவ்வளவு கேவலமாய் போய்விட்டேன்!’ அவள் மனமே அவளைக் குற்ற வாளிக் கூண்டிலேற்றி வசைபாடியது. அது வரைநாளும் இருந்த நிம்மதி குலைந்து அலைகடல் தெப்பமென தத்தளித்தாள்.

வீதியில் உறுமிக் கொண்டோடிய கனரக வாகனத்தின் அருட்டலாள் திடுக்குற்று எழுந்தாள், அமுதா, அருகில் மதுமிதா இல்லாத வெறுமை உறுத்த பரபரப்பானாள்.’

‘குழந்தை அதிகாலையில் தூக்கம் கலைபவளாயிற்றே.... மருதுவை என்ன பாடு படுத்துகிறாளோ...?’ அறைக்குள்ளே எட்டிப்பார்த்தவள் நிம்மதிப் பெருமூச்சு விட்டாள். கட்டில் அமைதியாக இருக்க குழந்தை மருதுவின் மார்பில் ஒரு பூனைக் குட்டியைப்போல் சுருண்டு முகம் பதித்துக் கிடந்தாள்! மருது குழந்தையின் உறக்கம் கலைந்து விடக்கூடாதென்பதற்காக நிமிர்ந்த நிலையிலேயேபடுத்தவாறு.... செயற்கைக் காலைக்கழற்றி அப்பால் வைக்கக் கூட தோன்றாமல் தூங்கிப் போயிருந்தான்.

மருதுவைப் பார்த்து மனம் நெகிழ்ந்து போனாள். இது நாள்வரை அறிந்திருக்காத அவளையும் குழந்தையையும் ஏற்றுக்கொண்ட அவனது பரந்த மனம் எல்லோர்க்கும் வாய்ப்பதில்லையே..! அவள் கொடுத்து வைத்தவள் - அவனை கணவனாக அடைவதற்கு. கூடவே அவளுள் நெருடலொன்றும்....

‘நேற்று நான் மருதுவிடம் நடந்துகொண்ட விதம் சரியானதா.... மணமாகி எவ்வளவோ எதிர்பார்ப்புக்களோடு இருந்தவனிடம் குறைந்த பட்சம் ஆறுதலாக நாலுவார்த்தைகளேனும் பேசாது.... என்னுடைய துக்கத்துள் மட்டும் மூழ்கிப் போய்....

‘தாம்பத்திய வாழ்வின் இனிமை, சூட்சுமம் எல்லாம், நான் அனுபவித்தவள், குடும்பச்சக்கரத்தின் உயிர் இயக்கமே அதிலிருந்துதானே பிறக்கின்றது. அவனும் சாதாரண மானிடனின் உணர்ச்சிகள், எதிர்பார்ப்புக்கள் நிறைந்தவன் என்பதை ஏன் மறந்து போனேன்...?’

கவலைகள் மறந்து கண் வளரும் குழந்தையைப் பார்த்தாள். தனக்கொரு நிரந்தர அரவணைப்புக் கிடைத்த மகிழ்ச்சியில், நிம்மதியில்சின்னக் கைகளால் அவன் கழுத்தை வளைத்தவாறு...

‘இந்தக் குழந்தை கூட சேகரின் வித்தல்லவா..அவன் விட்டுச் சென்ற சொத்தல்லவா...? இந்த மழலை நெஞ்சில் இவனை பாகுபாடேதுமின்றி அப்பா என ஏற்றுக் கொள்ள முடிந்தால்... இவ்வளவுபடித்து அனுபவசாலியான இந்தப் பேதை....’

பொங்கியெழுந்த கண்ணீருடன் தடாலெனவிழுந்து அவன் பாதத்தைப் பற்றினாள், கண்ணெதிரே அவளின் சேகரே மீண்டும் பிறப்பெடுத்து வந்து இனி ஆயுளுக்கும் துணைவருவதான கனவு மெய்ப்பட்டு விட்டது போன்ற பிரமையில் அவள்....

திடுக்குற்று நிமிர்ந்த மருதுவுக்கு அவளின் புரிதல் புலப்பட வெகுநேரம் சென்றது.

## அம்மாவின் பழஞ்சோற்றுக் குழையலும் பூவரசம் குழையும்

கீரை, கிழங்கு, மரவள்ளி
கத்தரிக்காய் பாற்கறியும்
பொரித்த முருங்கைக்காய் குழம்பும்
பானையில் நீர் ஊற்றிய
மொட்டைக் கறுப்பன் சோறும்
பாங்காகக் கலந்து அன்று
சுற்றவர நாங்கள்
கைகளில்– ஈர் இலைகோர்த்த
பூவரசம் குழைகளிலே
விரல் இடுக்கால் வழிந்த குழம்பை
கையுயர்த்தி நாக்கால் நக்கி
வேகத்துடன் வாயை சோற்றிற்குள் புதைத்த
நாட்களை நினைக்கையிலே
ஆகா! என்னசுகம்! என்ன சுகம்!

அது அந்தக் காலமாய் போயிற்று
அம்மாவும் இல்லை பழஞ்சோறும் இல்லை.
பூவரசே வளராத பூமியிலே எம்குடும்பம்
ஆம்! அவுஸ்ரேலியாவில்,
இங்கிலாந்தில், கனடாவில்...
எம் குழந்தை வாழ்க்கை
எம் குழந்தைகட்கு இன்றில்லை!

நித்தி. கனகரத்தினம்

## தாயுள்ளம்



கருவறையில் இருக்கும் வேளை - தன்
பிள்ளை உயர்வு பற்றி கற்பனைகள்
பல செய்யும் உள்ளம் அதுதான்...

தரணியிலே கால் பதித்து - தாய்
மடியில் தவழ்ந்து கண்விழித்து அம்மா - என
அழும் போது மழலை குரல் கேட்டு
பதறி விடும் உள்ளம் அதுதான்...

தத்தி தத்தி நடக்கும் போது - தன்
பிள்ளை அழகைக் கண்டு இன்புறும்
உள்ளம் அதுதான்....
இளங்காச்சல் வரும் போதும் பதறி
தவித்து ஆகாரம் அறவே மறுத்து இரவு
பகல் பாராது கோயில் குளம் சுமந்து
மன்றாடி காச்சல் மாற நேத்தி வைக்கும்
உள்ளம் அது தான்....

ஐந்து வயது இருக்கும் போது முற்றத்து
மணலில் தன்னருகில் அமர வைத்து - வெண்
நிலவின் அழகைக் காட்டி ''ஆ'' வென கூறி
ஆகாரம் ஊட்டும் உள்ளம் அதுதான்....

அந்தி சாயும் நேரத்திலே ஆலமர கோயிலடியில்
அயல் வீட்டுப் பையனுடன் அட்டகாசம் புரிகையிலே
ஊரார் தந்தையிடம் கூறும் வேளை தடியெடுத்து
அடிக்கவர அதை தடுத்து கனிவாக
கண்டிக்கும் உள்ளம் அது தான்....

பள்ளி செல்ல வழியனுப்பி பாடம் முடிந்து
இடை வழியில் வரும் போதே - ஓடி
வந்து அணைத்து தூக்கி நன்றாக
படித்தாயா என ஆவலுடன் வினவும்
உள்ளம் அதுதான்...

அதிகாலை வேளையிலே கோப்பி
கரைத்து அருந்தத் தந்து - பழஞ்
சோற்றை குழைத்து கொடுத்து
வேலைக்குச் செல்வதற்கு கனிவோடு
அனுப்பும் உள்ளம் அது தான்...

தாயின் அன்பு கடலைப் போல்
ஆழமானது வானைப் போல்பரந்தது
அதில் தினம் குளித்து மகிழவே
சேய் மனம் விரும்பும்
தாயன்புக்கீடாக யார் . வைத்தார்
வையத்தில் அன்பு

ந. புரட்சி மாறன்

## குட்டிக்கதை



## பரிதாபம்

இத்தாலிக்கடற்பரப்பில் இரு மனித சடலங்கள் உள்ளாடையுடன் மட்டும் மிதந்து கொண்டிருந்தன.

அதனருகில் இரண்டு மீன்கள் ஒட்டியும், பாரையும் வந்தன. “இவர்கள் எந்தக் நாட்டவராய் இருப்பர்” என்றது ஒட்டி.

உற்றுப்பார்த்து விட்டு பாரை சொன்னது “இவர்கள் ஈழத்தமிழராய் இருக்க வேண்டுமென்று” “எதை வைத்து அப்படிச் சொல்கிறாய்” என வினாவியது ஒட்டி.

“அரையிலும் கையிலும் நிறைய நூல்கள் கட்டியிருக்கிறார்கள் அதைக்கொண்டுதான் இவர்கள் ஈழத்தமிழராய் இருப்பரோ என்று நினைகிறன்'' என்றுரைத்தது பாரை சற்றுச் சந்தேகத்துடன்.

சடலங்களில் இருந்த நூல்கள் ஒரு சேர வாயைத்திறந்தன.

“நிச்சயமாய் இவர்கள் ஈழத் தமிழர்கள் தான். எல்லா தெய்வங்களிடமும் சென்று, எதுவித தடங்கலுமின்றி, பிடிபடாமல் குறிப்பிட்ட நாடுகளுக்கும் போய்ச் சேரவேணுமென்று மன்றாடி, வேண்டி நேர்த்திக்கடன்கள் வைத்து எங்களை அரையிலும், கையிலும் நம்பிக்கையோடு நேர்ந்துணாவிக் கட்டினார்கள்.

கட்டுக்கட்டாய் மயில்தாளையும் கொடுத்து வந்தவர்கள் இவர்கள்'' என்று கூறி ஒரு கேள்வியையும் தொடுத்தன நூல்கள்.

உண்மையில் கண்களை மூடியது, தெய்வங்களை நம்பிய இவர்களா? அல்லது தெய்வங்களா?

ஆவரங்கால் சுதன்

கிணறு வற்றி விட்டபின் தான், தண்ணீரின் அருமை தெரிகிறது எமக்கு. - பெஞ்சமின்ஃபிராங்க்ளின்


## இளையவர்களே!

வணக்கம் இந்தப் பகுதி இளையவயதினர்களுக்கானது. உங்களைக் கவர - உங்கள் விருப்பத்துக் குரியதான விடயங்களை இதில் தர முயல்கின்றோம். ஒரு சித்திரக்கதையும் - தாயகம் பற்றிய தகவல்களடங்கிய பகுதியும் - 'தேடி' விளையாட்டுப் பகுதியும் இன்னும் பலவும் இதில் வரும்.

மேலும் அடுத்தவாரம் சந்திப்போம்.




## தேடி




எந்தப் பன்றிக் குட்டிக்கு வீட்டுக்குப்போகும் வழியைக் காட்டுவீர்கள்.

## குருவி வீடு கட்டுகிறது

குருவிக் குஞ்சே குருவிக்குஞ்சே
கூடா கட்டுகிறாய்
திருகித் திருகி தலையை ஆட்டி
கிளைமேல் தத்துகிறாய்
(குருவிக்குஞ்சே)
புல்லை எடுத்து இலையை மடித்து
தைத்தா பின்னுகிறாய் – உன்
செல்லப் பிள்ளை வாழ அதற்கோர்
மெத்தை செய்கின்றாய்
(குருவிக்குஞ்சே)
பனை ஓலை வீட்டின் மேலால் நீயும்
பறந்து போனாயே – உன்
வானைத் தாண்டும் குரலைக் கேட்டு
சொக்கிப் போனேனே
(குருவிக்குஞ்சே)
பாலர் எமக்கு பார்க்க ஒருக்கால்
கூட்டைக் காட்டுங்கள் – நாங்கள்
பார்த்துப் பார்த்து வியந்து போக
பணியக் கட்டுங்கள்
(குருவிக்குஞ்சே)

**முல்லைக்கமல்**

## குறுக்கெழுத்துப் போட்டி 23




### இடமிருந்து வலம்

01. சந்திரன் தோன்றாத இரவு.
08. பழவகைகளில் ஒன்று.
11. இது இல்லை யேல் சொல் இல்லை என்பர்.
21. தோடு.
30. மலர்.
33. தானியங்களில் ஒன்று குழம்பி உள்ளது.

### மேலிருந்து கீழ்

01. குளத்தைப் பாதுகாப்பது.
02. இங்கு திருக்கேதீஸ்வரம் உள்ளது.
03. காற்றுகளின் வகைகளில் இதுவும் ஒன்று.
06. ஊர்வனவற்றில் ஒன்று.
11. நட்சத்திரங்களில் ஒன்று.
22. இதற்குப் பலர் ஆசைப் படுவர் குழம்பிஉள்ளது.

### குறுக்கெழுத்துப்போட்டி இல.21 இன் விடைகள்

| இடமிருந்து வலம் | மேலிருந்து கீழ் |
|---|---|
| 01. சந்திரமதி. | 01. சங்கிலியன். |
| 07. சிங்கம். | 06. திரவம். |
| 14. கடிகாரம். | 08. சிகரம். |
| 20. கதிரவன். | 10. காகம். |
| 33. கடிதம். | 21. திங்க(ள்) |
| | 29. தச(ம்) |

**குறுக்கெழுத்துப்போட்டி இல.21 இன் பரிசுக்குரியவர்**
**த.சி.சயந்தன்,**
**யா/யாழ்ப்பாணக் கல்லூரி,**
**வட்டுக்கோட்டை.**

குறுக்கெழுத்துப் போட்டி 09ன் பரிசுக்குரியவரும், 11ன் பரிசுக்குரியவரும் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெற்றுக் கொள்ளவும்

### குறுக்கெழுத்துப்போட்டி இல.21 இன் பாராட்டுக்குரியவர்கள்.

01. சு.எரிக்கிளிண்ட, வ/தமிழ் மத்திய ம.வி, கணேசபுரம்,வவுனியா.
02. வி.நரேஸ்குமார், திருநகர், கிளிநொச்சி.
03. கு.விஜிதன், 5ம் வட்டாரம், குமுளமுனை.
04. எஸ். வசந்தி, தமிழீழம்.
05. அ.லக்ஷிகன், கிளி/பளை.றோ.க.த.க. பாடசாலை.


இளையவர்களே! ☞
மேலுள்ள கட்டத்தை வெட்டி சரியான சொற்களை இட்டு நிரப்பி தங்கள் பெயர் முகவரியை இணைத்து அனுப்புங்கள்.

குறுக்கெழுத்துப்போட்டி இல.23
**வெள்ளிநாதம்**
**ஈழநாதம்.**
முதன்மைச்சாலை,
கிளிநொச்சி.

## தாயகம் பற்றி அறிவோம்

01. தமிழீழத்தின் தென் எல்லை மாவட்டம் எது?
அம்பாறை.
02. தமிழீழத்தின் வட எல்லைமாவட்டம் எது?
யாழ்ப்பாணம்.
03. தமிழீழத்தின் மேற்கு மாவட்டம் எது?
மன்னார்.
04. தென்தமிழீழத்தில் எத்தனை மாவட்டங்கள் உள்ளன?
மூன்று.
05. வடதமிழீழத்தில் எத்தனை மாவட்டங்கள் உள்ளன?
ஐந்து.
06. வன்னியில் உள்ள மாவட்டங்கள் எத்தனை?
நான்கு.
07. அம்பாறை மாவட்டம் உருவாக்கப்பட்ட ஆண்டு எது?
1961ஆம் ஆண்டு.
08. முல்லைத்தீவு மாவட்டம் உருவாக்கப்பட்ட ஆண்டு எது?
1978ஆம் ஆண்டு.
09. கிளிநொச்சி மாவட்டம் உருவாக்கப்பட்ட ஆண்டு எது?
1984ஆம் ஆண்டு.
10. சிங்கள உதவி அரச அதிபர் பிரிவுகளைக் கொண்ட மாவட்டம் எவை?
வவுனியா,திருகோணமலை,அம்பாறை.

**த. அருவி**




இந்தப் படத்தில் இருப்பவை ஆரம்ப காலச்சைக்கிள்கள். மரச்சக்கரங்களைக்கொண்ட கால்களால் தரையில் ஊன்றி ஓடும் முதற்சைக்கிள்.



பெரியசக்கரமும், சிறியசக்கரமும் கொண்ட இரண்டாம்தலைமுறைச் சைக்கிள்கள்.

## நட்டமில்லை



# தாமரைச்செல்வியின் படைப்புகள்... கேள்விகளும் விமர்சனங்களும் இணைந்தகுரல்

## படைப்பாளியும் படைப்புகளும்...

கருணாகரன்




> **தாமரைச்செல்வி தன் கதைகளில் காட்டுவது போல நம் சமகாலத்தில் இவ்வாறான வாழ்க்கைதான் பெரும்பாலான மனிதர்களுடையது. ஒரு சமகால அறிக்கைபோல நமது சமூகத்தின் வெட்டுமுகமாக இதை அவர் முன்வைத்திருக்கிறார்.**

தாமரைச் செல்வியின் ஆறாவது நூல் 'அழுவதற்கு நேரமில்லை' 'ஒரு மழைக்கால இரவு' என்ற இவருடைய சிறுகதைத் தொகுப்பு வந்ததற்குப் பிறகு இப்போது 'அழுவதற்கு நேரமில்லை' வந்திருக்கிறது. இது இவருடைய இரண்டாவது சிறுகதைத் தொகுதி. இவற்றில் பெரும்பாலான கதைகள் தொண்ணூறுகளில் நிகழ்ந்த இடம் பெயர்வுகளைப் பேசுபவை. இராணுவ ஆக்கிரமிப்பையும் அதன் கொடூர முகத்தையும் அதனால் ஏற்பட்ட சாதாரண உழைப்பான மனிதர்களின் வாழ்க்கை அவலத்தையும் வெளிப்படுத்துபவை.

தாமரைச்செல்வி முப்பது வருடங்களாகத் தொடர்ந்து எழுதிவருகிறார். வன்னிவாழ்க்கையின் அனுபவங்களைச் சார்ந்த எழுத்தே பெரும்பாலும் தாமரைச்செல்வியினுடையவை. அதிலும் சாதாரண மனிதர்களை, உழைப்பாளிகளை, அவர்களின் வாழ்க்கையைப் பேசுவதிலேயே தன்னுடைய கூடுதலான கவனத்தை தாமரைச்செல்வி வைத்திருக்கிறார்.

நாங்கள் அறிந்த சம்பவங்கள், பிரச்சினைகள் பற்றித் தானே தாமரைச்செல்வி எழுதுகிறார் என்று இவருடைய கதைகளைப் படிக்கும்போது தோன்றும். எங்களுக்குத் தெரிந்த மனிதர்களையும் மனித இயல்புகளையும் அவர்களின் நடத்தைகளையும்தான் வெளிப்படுத்துகிறார் என்றும் படும். ஆனால் இவை எல்லாவற்றையும் அறிந்தும் தெரிந்துமிருக்கின்ற இந்தச் சமூகத்துக்கு -எமக்கு தாமரைச்செல்வி இவற்றை மீண்டும் சொல்கிறார், உணர்த்துகிறார், நமது விழிகளைத் திறந்து ஒளிபாய்ச்சுகிறார், காதுகளின் மீது முரசறைகிறார், கவனத்தைத் திருப்பும்படி உரிமையுடனும் உறுதியுடனும் கேட்கிறார். இவற்றுக்கு, இந்தப் பிரச்சினைகளுக்கு, இந்த அவலங்களுக்கு என்ன பொருள் என்கிறார்? இவற்றுக்கான பதிலென்ன என்று கேட்கிறார்.

தாமரைச்செல்வியின் இந்தக்கேள்விகள் நேரடியானவையல்ல. உள்ளொலிப்பானவை. உணர்த்துதலானவை. பிரச்சினைகளை நமக்குமுன் நிகழ்த்திக்காட்டுவதன் மூலம் (கதைகளினூடாக) நாம் உணரவேண்டுமென வேண்டுபவை, நியாயம் கோருபவை.

ஏனென்றால், நம்மிற் பலரும் நன்கறிந்த பிரச்சினைகளுக்குகூட நாம் தீர்வுகளை காணமுனைவதில்லை. அவலங்களைத் தீர்க்க உதவுவதில்லை. வாழ்வில் கணந்தோறும் துன்பப்படுபவரின் வேதனைபற்றிப் பேசுவோம். அந்தத் துன்பத்தில் பங்கெடுப்பதில்லை. அந்த வலிபற்றி நமக்கு எதுவும் தெரிவதில்லை. முன்னர் அத்தகைய வாழ்பனுபவம் உடையவர்கள் கூடபின்னர் அந்த நிலைமையிலிருந்து மீண்டுவிட்டால் கடந்தகால வாழ்வை, அதன் அனுபவத்தை, அந்த வலியை சுலபமாக மறந்துவிடுகிறார்கள். இன்று துன்பப்படுபவர்பற்றியோ, அவலமுறுவோர் பற்றியோ, வலியுடையோர் பற்றியோ யோசிப்பதேயில்லை. உதவ நடக்கும் செயற்பாடுகளில்கூட அவற்றிலிருக்கும் விதிமுறைகளும் அணுகுமுறைகளும் இந்த அவலங்களையும் பிரச்சினைகளையும் தீர்ப்பதற்குரியமாதிரி இருப்பதில்லை. இதனால் தொடர்ந்தும் இன்னற்படுவதே வாழ்வாக, தொடர்கதையாக இருக்கிறது, இந்த மனிதர்க்கு. தாமரைச்செல்வி இவற்றை உணர்த்துகிறார் நேரடியாக அல்ல. அவரது பாணியான மறைபொருளில்.

உதவிகளற்ற ஏழை மனிதர், உதவிகளெதையும் பெறமுடியாத வாழ்நிலைமையுடையோர், ஆதரவு குறைந்த குடும்பங்கள், உடலுழைப்பையும் உண்மையையும் நேர்மையையும் மட்டுமே நம்பிவாழும் மக்கள் இன்று எப்படி வாழ்கிறார்கள்? எவ்வாறெல்லாம் வாழ வேண்டியிருக்கிறது என்பதை மிகவலிமையாக முன்வைத்திருக்கிறார் தாமரைச்செல்வி. தன்னைச் சுற்றியிருக்கும் சமூகத்துடன் தனக்கிருக்கும் உறவை இதன் மூலம் சாட்சியாக்குகிறார். தன்னுடைய கரிசனைப்பிராந்தியத்தை இதனூடாக வெளிப் படுத்துகிறார்.

இவரது கதைகள் எல்லாவற்றிலும் உள்ளோட்டமாக பொதுவான ஓரம்சம் பின்னப்பட்டிருக்கின்றது. இனவாத அரசியல் ஏற்படுத்திய விளைவுகளில் சாதாரணத்தமிழ்மக்கள் உழைப்பான மனிதர்கள் படும் அவலமும், துயரமும். வாழ்வுக்கான அவர்களின் அலைச்சலும் எப்படியென்பதே அது. எத்தனை உதவும் நிறுவனங் களிருந்தும் இந்த அவலமும் துயரமும் தீராதிருப்பதன் காரணமென்ன?

தாமரைச் செல்வி தன் கதைகளில் காட்டுவது போல நம் சமகாலத்தில் இவ்வாறான வாழ்க்கை தான் பெரும்பாலான மனிதர்களுடையது. ஒரு சமகால அறிக்கைபோல நமது சமூகத்தின் வெட்டுமுகமாக இதை அவர் முன்வைத்திருக்கிறார்.

இதற்கான பதிலென்ன? ஒரு பக்கம் இனவாத அரசியலின் தாக்கங்கள். மறுபக்கம்சகமனிதரின்துயர் கண்டும் பாராதிருக்கும் நமது சமூகம். நம்மீதான ஒரு விமர்சனமாகவே 'அழுவதற்கு நேரமில்லை' இருக்கிறது. அழுவதற்கும் விதியற்றோராக இருப்பவர்களுக்கு நாம் ஒவ்வொருதரும் என்ன ஆதரவளித்துள்ளோம்? எவ்வாறு துணையிருந்திருக்கிறோம் என்று கேட்கின்றன இந்தக் கதைகள். இதனூடாக நம்மை நியாயப் பிராந்தியத்திற்கு அழைக்கிறார். விழிப்புணர்வூட்டி சகமனிதரின்பால் கரிசனை கொள்ளத் தூண்டுகிறார். நாம் வாழும் காலத்தில், நமது சூழலில் இப்படி ஒரு பெரும் பரப்பிருக்கும் போது நாமெப்படி பெருமைப்பட முடியும், நிம்மதியடையமுடியும், மகிழ்ந்திருக்க முடியும் என்று கேட்கிறார். இந்தக் கேள்விகள் நியாயமானவை. ஒரு படைப்பாளிக்குரிய தார்மீகப்பொறுப்புணர்வின் பாற்பட்டவை. வாழத் துடிக்கும் மனித சமூகத்தின் உயிரோடிணைந்தவை. உண்மையையும் நீதியையும் ஆதரவையும் வேண்டி நிற்பவை.

சாதாரண மனிதரின் வாழ்க்கையை எழுதும் தாமரைச்செல்வியின் மொழியும் மிக எளிய முறையிலானதுதான். எல்லோரும் இலகுவில் படித்துவிடக்கூடியது, புரிந்து கொள்ளக் கூடியது. அவரது நோக்கமும் அதுதான். பரந்த வாசகப்பரப்பை நோக்கியது. அதனாற்தான் இந்தக்கதைகள் பரந்தளவிலான வாசகப்பரப்பையுடைய மீடியாக்களில் வெளிவரக் கூடியதாகவும் இருந்துள்ளன.

துயரங்களின் மொழியூடாக நகர்ந்து வலிமையுடன் உண்மையைக் கூறும் நுட்பத்தில் தேர்ந்திருக்கிறார் தாமரைச் செல்வி. பொய்யான நம்பிக்கைகளைப் புனைந்து தள்ளுவதில் தனக்கு உடன்பாடில்லை என்பதை தன் எழுத்தில் எப்போதும் காட்டுவதுபோல இந்தக்கதைகளையும் எழுதியுள்ளார். பலதும் சம்பவங்கள்தான். அல்லது சம்பவங்களூடான மனித உறவுகளின் நிலைகள், இயல்புகள், பிரச்சினைகள் தான். ஆனால், அவற்றை சிதைக்காமல் எழுதுவதனூடாக அவர் வெற்றிபெறுகிறார். தான் வாழும் காலத்தினதும் சூழலினதும் சரியானதொரு சாட்சியாகிறார். இதுதான் தாமரைச்செல்வியின் சிறப்பும் பலமும்.

ஷெல்லடியிலிருந்து, இடம்பெயர்வு, அகதிவாழ்க்கை, பசி,வறுமை,இழப்பு, துன்ப துயரமே நாளாந்த நிகழ்வு என்பவற்றினூடாக கிளிநொச்சி இடப்பெயர்வு - சத்ஜெய நடவடிக்கை முதல் ஓயாத அலைகளின் பின் கிளிநொச்சி நகர்மீளல் வரையில் சமகால வரலாற்றாவணமாகவும் இந்தக்கதைகள் முகம் கொள்கின்றன. எங்களின் சிறுகதைப் போக்கிலும் அரசியற் கதைகளின் வெளிப் பாட்டிலும் முக்கியமான இடத்தை இவை இந்தப்பண்புகளால் பெற்றேயிருக்கின்றன. இது தாமரைச்செல்வியை எப்பொழுதும் பொதுமனிதரிடம் 'தங்களின் படைப்பாளி' என்ற உணர்வைத்தந்து அவரை வாழவைக்கும்.

பலவகையிலும் நோக்குகையில்-

முப்பதுவருட கால வன்னிவரலாற்றின் பதிவுகளில், வெளிப்பாடுகளில் தாமரைச் செல்வியின் பங்களிப்பு முக்கியமானதாகிறது. அதுவும், போர்க்கால வாழ்வின் அனுபவங்களோடு சேர்ந்து பார்க்கையில் இந்தப் பங்களிப்பின் முக்கியத்துவம் இன்னும் கூடுதலாகவே தெரிகிறது.


## இதுவரையான வெளியீடுகள்

மீண்டும் யாழ் மண்ணில் பதிந்த எம் தடங்கள்



எழுதியவர்: சங்கர்
வெளியீடு :அறிவமுது பதிப்பகம்.
(ஆனையிறவுச் சமர்க்களத்திலிருந்து நேரடி விவரணம்)

ஒரு பயணியின் நிகழ்காலக் குறிப்புகள்



கவிதைகள்: கருணாகரன்
வெளியீடு : மகிழ் புதுக்குடியிருப்பு

## அறிமுகம்

தமிழறிவோம்



தல் பகுதி 1,2,3



எழுதியவர்: கு.அரசேந்திரன்
வெளியீடு : ஒன்றிய தமிழர் தோழமை ஆத்திரேலியா.

## இசை

தீக்குளித்த நேரம்



நிதர்சனம் தர்மேந்திரா கலையகத்தின் வெளியீடாக ஏழு கவிஞர்களின் பாடல்கள்
இசை -இசைப்பிரியன்
ஒலிப்பதிவு - மகாமினி கலைக்கூடம்



# உலகம் எங்கள் கையில்



**தமிழர்** தாயகமெங்கும் இப்போது சூழல் எழுச்சி, பாதுகாப்புப் பற்றிக் கதைக்கப்படுகிறது.


காலத்தின் தேவையறிந்து அழைக்கப்படும் இவ் எழுச்சித் தாயகத்தை காப்பதற்காகவே போர் ஓய்ந்துள்ள இவ்வேளை எமது சூழல் மாசடைவதிலிருந்து தப்புவதற்கு அதிகம் போராட வேண்டியுள்ளது.

சூழல் மாசடைவின் மூலகாரணம் மனிதனின் இயற்கைக்கு மீறிய செயல்களே. நாங்களும் கடந்த காலத்திலும் பார்க்க இப்பொழுது அதிகம் சூழலை எதிர்க்க ஆரம்பித்து விட்டோம் என்பது உண்மையே. திறந்து விடப்பட்ட சந்தைகளும் சமாதான நிலையும் எங்கள் தெருக்களில் பொலித்தீன் களையும் வீடுகளில் பிளாத்திக்கு களையும் நிறைக்கும் படி ஆக்கி விட்டது. இதற்காகவே மே29 - யூன்04 வரையும் சூழல் எழுச்சி வாரமாகவும் யூன்05 - யூன்19 வரை சூழல் பாதுகாப்பு வாரமாகவும் கடைப்பிடிக்கப்படுகின்றது.

இப்புவியில் வாழும் உயிரினங்களில் மனிதன் மட்டுமே மேற்கொள்ளும் இப் பாரிய நாசவேலைக்கு முழுமனித சமூகமே பொறுப்பேற்க வேண்டும்.

## நிலம் மாசடைதல்

சூழல் என்று நோக்கும் போது முதலில் எமது கருத்திற்கு வருவது நிலமே. இயற்கை வளங்களில் முதன்மையானது நிலம் தான். ஆனால் இந்நிலம் பல்வேறு



மனித செயற்பாடு களால் மாசடைந்து வருகின்றது. ஆண்டிற்காண்டு அதிகரிக்கின்ற சனத் தொகைக்கு உணவூட்டுவது நிலமாகும். அதற்காக ஏக்கருக்குரிய விளைச்சலை அதிகரிப்பதற்காக பல்வேறு பட்ட பசளை வகைகள்., கிருமிநாசினிகள், என்பவற்றை மனிதன் உபயோகிக்கத் தொடங்கியுள்ளான். இதனால் மண்ணுக்கு நன்மை செய்யும் பூச்சிகள் ,புழுக்கள் மண்ணில் உள்ள கனிய வளங்களும் . அழிவடைகின்றன. இது மட்டும் இன்றி. பூச்சி,புழுக் களைத் தின்று வாழும் பறவை இனங்களும். பாதிப்படைகின்றன. மேலும் நிலத்தில் மண் புழுக்கள் ஊர்ந்து திரிவதால் மண்ணினுள் காற்றோட்டம் இருக்கும்.

இரசாயனங்களின் மூலம் மண் புழுக்கள் இறந்துவிடும். இதனால் மண் வளம் குன்றும். காடுகள், புல்வெளிகள், என்பன வற்றை விரைவாக அழிப்பதனால் அங்கு வாழும் பறவைகள், விலங்குகள் என்பன அழிக்கப்படுகின்றன. தாவரப் போர்வை நீக்கப்பட்ட மண் இலகுவில் மண் அரிப்பிற்கு உள்ளாகின்றது. இவ்வாறான வளமற்ற நிலங்கள் ஐக்கிய அமெரிக்காவின் மத்திய பிரதேசம். வட இங்கிலாந்து, ஸ்பெயின் ஆகிய நாடுகளில் மனிதனால் ஆக்கப்பட்ட இத்தகைய பயனற்ற நிலங்களைக் காணலாம்.

இலங்கையிலும் சேனைப்பயிர்ச்செய்கையால் பல நிலங்கள் வளமற்று போயிருக்கின்றன. இன்று அவை மண்ணரிப்பிற்கு உள்ளாகித் தரிசு நிலங்களாக காணப்படுகின்றது.

## ஓசோனைப் பாதுகாப்போம்

நாம் அனைவரும் கொண்டுள்ள நவீனத்துவ மோகத்தால் எம்மைத் தாய்போல் பாதுகாக்கும் ஓசோன் கவசத்தினைத் தாக்கத்திற்கு உள்ளாக்கிக் கொண்டிருக்கின்றோம். அதனுடைய சேதத்திற்குக்காரணம் குளிர் சாதனப் பெட்டிகளில் இருந்தும், வெவ்வேறு தொழில் நுட்கங்கள் மூலமும் வெளி விடப்படும் குளோரோ புளோரோகாபன் ஆகும். அத்துடன் அதிவேக விமானங்களும். விண்வெளி ஆராச்சிக்காகச் செலுத்தப்படும் விண்கலங்களும், ஓசோன் கவசத்தில் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. இந்த ஓசோன் கவசம் எம்மை கழிவூதாக் கதிர்களின் தாக்கத்தில் இருந்தும். சூரியனில் இருந்தும் வரும் பல ஆயிரக்கணக்கான டிகிறி வெப்பத்தில் இருந்தும் பாதுகாக்கின்றது.

இது சேதமடைந்து செல்வதால் பூமியின் வெப்பநிலை கூடியுள்ளதோடு கழிவூதாக்கதிர்களின் தாக்கத்தால் பல்வேறு நோய்களும் ஏற்பட்டு உயிரினங்களுக்குப் பெரும்தீங்கு ஏற்படுவது இன்று அறியப் பட்டுள்ளது.

எனவே இவ் அரிய ஓசோன் கவசத்தைப் பாது காக்கும் நடவடிக்கைக்கு அனைவரும் ஒத்துழைத்தால் நாம் எதிர் நோக்கிக் கொண்டிருக்கும் பேராபத்திலிருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்ளலாம்.

## வளிமண்டலத்தில் அதிகரித்து வரும் காபனீரொட்சைட்

காபனீரொட்சைட்டைக் கரியமில வாயு என்று சொல்லப்படும். இக்காபனீ ரொட்சைட்டானது வளி மண்டலத்தில் குறிப்பிட்ட அளவிற்கு மேல் இருப்பது நன்மையானதல்ல.



காபனீரொட்சைட்டானது கைத் தொழிற் புரட்சிக்கு முன்னர் இருந்ததை விட இன்று வளிமண்டலத்தில் அதிகரித்துக் காணப்படுகின்றது.

இக்காபனீரொட் சைட்டின் அதிகரிப்பும், வளிமண்டலத்தின் வெப்பநிலை உயர்விற்கும். பிரதான

**இ.சகீதா**

காரணியாகும். நிலக்கரி, பெற்றோலியம், இயற்கை வாயு முதலான உயிர்ச்சுவட்டு எரிபொருட்களை எரிப்பதன் மூலம் வருடா வருடம், இரண்டு மில்லியன் தொன் காபனீரொட்சைட் வளிமண்டலத்தில் சேர்கின்றது என்று மதிப்பிடப் பட்டுள்ளது. மின் உற்பத்திக்காக இவை பெருமளவில் எரிக்கப்பட்டு வருகின்றன.

பெற்றோலியத்தை எரிக்கும் மோட்டார் வாகனங்களினாலும் வளி மண்டலத்தில் காபனீரொட்சைட் சேர்கின்றது. அத்துடன் காடுகளை அழித்து எரிப்பதால் வருடாவருடம். இரண்டு மில்லியன் .தொன் காபனீரொட்சைட் வாயுடன் சேர்கின்றது. வளிமண்டலத்தில் அதிகமான காபனீரொட்சைட்டைச் சேர்க்கும் நாடுகளாக கைத்தொழில் நாடுகள் விளங்குகின்றன. இதனால் அனைத்து நாடுகளுக்கும் அபாயம் ஏற்படும் நிலை உள்ளது.

## நீர்வளம் மாசுபடல்


உயிர் வாழ்க்கைக்கு காற்றைப் போல நீரும் இன்றியமையாத ஓர் அம்சமாகும். புவியில் நடைபெறும் ஒவ்வொரு செயற்பாட்டிற்கும் நீரின் முக்கியத்துவம் உணரப்படுகின்றது. கடலுணவைக் கடலில் இருந்து பெறுகின்றோம். இக்கடல் மனித செயற்பாட்டால் மாசடைகின்றது. கடலோரத்திலுள்ள தொழிற்சாலைக் கழிவுகளாலும் கடற் போக்குவரத்தின் போது கடலில் அமுழும் எண்ணெக்கப்பல் களாலும் கடல்நீர் அசுத்தமடைகின்றது. 1967ல் சோறேகள் யோன்என்ற எண்ணெய்க் கப்பல் கோன் வோல் அருகில் மூழ்கியதால் ஆயிரக்கணக்கான கடற்பறவைகள் அழிந்து போயின. சமுத்திரங்களில் எண்ணெய்க் கிணறுகள். தோண்டப்பட்டு பெற்றோலியம் எடுக்கப்படுகின்றது. இதனால் இன்று ஏறத்தாழ 20000கலன் எண்ணெய் ஒவ்வொரு நாளும் கடலுடன் கலக்கின்றது. இந்த எண்ணெய் நீரோட்டத்தின் போது எல்லா இடங்களிற்கும் எடுத்துச் செல்லப்படுவதால் டொல்பின், சீல். போன்ற கடல் வாழ் உயிரினங்கள் அழிந்து போகின்றன.

நீர் மாசடைவு என்பது எமது தாயகத்திற்கு ஏற்பட்டிருக்கும் ஒரு பாரிய அச்சுறுத்தலே. நாம் அதிகம் நம்பியிருக்கும் நிலக் குடி நீர் தற்போது விரைவாக வற்றிவருகின்றது உவராகி வருகின்றது. கடலுக்கும் தண்ணீர் நிலைகளுக்குமாக தொடர்பு, சரியான விதத்தில் மழைநீர் நிலத்தின் கீழ் போகாது தடுக்கப் படல் என்பனவே இதற்கு அதிகம் காரணமாகிறது.

கடற்கரைகளில் பாறைகள் அகழ்தல் மண் அகழ்தல், மரங்களைத் தறித்தல் என்பன கடல் நீர் தரை நீருடன் தொடுபட ஏதுவாகின்றது. அதேபோது அதிகரித்த பொலித்தீன் பாவனை செயற்கை கழிவுப் பொருட்கள் என்பன மண்ணில் மேற்படிவதால் மழைநீர் முழுவதுமே நிலத்தின் மேலால் ஓடிச்சென்று கடலிலே கலந்துவிடுகின்றது. இதனால் நிலத்தடி நீர் வற்றி குறைந்து போய்விடுகிறது.

எமது தாயகம் எதிர்கொண்டிருக்கும் ஒரு இக்கட்டான சூழல் என்பது பல நவீன சூழல் பாதுகாப்பு மாற்றீடு வழிமுறைகளை பெறுவதற்கு தடையாகயிருப்பதை பயன்படுத்தி நாம் செய்யும் சூழல் மீதான அத்துமீறல்களை நிறுத்த வேண்டும்.


கிருமிநாசினிகளினால் மனிதன் தனக்குத் தானே நஞ்சிட்டுக் கொள்ளுகின்றான் என்பதில் சந்தேகமில்லை. டி.டி.ரி. என்ற கிருமிநாசினி கண்டு பிடிக்கப்பட்ட போது நோபல் பரிசு வழங்கப்பட்டது. ஆனால் இன்று அக்கிருமிநாசினி பாவிப்பதற்குத் தடை விதிக்கப் பட்டுள்ளது. காரணம் சூழல் மாசடைதலாகும். பயிர்களுக்குத் தெளிக்கப்படும் கிருமிநாசினிகள் அப்பிரதேசத்தில் மாத்திரம் தங்கியிருப்பதில்லை. காற்றுடன் கலந்து ஏனைய பிரதேசங்களுக்கும் பரவுகின்றது. செயற்கை உரங்களும். நச்சுக்கிருமி நாசினிகளும் பயன் படுத்தி விளை விக்கப்பட்ட உணவுகளையே நாமும் உண்ணுகின்றோம். இரசாயனங்கள்



மூலம் எமக்கும் எம் சந்ததிக்கும் நாமே நஞ்சிட்டுக் கொள்வதால் இயன்ற வரை அவற்றின் பாவனையைத் தவிர்த்து இயற்கை நாசினியைப் பயன்படுத்துவோம.

---

## ஊக்கமாத்திரை



# உன்னை அறிந்தால் உலகத்தில் நீ வாழலாம்

நான்யார்? என்னிடம் என்ன திறமைகள் இருக்கின்றன? இப்படியெல்லாம் நாம் கேட்டுப்பாத்திருக்கின்றோமா? உன்னையேநீ அறிவாய் என்று தத்துவ மேதை சோக்கிரட்டீஸ் இளைஞர்களுக்கு அறைகூவல் விடுத்தார். என்னை எனக்கு அறிவித்தான் எங்கள் குரு நாதன் என்றார் சிவயோக சுவாமிகள்.

நம் எல்லோரிடமும் ஏதோ திறமைகள் ஒளிந்திருக்கின்றன. அதை நாம் இனம் காணவேண்டும். முகத்தைப் பார்க்க ஒரு கண்ணாடி தேவைப்படுவது போல எமது மனத்தைப்பார்க்கவும் ஒரு சில சந்தர்ப்பங்கள் தேவைப்படுகிறது.

எமது தமிழ்ச் சமூகத்தில் பிள்ளைகள் தன்னம்பிக்கையோடு வளர்க்கப்படுவதில்லை. பொத்திப் பொத்தியே வளர்க்கிறார்கள். அதிலும் பெண் பிள்ளைகள் என்றால் சொல்லத்தேவை இல்லை.

பல குடும்பங்களில் பிள்ளைகள் வளர்ந்துவிட்டார்கள் என்பதை ஏற்றுக் கொள்ளத் தேவையில்லை. அவன் சின்னப் பொடியன், அவனுக்கு ஒன்றும் தெரியாது, அவன் சரியான பயந்தாங்கொள்ளி என்று பெற்றோர்கள், தாமே முடிவு கட்டி, முளையிலேயே பிள்ளைகளை மழுங் கடித்துவிடுவார்கள்.

அத்துடன் பிள்ளைகளின் சுதந்திரமான சிந்தனைகளுக்கு பல பெற்றோர்கள் இடம் அளிப்பதில்லை. குறிப்பாக இளைஞராகிவிட்ட பிள்ளைகளையாவது சுதந்திரமாக இயங்க விடவேண்டும். நல்லது கெட்டதைச் சொல்லிக் கொடுக்கலாம். ஆனால் இரகசியப் பொலிஸ் போல் பிள்ளைகளை எந்நேரமும் மோப்பம் பிடிப்பதையும், இளமைக்கேயுரிய செயற்பாடுகளுக்குத் தடை போடுவதையும் விரும்பத்தக்கதல்ல.

இளமை என்பது மனித வாழ்வில் பொற்காலம். எதையும் சாதிக்கின்ற ஆர்வம் அரும்புகின்ற வயது. திறமைகளுக்கு செயல் வடிவம் கொடுத்து சாதிக்கக் கூடிய வயது. தீயதிசையில் செல்வதைத் தடுத்து நிறுத்தும் அதேவேளையில் நல்ல விடயங்களைத் தட்டிக் கொடுத்து உற்சாகப்படுத்த வேண்டும்.

இளைஞர்களே, யுவதிகளே வெறும் உடல்க்கவர்ச்சிக்கும், அடிமை கொள்ளவைக்கும் பழக்கவழக்கங்களுக்கும் இடம் கொடுக்காதீர்கள். வாழ்விலே முன்னேறும் வழிகளைப் பற்றிச் சிந்தியுங்கள். செயற்படுங்கள். தோல்விகளைக் கண்டு துவண்டு விடாமல், உங்களைத் திருத்திக் கொண்டு மறுபடியும் முயலுங்கள். வெற்றி நிச்சயம்!

வெறும் பாடப்புத்த கங்களிலோ, பருவ எண்ணங்களிளோ மட்டும் ஊறிப் போய் விடாமல் உங்களைச் சுற்றியிருக்கும் உலகைப் பாருங்கள். அங்கு அனுதினமும் தரிசனமாகும் சாதனைகளை உங்களைப் போன்றவர்கள் தான் சாதித்திருக்கிறார்கள். எனவே உங்களாலும் சாதனைகள் புரிய முடியும்!

அதற்கு முதல் தேவைப் படுவது - உன்திறமைகளை நீ அறிந்து கொள்வதே!

**ச.முருகானந்தன்.**

அறிவதற்கு அருகதை அற்றவற்றை அறியாமல் இருப்பது அறிவின் ஓர் அம்சம். - க்ரேட்ஸ்



# வரலாறு தந்த துயரம்

## ஈராக்கிய குடிமகனின் வாக்குமூலம் - 03

**"அவன் ஒரு ஊத்தைவாளி"** 'கிளாசில் இருந்து எழுந்த வாய் சொல்லியது. நான் அதைப் பகிடியாகவே ரசித்தவாறு காட்டி சதாமை மாதிரியே மீசை வைத்திருக்கிறீர்களே என்றேன்.'

வாய்விட்டுப் பெரிதாகச் சிரித்தார். **"இது அங்கு வழமைக்கு மாறானதல்ல. இது தான் அங்கு ஆகப்பிந்திய ஸ்ரைல். உங்களுக்குத் தெரியுமா சாதம்ஹுசைனும் ஒரு அணில் மன்னன்.(Stun King) தன்னை அலங்கரிப்பதில் மிகவும் சிரத்தை எடுத்துக் கொள்பவர்"** என்றார்.

"நான் கேட்பதை எண்ணிக் குறை நினைக்க மாட்டீர்கள் என்று நினைக் கிறேன். சாதாமைப்பற்றி ஈராக்மக் களாலேயே வெறுக்கத்தக்க மனிதர் என்று நாம் ஊடகங்களிலோ வேறுவழி களிலோ



இதுவரை கேள்விப்பட்ட தில்லையே" என்று கேட்டேன்.

சிரித்துவிட்டு ஒரு ஆச்சரியம் கலந்த ஏளனத் தொனியோடு சொன்னார். **"நீங்கள் என்ன? நாங்களும் தான் அப்படிக் கேள்விப்படுவ தில்லை. அப்படிக் கேள்விப்பட நேர்ந்தால் அவர்கள் இருந்த தில்லை."**

இதுபற்றி அவர் என்னுடன் கதைத்த விடயங்கள் என்னைப் பிரமிப்பூட்டின. தினமுரசு இடியமின் தொடரை அவ்வப் போது ஞாபகப்படுத்த முயன்றன. இந்த உணர்வுக்கு எதிர்மாறான உணர்வையும் பின்னர் வந்த உரையாடலில் பெற்றேன் தான். ஆனால் இந்த இடத்தில் அவர் கூறியது சற்றுமிகையாகத் தொனிப்பது போன்ற ஆச்சரியம்.

**"நாங்கள் எங்கள்சகோதரர் களுக்கிடையில் கூட சாதாம் ஹுசைனைப்பற்றி எதுவும் கதைப்பதில்லை. எங்களால் அப்படித் துணிய முடியாது. ஆனால் ஒருவருக்குமே சதாமைப் பிடியாது. பலரும் ஆண்டவனிடம் வேண்டுவ தெல்லாம் சதாமுக்கான ஒரு சாவையே. ஈராக்கின் எந்த மூலையில் யார் சதாமைப்பற்றிக் கதைத்தாலும் அடுத்தகணமே அவரது கட்டுப்பாட்டில் இருக்கும் புலனாய்வுப்பிரிவிற்கு தகவல் சென்றுவிடும். தண்டனை பயங்கரமானது. மரணதண்டனை. நான் கதைத்தேன் என்றால் தண்டனை எனக்கு மட்டுமல்ல, எனது மனைவிக்கும், எனது பிள்ளைகளுக்கும்தான். குழந்தைபிறந்து ஒரு மாதமேயானாலும் அந்தப்பிஞ்சுக் குழந்தையும் கொல்லப்படும். எதிர் காலத்தில் குழந்தைவளர்ந்து அரசியல் எதிரியாக உருவாகிவிடக் கூடாது. இதை அனுமதித்தால் இப்படியொரு கூட்டமே வருங்காலத்தில் உருவாகிவிடும் என்று அவர்கள் தங்கள் தர்க்கப்படி நினைக்கிறார்கள். இப்படியிருக்க எப்படி அவர் பற்றிப் பிழையாகக் கேள்விப்பட வாய்ப்பிருக்கிறது.**

அவர் தனது இருமகள் களதும் கணவர்களான மருமக் களைச் சுட்டுக்கொன்றவர். குவைத் யுத்தத்தின் பின்பு ஏற்பட்ட நெருக் கடிச் சூழலில் ஈராக்கில் இருந்து வெளிநாடு சென்று சதாம்பற்றிய இரகசியத் தகவல்களை வழங்கினார்கள் என்பதற்காக சில ஆண்டுகள் காத்திருந்து,

**பிரவீன்**

அவர்களிடம் தூதனுப்பி தானிதைப் பெரிதுபடுத்தவில்லை தனது மகள் களோடு சேர்ந்திருக்க வருமாறு சொல்லிவிட்டு அதை நம்பி அவர்கள் வந்ததும் கொன்று தீர்த்தவர் அவர்."

அவர் மீண்டும் கிளாசை வாயில்வைத்தார். அதிர்ச்சி தந்த இந்தத் தகவல்களால் நான் மௌனித்துப் போனேன். கேள்விகள் நாவில் எழ வில்லை.அந்த நேரத்தில் கற்பனையில் ஈராக்கின்சூழலை மனதில் கொண்டுவரவே என்மனம் அவாவிக்கொண்டிருந்ததுபோல் இருந்தது.

நீண்டமௌனத்தின் பின்பு நான்கேட்டேன்.

தனது மகள்கள் இருவரையும் பாதாள அறையினுள்



அடைத்துவைத்திருப்பதாகக் கேள்விப்பட்டிருக்கிறேன் அது உண்மையா? அது அமெரிக்காவின் விசமப்பிரச்சாரம் என்றெல்லவா நான் நினைத்தேன்.

"உண்மைதான் அது பாதாள அறையல்ல. அவரது அறுவத்திநாலு வீடுகளில் அநேகமானவற்றிற்கு நிலத்திற்குக் கீழும் வீடுண்டு. வீடென்றால் ஒவ்வொரு வீடும் ஒரு கிலோ மீற்றர் அகல நீளம் வரும். அவ்வாறான ஒன்றில்தான் அவர்களையும் தங்கவைத்திருக் கிறார். அந்த நிலக்கீழ் வீட்டிற்கு பல வேலையாட்களும் குளியல் தடாகமும் கூட இருக்கும். அதில் ஒன்றில் தான் அவர்கள் வாழ்வதாகக் கேள்வி. ஆனால் அவர்கள் வெளியேவர சதாமின் அனுமதியில்லை."

அங்கு நீதிமன்றங்கள் பொலிஸ் என்று எதுவுமில்லையா? ஒரு நாட்டின் சமூகக் குற்றங்களை எப்படிக்கையாள்வது.

இந்தக் கேள்விக்குக் கிடைத்த பதிலோ தலையைப் பிய்த்துக்கொள்ளும் ஆச்சரியத்தைத்தந்தது.

(அடுத்தவாரம் வரும்)

---

# நேர்நோக்கு

## ஆபத்தான நிதி உதவி...

உலக நாடுகளால் வடக்குக் கிழக்கில் போரினால் அழிவுற்ற கட்ட மைப்புகளை புனர்நிர்மாணம் செய்யவென வழங்கப்படவிருக்கும் நிதியைக் கையாள அதிகாரமுள்ள ஓர் இடைக்கால அமைப்பு அவசியம் என விடுதலைப்புலிகள் வலியுறுத்தி வருகின்றனர்.

தமிழ்பேசும் மக்களின் தாயகத்தில் யுத்தத்தால் சிதைவடைந்த பொரு ளாதாரத்தை மீளக்கட்டமைக்கவும் அப்பிரதேசத்தில் இயல்புநிலையைத் தோற்றுவிக்கவும் கூடிய, தேவையான அதிகாரங்களுடனும் சட்டஅங்கீகாரத் துடனும் திட்டமிடல், செயற்படுத்தலில் புலிகளின் அதிக பங்களிப்புடனும் கூடிய இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்பட வேண்டும். இது புனர்நிர்மாணத்திற்கென கிடைக்கும் நிதியினை கையாள வேண்டும் என்பது முக்கியமான விடயமாகும். இவ்வாறு விடுதலைப்புலிகள் வலியுறுத்துவதற்கான காரணங்களையும் அவர்கள் வெளிப்படுத் தியுள்ளனர்.

அதாவது இனப்பிரச்சினைக்கு நிரந்தரத்தீர்வு காண்பது என்பது தென்னிலங்கையில்நிலவும் அரசியல் சூழ்நிலையில் உடனடிச் சாத்தியம் இல்லை என்பதுடன், இதுவரை காலமும் அவசரப் பணிகளை மேற்கொள்ள வென இணக்கம் காணப்பட்ட பல விடயங்கள் நடை முறைப் படுத் தப் படாமையும் இதற் கானகாரணங்களாக அமைகின்றன.

இலங்கை "சுதந்திரமடைந்த" காலம் தொடக்கம் மாறிமாறி சிறிலங் காவை ஆண்ட சிங்கள ஆட்சியாளர்கள் தமிழ் மக்கள் மீது புரிந்த ஓரவஞ்சனையான செயற்பாடுகளே தமிழ்மக்கள் மத்தியில் தமக்கென ஓர் ஆட்சியை தமது பாரம்பரிய தாயகப் பகுதியில் ஏற்படுத்தவேண்டும் என்ற எண்ணத்தை உருவாக்கின.

அரசியல் ரீதியாக முதன்மை யாகவும், பொருளாதாரரீதியாகவும் அவர்கள் மீது தொடுக்கப்பட்ட திட்டமிட்ட நடவடிக்கைகளே இவ்வாறானதொரு முடிவுக்கு அவர்களைத்தள்ளியது.

அரசியலமைப்பு ரீதியாக அவர்களுக்கு வழங்கப்பட்ட உரிமைகள், பாதுகாப்புகள் படிப்படியாக விலக்கிக் கொள்ளப்பட்டன. தனிச்சிங்களச் சட்ட மூலம், 1972 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் மூலம், சிறுபான்மையினருக்கு யாப்புரீதியாகவேனும் இருந்த சிறிய பாதுகாப்பாகிய 29ஆவது சரத்து ஒழிக்கப்பட்டமை சிங்களத்துக்கும் பௌத்தத்திற்கும் வழங்கப்பட்ட முதன்மை, என பல நடவடிக்கைகள் இதற்கென சிங்கள ஆட்சியாளர்களால் மேற்கொள்ளப்பட்டன.

இதேவேளை பொருளாதார ரீதியாக இலங்கையில் மேற்கொள்ளப் பட்ட அபிவிருத்தித்திட்டங்களில் தமிழ் மக்கள் புறக்கணிக்கப்பட்டனர். பாரிய நீர்ப்பாசன திட்டங்கள் தேசியம் என்ற பெயரில் தமிழ்மக்களின் நிலங்களை அபகரிக்கும் சூழ்ச்சிகளாக மாறின. தமிழர் தாயகப் பகுதியில் அமைக்கப்பட்ட தொழிற்சாலைகள் கூட இவ்வாறானதொரு போக்கிற்கே வழி வகுத்தன.

தமிழ் மக்களின் சுயபொருளா தாரம் கூடத்திட்டமிட்டு சிதைவுறச் செய்யப்பட்டன. உதாரணமாக விவசாய உற்பத்திகள் சந்தைப்படுத்தப்படும் காலத்தில் அதேபொருட்கள் திட்டமிட்டு வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டதன் மூலம், உள்ளூர் உற்பத்திகளின் சந்தைவாய்ப்புகள் பறிக்கப்பட்டன.

காலத்துக்குக்காலம் தூண்டி விடப்பட்ட தமிழ் மக்கள் மீதான வன்முறைகள் மூலம் தமிழ் மக்களின் பொருளாதார நிலையங்கள் அழிக்கப் பட்டன.

மற்றும் தமிழ் மக்கள் உயர் கல்வியில் பெற்றிருந்த மேல் நிலையை வீழ்த்தும் நோக்குடன் பல்கலைக்கழக அனுமதியில் மொழிரீதியான தரப்படுத் தல் கொண்டு வரப்பட்டது.

தமிழ் மக்கள் இவற்றுக்கெதிராக பல்வேறு வழிகளிலும் போராடி போராட்டம் தீவிரம் பெற்ற வேளையிலும் சிங்கள ஆட்சியாளர்கள் தமது ஆட்சியதி காரத்தைக் கைப்பற்றும் நோக்கத்துடன் ஒப்பந்தங்களை எழுதுவதும் பின்னர் அவற்றைக் கைவிடுவதும் வழமையான விடயங் களாகின.

இவையெல்லாம் தமிழ் மக்கள் சிங்கள ஆட்சியாளர்கள் குறித்து என்றுமே மறந்து விடமுடியாத அனுபவங்களாகும்.

ஆனால் புலிகள் தலைமையில் ஆயுதப் போராட்டம் முனைப்புப்பெற்ற பின்னரே தமிழ் மக்களின் போராட்டம் எவ்வளவோ இடர்பாடுகள், தலையீடுகள் மத்தியிலும் ஒரு வளர்ச்சிப்போக்கில் செல்லத் தொடங்கியது.

புலிகள் ஒரு வலுவான உறுதியான நிலையில் நின்று கொண்டு சர்வதேச மேற்பார்வையில் நடைபெற்று வரும் சமாதான நடவடிக்கையில் ஈடுபட்டு வருகையில் கூட எதிர்த்தரப்பாகிய சிறிலங்கா அரசாங்கம் இப்பேச்சு வார்த்தைகளில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப்படுத்தப் பின்னடித்து வருகிறது.

இதற்கு அரசாங்கம் சொல்லும் காரணங்கள் எவையும் புதிதா உருவா கியவையல்ல. அதாவது சமாதான நடவடிக்கைகளுக்கு முட்டுக்கட்டை யாகவுள்ள சந்திரிகாவின் நிறைவேற்று அதிகாரமோ, அல்லது சிறிலங்காவின் அரசியல் யாப்போ சமாதான நடவடிக் கைகள் ஆரம்பிக்கப்பட்ட பின் தோற்றம் பெற்றவையல்ல.

எனவே பேச்சுவார்த்தைகளின் போது காணப்பட்ட இணக்கப்பாடுகளை நடை முறைப்படுத்த இவற்றைக்காரணம் கூறுவது ஏமாற்ற முயலும் ஒரு செயற்பாடாகும்.

இந்நிலையில் இச்சமாதான நடவடிக்கைகளின் விளைவாக கிடைக்க விருக்கும் பாரிய நிதியுதவியைக் கையா ளும் பொறுப்பு சிறிலங்கா ஆட்சியாளர் களின் கைகளுக்கு கிடைப்பதென்பது தமிழ்மக்களுக்கு எதிரான விளைவு களையே ஏற்படுத்தும்.

சிறிலங்காவின் பாரிய அபிவிருத்தித்திட்டமாகிய மகாவலித் திட்டத்துக்கு வழங்கப்பட்ட பலவழங்களை தமிழ் மக்கள் மீதான யுத்தத்துக்குத் திருப்பிய அனுபவம் சிங்கள ஆட்சி யாளருக்கு உண்டு. அதேவேளை அத னால் பட்டதுன்ப அனுபவங்கள் தமிழ் மக்களுக்கும் உண்டு.

**வேலவன்**

நம்பிக்கை, பரிசோதனையாகத் தொடங்கி, அனுபவமாய் முடிகிறது. - வில்லியம் இஞ்

# தமிழ் மக்களின் கல்வி வளர்ச்சிக்கு சுவாமி விபுலாநந்தர் ஆற்றிய சேவைகள்

பேராசிரியர் இ. பாலசுந்தரம்



கல்வியுலகில் சுவாமி விபுலாநந்தரின் கல்விக்கோட்பாடுகள், கல்வித்திட்டங்கள், செயற்பாடுகள், கல்விச்சிந்தனைகள் ஆகியன நிலைபெற்றுள்ளன. கல்வித்துறையில் ஆங்கில விஞ்ஞான ஆசிரியராகக்கால்பதித்த சுவாமிகளின் கல்விப்பணி பல்கலைக் கழகங்களிற் தமிழ்ப்பேராசிரியராக, ஆராய்ச்சியாளராக, நூலாசிரியராக நிறைவுபெற்றது. கற்பித்தலோடு, பாடசாலைகளின் நிர்வாகியாகவும், பள்ளிக்கூடங்களை நிறுவியவராகவும் அவரது கல்விப்பணிகள் விரிவடைந்தன.

"சென்றிடுவீர் எட்டுத்திக்கும் கலைச்செல்வங்கள் யாவுங் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்" என்றும், "பிறநாட்டு .நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும். திறமான புலமையெனில் வெளிநாட்டோர் அதை வணக்கஞ்செய்தல் வேண்டும் . "எனத் தமிழரின் அறிவுத்தேடலை விரிவுபடுத்தியவர் மகாகவி சுப்பிரமணிய பாரதியார். அத்தகு பாரதியாரைத் தமிழ்நாடும் ஈழமும் போற்றத்தக்கவகையில் பெருமைப்படுத்தியவர் சுவாமி விபுலாநந்தர் என்ற விடயங்களை முதலிற் புரிந்து கொள்ள வேண்டும். சுவாமி விபுலாநந்தர் பாரதியார் கண்ட கனவினை நனவாக்குவது போன்று, பிறநாட்டு நல்லறிஞர்களின் சாத்திரங்களையும் விஞ்ஞானக் கண்டு பிடிப்புக்களையும் தமிழ்மொழிக்கு அறிமுகப்படுத்தி அவற்றைத்தமது கல்விச் செயற்பாடுகளிலும் சேர்த்துக் கொண்டார்.

தமிழ் மாணவர்கள் மேற்றிசைச் செல்வங்களையும் விஞ்ஞானக் கல்வியையும் தமிழில் எளிதில் கற்றுக்கொள்ளும் வகையில் கலைச்சொல்லாக்கத்தில் ஈடுபட்டு அத்துறையிலும் தம் சேவையைத் தமிழ் மக்களுக்கு வழங்கினார். சுவாமி அவர்கள் அண்ணா மலைப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக இருந்தபோது, கலைச்சொல்லாக்க முயற்சியில் ஈடுபட்டார். 14.10.1934இல் சங்கம் தமிழ் மாகாண சென்னை "சொல்லாக்கக் கழகம்" ஒன்றை அமைத்து மேநாட்டு விஞ்ஞானக்கலைகளைத் தமிழில் கொண்டு வரும் முயற்சியில் தீவிரமாகச்செயற்பட்டது.

1936இல் தமிழ்க் கலைச் சொல்லாக்க மாநாடு சென்னையிலே நடைபெற்றது. சுவாமி விபுலாநந்தர் அம் மாநாட்டிற்குத் தலைமை தாங்கினார். தமிழ் நாட்டு முதல் அமைச்சர் திரு. ராஜாஜி அவர்களும், தமிழகத்துத்தமிழ்ப் பேரறிஞர்களும், இலங்கைக் கல்விப் பகுதியினரும் இம்மாநாட்டிற் கலந்துகொண்டனர். கணிதம், பூதநூல், வேதி நூல், மரநூல், விலங்கு நூல், உடலியலும் நலவியலும், பூகோளம், வரலாறு, வேளாண்மை என்ற பிரிவுகளாகச் சொல்லாக்கக் குழுக்கள் அமைக்கப்பட்டன. அவற்றில் வேதிநூல் துறைக்குச் சுவாமி விபுலாநந்தர் தலைமை தாங்கினார். சுவாமிகளின் தலைமையின் கீழ் இயங்கிய அனைத்துக்குழுக்களும் பதினாயிரம் சொற்கள் அடங்கிய கலைச்சொல் அகராதியினை முழுமைசெய்தன. அதனை சென்னை மாகாண தமிழ்ச்சங்கம் 1938இல் வெளியிட்டது. இக் கலைச்சொல் அகராதி இன்றும் தமிழ் மாணவர்களின் விஞ்ஞானக் கல்விக்குத் துணையாக இருப்பது அதன் சிறப்பைக் காட்டுகின்றது.

பொதுவாகக் கல்விச் சிந்தனையாளர்கள் அனைவரும் தாய்மொழி மூலமான கல்வியை வலியுறுத்தியே வந்துள்ளனர். ஈழத்திலும் பல பயன்பாடு தாய்மொழிக்கல்வியில் அறிந்திருந்தார். நன்கு பயன்பாட்டை விபுலாநந்தர் சுவாமி கொண்டிருந்த தொடர்பு நிறுவனங்களுடன் கல்வி பாகங்களிலுமுள்ள இந்தியாவின் அதன் முக்கி யத்துவம் என்பன பற்றி ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதியும் வாய்ப்பு ஏற்படும் போதெல்லாம் அதுபற்றிச் சொற் பொழிவுகளும் நிகழ்த்தினார். மாணவர் கல்வியில் உயர்ச்சி பெற வேண்டு மானால் தாய்மொழியில் கல்வி போதிக்கப்படவேண்டும் என்ற கோட்பாடுடையவராகச் சுவாமி விபுலாநந்தர் விளங்கினார். விஞ்ஞானக்கல்விமட்டு மன்றி உயர்கல்வியும் தாய்மொழியில் அமைய வேண்டும் என்பதே அவரது கோட்பாடாகும். அதற் கேற்பவே அவர் கலைச்சொல்லாக்கத்தில் தீவிரமாக உழைத்தார் எனலாம்.

சுவாமிகள் ஆசிரியராகவும் அதிபராகவும் பேராசிரியராகவும் கல்விப்பணி ஆற்றிய காலங்களில், பாரதியார் கூறியவாறு "அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தலிலும், ஆலயம் பதினாயிரம் எடுப்பதிலும் மேலா னது .ஆங்கு ஓர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்" என்ற பாரதியின் வாசகங்களைத் தனது தாரகமந்திரமாகக் கொண்டு சுவாமி விபுலாநந்தர் செயற்பட்டார். அயராத முயற்சி எடுத்து ஏழைக்குடும்பங்களைச்சேர்ந்த மாணவர்களுக்கு உண்டியும் உறைவிடமும் அளித்துக் கல்வி ஊட்டினார். 26 அநாதைச் சிறுவர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட சிவபுரியும் சிவாநந்த வித்தியாலயமும் இன்று ஆலமர விருட்சமாக வளர்ந்திருப்பதற்குக் காரணம் சுவாமிகளின் ஆசியும் அருளும் என்றே கூறவேண்டும்.

யாழ்ப்பாணத்து வைத்தீஸ்வராக் கல்லூரி, மட்டக்களப்புச் சிவானந்தா வித்தியாலயம், திருகோணமலை இந்துக்கல்லூரி என்பன இவ்வகையில் முக்கிய இடங்களாக அமைந்தன. சுவாமிகளால் மட்டக்களப்பு கல்லடி உப்போடையில் ஆரம்பிக்கப்பட்ட அநாதைச்சிறுவர் இல்லத்தின் மூலம் மலையகத்து மாணவர்களும் கல்விகற்றுப்பயனடையக் கூடிய வாய்ப்புக் கிடைத்தது. சாதி வேறுபாடின்றி சகல குடும்பத்துப் பிள்ளைகளும் ஒரே குருகுலத்தில் கல்வி கற்கக்கூடிய வாய்ப்பினை சுவாமிகள் ஏற்படுத்திவைத்தார்.

சுவாமி விபுலாநந்தர் சிறந்த கல்விச் சிந்தனையாளராகச் செயற்பட்டார். இயல், இசை நாடகம் சார்ந்த கல்வி, விஞ்ஞானக் கல்வி, உடற்கல்வி, தொழிற்கல்வி, கற்பித்தல்முறைகள், ஆசிரியர் பயிற்சி முதலான கல்வி சார்ந்த விடயங்களில் தெளிவான பயனுள்ள கருத்துகளை கொண்டிருந்தார்.

( மிகுதி அடுத்தவாரம்)




யாழ் நகரில்
இணையசேவை
(BROWSING CENTRE)

INTERNET மூலம்
உங்கள் இல்லங்களிலிருந்தே
உறவுகளோடு உரையாடி
உணர்வுகளை பகிர்ந்து கொள்ளலாம்.
நாடுங்கள்

மேலும் அமைதியான சூழல்
அன்பான உபசரிப்பு
தெளிவான ஒலி
குறைந்த கட்டணம்

Sri Murugan
Computer Systems, Communication Services
& Agency Post Office
303,K.K.S Road, Jaffna.

T.Phone : 021-2222670,2223588
Fax : 021-2223214.
Email :del-smskr@eureka.lk.

(சி-7933)



கலாலயா பயிற்சியகம்

மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
(பெருமாள் கோயிலுக்கு அண்மையில்)

- கேக் ஐசிங்
- உணவு தயாரித்தல்
- பூ வேலை
- உடை தயாரித்தல்
- கை வேலை
- FABRIC PAINTING

✵ மேற்படி பயிற்சிகள் எல்லாவற்றையும் பயில்வோருக்கு இலவசமாக கூந்தல் அலங்காரம், முக ஒப்பனை என்பன பயிற்றுவிக்கப்படும்.



✵ பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்

✵ கடந்த முதலாம் திகதி முதல் வகுப்புக்கள் ஆரம்பமாகி நடைபெறுகின்றன.

✵ தினமும் பி.ப 2மணி வரை மேலும் விபரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம்.

இயக்குநர்

(சி-7934)


## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி. பாலகிருஷ்ணன் யோகம்மா

பிறப்பு 1943–06–21 இறப்பு 2002–05–20

உருவுக்கு உயிர் கொடுத்து
அறிவுக்கு வழிகாட்டி
வாழ்க்கைப் படகிற்கு
ஓட்டியானாய்
மழை நாளில் குடையாகி
வெயில் நாளில் நிழலாகி
சிறகுக்குள் எமைப்பொத்தி
தாயே! நீ கவர்ந்திருந்தாயம்மா
காலன் வந்து கவர்ந்தானோ
கலங்கரை விளக்கே
தாயே! நீ அணைந்தனையோ
கருகிய பயிராக நாங்கள் ...
துளிராக தூறலாய்
எம் மீது வந்திறங்காயோ.

நி.மு.
வெள்ளுருவை,
அல்வாய் கிழக்கு,
அல்வாய்.

தகவல்:–குடும்பத்தினர்
மகள்(யசோ)

த.மு.
பரந்தன் றோட்,
உம்வட்டாரம்,
புதுக்குடியிருப்பு.

(சி-7892)

இயேசுவின் இன்பப் பெருவிழா இயேசுவின் இன்பப் பெருவிழா இயேசுவின் இன்பப் பெருவிழா

பாலைவனச் சோலை ஊழியம் நடத்தும்

இயேசுவின் இன்பப் பெருவிழா



| இடம் : | திகதி : | நேரம் : |
| --- | --- | --- |
| மானிப்பாய் செல்லமுத்து மைதானம் | ஆனி (ஜூன்) மாதம் 12, 13, 14, 15 | பிற்பகல் 4.30 மணி |

தேவ செய்தியாளர் :

சகோதரி. பத்மா முதலியார்

(சென்னை, இந்தியா)

பாவம், வியாதி, பில்லி சூனியம், கடன் பாரம் இவைகளிலிருந்து உடனே விடுதலை பெற குடும்பமாக வாருங்கள் !

கூட்ட முடிவில் ஜெப எண்ணெய் இலவசமாய் வழங்கப்படும்.

சிறப்புப் பாடல்கள் :
சகோ. ஜான்ஜேபேஸ் & குழுவினர்

குறிப்பு : ஆனி (ஜூன்) மாதம் 13, 14 காலை 9.30 மணிக்கு மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில் ஊழியர்கள் விசுவாசிகளுக்கான வேதபடிப்பு நடைபெறும்.

இயேசு இன்றும் அற்புதம் செய்கிறார் !

அனுமதி இலவசம் !!


(சி-7936)

தொடர்பு : பாஸ்டர் ஆல்பர்ட் V. ஜெபநாயகம், கானான் ஜெப ஆலயம், இருபாலை, கோப்பாய்.
போன் : 021-2223653, 01 737125, 01 721815

OASIS MINISTRIES, Chennai - 40. India. 009144 - 26180109, 26181931

இயேசுவின் இன்பப் பெருவிழா இயேசுவின் இன்பப் பெருவிழா இயேசுவின் இன்பப் பெருவிழா

# நினைவலைகள்...



## மேஜர் ஈழமணி
## (வெற்றிவேல் காண்டீபன்)

(யாழ் செல்லும் படையணி)

காரைநகர் யாழ்ப்பாணம்

| பிறப்பு | வீரச்சாவு |
| --- | --- |
| 1980.01.01 | 26.05.2000 |

இதந்தர ஒளி ஏந்த
சுதந்திர வர்த்தி - நீ
உரந்தர உயிருமிழ்ந்து
நிரந்தரமாகி நிறைந்து நிற்கும்
ஓர் நாளில்
கற்றைக் கலைமதி வெட்கித் தலைகுனி
கதிரொளி வதனக் கலைமணியே -உறு
பொற்பைப் புரந்துயர் நட்பைக் கூறிடு
புதிதொரு பெருவலியிப் புவிதனிலேது- செறு
வெற்பை வேரறு வேட்கையில் வீழ்ந்தனை யன்று
வதிவிடமே அஃதாட்டிட வீழ்ந்தனனின்று-மண்
பற்றைப் பற்றிடல் விட்டிலா உன் லட்சியப்
பொதிவுட னெஃகென எழுவதென்பணியே-காண்
அனலினிற் தகித்து ஆறிடா ஈயமன்ன.
கனலினுங் கொடிதாய கடும்புறங் காதிலேந்தி
பிழையறு போழ்துங் கொலையுறு நகரமேகி-
பேரிடி சிரசிலேந்தும்.
நிலையது நேரலுற்று, நொய்ந்துடல் பிய்ந்து- பின்னும்
புதையுறும் போதும் பிரிவுறாதவை யிரண்டே.
-உன்நினைவும்-
-உன்கனவும்-

நண்பன்



# நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் நித்திய அன்னதானம் பற்றிய

## விசேட அறிவித்தல்

*அம்பிகை அடியார்களே!*

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாளைத் தரிசிப்பதற்கு வரும் அடியார்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் உள்ளது. திருவருளைப் பருகிச் செல்லும் அடியார் களின் பசிப்பிணியைப் போக்கவென ஆலய வடக்குவீதியில் அமைக்கப்பட்டுள்ள யாத்திரிகர் தங்கும் விடுதியில் நித்திய அன்னதானம் அம்பிகையின் அருளாசியுடன் சிறப்புற நடைபெற்று வருகின்றது. 1998 இல் நடைபெற்ற மகா கும்பாபிஷேகத்தினைத் தொடர்ந்து நித்திய அன்னதானம் அடியார்களின் பேராதரவுடன் குறைவின்றி சுமார் 5 வருடங்களாக தொடர்ந்து நடைபெற்று வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. மகோற்சவகாலம் (16 நாள்)தவிர ஏனைய நாட்களில் இத்திருப்பணி நித்திய அடியார் பணியாக நிறைவேற்றப்படுகிறது. தினம் தோறும் ஆயிரக்கணக்கான அடியார்களுக்கு அமுது படைக்கும் அன்னையின் திருவருள்தான் என்னே!

நீங்களும் இத்திருப்பணியில் இணைந்து அடியார்களுக்கு அமுது படைக்கும் அருட்பணியில் பங்குபற்றுங்கள். ஒரு முறை மட்டும் ஐயாயிரம் (5000 ரூபா) செலுத்தினால் போதும் உங்களின் பெயரால் ஆண்டு தோறும் குறிப்பிட்ட திகதியில் நித்திய அன்னதானம் வழங்கப்படும். பணத்தை ஆலய மேற்கு வீதியில் அமைந்துள்ள அலுவலகத்திலோ அல்லது யாழ். வர்த்தக வங்கியின் 10600 12330 கணக்கு இலக்கத்திலோஅல்லது புறக்கோட்டை வர்த்தக வங்கியின் 01-2426285 - 01 கணக்கு இலக்கத்திலோ வைப்பிலிடலாம். பொருளாளர் அறங்காவலர் சபை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் நயினாதீவு என்ற முகவரிக்கு அல்லது யாழ்ப்பாணத் தொடர்பகம் இல.72 ,பெரியகடை மேற்கு, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு தபாற் கட்டளையாகவோ அல்லது காசோலையாகவோ வரைய முடியும். இத்திட்டத்தின் கீழ் இணைந்து அன்னையின் அருளாசியினைப் பெற்றுக் கொள்ளவேண்டுகின்றோம்.

வேறு தனிநபர்க்கோ நிறுவனங்களுக்கோ நித்திய அன்னதானம் தொடர்பாக நிதி வசூலிக்க அனுமதி அளிக்கப்படவில்லை என்பதை அறியத்தருகின்றோம்.

**அறங்காவலர் சபை**
**ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்**
**நயினாதீவு.**

(சி-7938)



# நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்

## நயினாதீவு

## போலி வேடதாரிகளை இனங்காண உதவுங்கள்

**அம்பிகை அடியார்களே!**

நயினாதீவு, ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோயில் உற்சவ காலம் 29.06.2003ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகவுள்ளது என்பதை அடியார்களுக்கு அறியத்தருகின்றோம்.

இக்காலப் பகுதியைப் பயன்படுத்தியும் ஆலயத்தின் பெயரைப் பயன்படுத்தியும் போலி வேடதாரிகளும், ஏமாற்றுப் பேர்வழிகளும் அடியார்களை ஏமாற்றிப் பணம் பறிக்கும் முயற்சியில். ஈடுபட்டுள்ளனர் என்ற தகவலை அம்பிகை அடியார்கள் அறங்காவலர் சபையின் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளனர். சாவகச்சேரி, நாவற்குழி மற்றும் யாழ். மாவட்டத்தின் பல பகுதிகளிலும் இவர்களின் நடமாட்டம் உள்ளதாக அறியத்தந்துள்ளனர். அன்னதானப் பணி, தேநீர், கோப்பிச் சபை, தர்மகைங்கரியங்கள் என்னும் பெயரால் பற்றுச் சீட்டுக்கள் வழங்கப்படுகின்றன. இத்தகைய பணிகளுக்காக பணம் வசூலிக்க வருபவர்களை இனங்கண்டு அருகில் உள்ள பொலிஸ் நிலையத்திலோ அல்லது உங்கள் பகுதி கிராமசேவகர், பிரதேச செயலாளர் மூலமோ அறங்காவலர் சபை, நயினாதீவுக்கோ அல்லது யாழ்ப்பாணத் தொடர்பகம், 72, பெரியகடை மேற்கு, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கோ தகவல் தரவும்.

ஆலயத்தின் பெயரால் எவ்வித நிதிவசூலும் செய்ய தனி நபர்களுக்கோ, நிறுவனங்களுக்கோ அனுமதி அளிக்கப்படவில்லை. பணம் செலுத்த விரும்பும் அடியார்கள்.

- பொருளாளர்,
  நயினாதீவு, ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்,
  நயினாதீவு. என்னும் விலாசத்திற்கு அனுப்பி வைக்க முடியும். அல்லது
- வர்த்தக வங்கி, யாழ்ப்பாணம்
  கணக்கு இல, 10600 12330 இற்கோ அல்லது
- யாழ்ப்பாண தொடர்பகம்
  இல. 72, பெரியகடை மேற்கு, யாழ்ப்பாணம்.
  என்னும் விலாசங்களுடன் தொடர்புகொள்ளவும்.

கு.சரவணபவானந்தன் J.P
செயலாளர்.
நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்,
நயினாதீவு.

தொலைபேசி இல.
நயினாதீவு~ 070 213024.
யாழ்ப்பாணம்~ 071347587

**போலிப் பற்றுச்சீட்டின் மாதிரி**


நைனாதிவு நாகபூசனி அம்மன்
கோயில் பரிபாலன சபை
801
அருள்மிகு
நைனாதிவு
நாகபூசனி அம்மன்
ரூபா 100/-
நைனாதிவு
நாகபூசனி அம்மன்
சித்தம் மலர
வருடா வருடம்
வரும்
தேர் திருநாளை
முன்னிட்டும் மற்றும்
வரும் அடியார்க்கு
தேனீர் கோப்பி

### ஆலய உள் வீதியில் புகைப்படம், வீடியோ படம் எடுத்தலை தடைசெய்தல்


ஆலய உள்வீதியில் புகைப்படம், வீடியோ படம் எடுத்தல் ஆகிய செயற்பாடுகளினால் அடியார்களுக்கு ஏற்படும் அசௌகரியங்கள் குறித்து பல முறைப்பாடுகள் அறங்காவலர் சபைக்குக் கிடைத்துள்ளமையால் இந்த அறிவித்தல் மூலம் புகைப்படம்,விடியோ எடுத்தல் தடைசெய்யப் படுகின்றது. ஆலயத்தின் புனிதத் தன்மையைப் பேண சகல அம்பிகை அடியார்களும் ஒத்துழைப்பு நல்குமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

கு. சரவணபவானந்தன் J.P.
செயலாளர்
நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்,
நயினாதீவு.

(சி-7937)

# தமிழ் மாணவர் போராட்டத்தின் ஆணிவேர்

இப் போராட்டம வளர்ச்சி பெறுவதற்கு ஊன்று சக்தியாக இருந்து படிப்படியாக வேரூன்றி பெரும் விருட்சமாக படர்ந்து உலகின் புருவத்தை சற்று உயர்த்தி இத்தமிழீழ விடுதலைப் போராட்டத்தை ஆதரித்து உலகெங்கும் குரல் கொடுக்கும் அளவிற்கு உருவாக்க ஆணி வேராக இருதவர்கள் தமிமீழ மாணவர் என்றால் அது மிகையாகாது. இப்போராட்டம் மாணவர்களினால் ஆரம்பிக்கப்பட்டது என்றால் மறுப்பு தெரிவிக்கவும் கூடுமா?



ஆம் இப்போராட்டம் பெரும் சுவாலையாக வெடிப்பதற்கு அமைந்த உடனடி காரணம் 1972ம் ஆண்டு சிறிமா அரசு தரப்படுத்தல் என்னும் சட்டத்தை தமகுரிய எம் தமிழீழ மாணவர்களுக்குப் புகுத்தி துரோகம் இழைக்க முற்பட்டதன் விளைவை தாங்க முடியாத அன்றைய மாணவர் சமூகம் இந்நிலை இனித்தமக்கு அடுத்துவரும் இளைய சமூகத்திற்கும் தமது தம்பி, தங்கைக்கும் வர இடம் கொடுக்க கூடாது என்னும் தீர்க்கமான நோக்குடன் வெடித்த வெடியாகும். இப் போராட்டம். இது உடனடிக்காரணமாகும். இதற்கு முன் பல மறக்கமுடியாத மாற்ற முடியாத இன்னல்கள், இம்சைகளை சிங்கள பேரினவாதம் தமிழருக்கு இழைத்து வந்துள்ளது. அன்றைய சிங்கள ஆட்சியாளர்கள், பேரினவாதிகள் தமிழ் மக்களுக்கு புரிந்த கொடுமையை உலக மனித உரிமை மறந்தாலும், அல்லது அதன் கண்ணுக்கு மறைக்கப்பட்டாலும் தமிழ் மக்கள் மறக்க மாட்டார்கள். அன்றைய பிஞ்சு உள்ளமாக இருந்து இன்று வளர்ந்து நிற்கும் உங்கள் மனங்களில் அதன் தாக்கம் ஆழ வேரூன்றி இருக்கும். இதற்கு எந்த விதஐயப்பாடும் இல்லை.

இக் கொடுமைகளை எல்லாம் மிகவும் பொறுத்து அன்றைய தமிழ்தலைவர்கள் எத்தனையோ அகிம்சை போராட்டம் நடத்தி எத்தனை எத்தனை மகஜர்களை அனுப்பி சிங்கள ஆட்சியாளருக்கு நீங்கள் செய்வது தவறு என்பதை உணர்த்த விரும்பினார்கள். அது எல்லாம் குரங்குக்கு புத்தி கூறப் போனது போல! ஆனது. குரங்குக்கு புத்திகூற போய் தூக்கணாம் குருவி தனது கூட்டை இழந்த கதைதான் இதற்கு பொருத்தம். அந்நிலையே இன்றுதமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ளது. அக்கொடுமைகளின் உச்ச கட்டமாக தமிழ் மாணவரை போராட தூண்டும் செயலாக பொறுமையை இழக்க வைக்கும் செயலாக தமிழ் மாணவரின் கல்வியில் தனது கொடிய பார்வையைத் திருப்பி தனது கையை அதில் வைத்து தரப்படுத்தல் என்னும் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. இதனை தமிழ் மாணவர்கள் பொறுப்பார்களா? பொறுப்பது நீதியா, அல்லது சரியா? இதனை பொறுத்தால் எமது பண்பாடு, கலாசாரம் என்னவாகும்? இதனைப் பொறுத்தால் எமது இளைய சந்ததியின் நிலை கேள்விக் குறியாக அல்லவா போய்விடும்! இவ்வாறான வினா விற்கு விடை காணும் விதமாகவே வீரமறவர்கள் வீறுகொண் டெழுந்தார்கள்.

இந்த தமிழீழ மாணவர் எழுச்சி நாளுக்கு வித்திட்ட வீர

**ப. சேரமான்**

மறவனின் வீரச்செயலை சற்று மீட்டுப் பார்க்க இன்று அனைவரும் கடமைப்பட்டுள்ளார்கள்.அந்த உத்தமனின் நினைவு எம் உள்ளமதிலிருந்து என்றும் நீங்கவோ, அழியவோ போவதில்லை. உரும்பிராயை பிறப்பிடமாக கொண்ட பொன். சிவகுமார் என்பவர் ஆவார். தமிழ் மக்களுக்கும், மாணவ சமூகத்திற்கும் இழைக்கப்படும் கொடுமையை இனியும் பொறுக்க முடியாது என்று அன்றைய பொழுதில் தானும் புரட்சியாளனாக உருவெடுத்து போராட ஆரம்பித்தான். போராட்ட வளர்ச்சிக்கு நிதி தேவைப்பட சிங்கள அரசுக்கு அது பயங்கரவாத செயல் என்றாலும், எம் மக்களுக்கும் இப் போராட்டத்திற்கும் அது இன்றி அமையாத செயலாகும்.

அது தமிழ்மக்களை அடிமைத் தனத்திலிருந்து மீட்டு அவர்களுக்கு ஒரு சுதந்திரத்தைப் பெற்று கொடுக்கச் செய்யப்பட்ட செயல் என்ற வகையில் அதில் தர்மம் உள்ளது. அவ்வாறான செயலாக யாழ் கோப்பாய் வங்கியில் புகுந்து 5 லட்சம் பணமும், 2லட்சம் பெறுமதியான நகையும் எடுத்துக் கொண்டுபோகும்போது சில வஞ்சகமான துரோகிகளால் காட்டிக்கொடுக்கப்பட சிங்கள கூலி படைகள் சுற்றி வளைத்தது. எப்படியாவது தப்புவோம் என்ற சிந்தனையுடன் பக்கத்திலுள்ள போயிலை தோட்டத்திற்குள் நுழைந்து ஓடிய போது நான்கு பக்கமும் சிங்கள கூலிப்படைகள் சுற்றி வளைத்து சுட அதில் ஒரு ரவை இவன் உடலில் பட்டு துழைத்து விட்டது. இனி தன்னால் ஓடமுடியாது என்ற முடிவெடுத்த பொன். சிவகுமார் தான் உயிருடன் பிடிபடக்கூடாது தன்னை உயிருடன் பிடித்தால் தன்னை சித்திரவதை செய்து எமது தோழர்களையும் பிடித்து விடுவார்கள் என்ற தீர்க்கமான முடிவுடன் விடுதலை போராட்டதின் மகிமையை உணர்த்தும் செயலாக புலிகளுக்கு "சயனைட்" என்னும் பொருளையும் அதன் மகிமையையும் அது தன்னையும் தன்னை நம்பி சுமந்த தனது தோழனையும் அழித்து விடுதலை போராட்டத்தின் இரகசியம் காக்கும் அதன் அளப்பரிய தொழிற்பாட்டை உணர்த்தியவனாக, தமிழர் விடுதலைப் போராட்டத்தின் முதல் மாவீரனாக 05.06.1974ம் நாள் தமிழ் மண்ணை அரவணைத்துக் கொண்டான். இவரின் நினைவில் மாணவர் எழுச்சி நாள் பிரகடணப் படுத்தப்பட்டது. அதனையே மாணவர் எழுச்சி நாளில் மாணவர்கள் மீட்டுப் பார்க்க கடமைப்பட்டுள்ளார்கள். இந்த உத்தமனின் உடலும், உருவமுமே எம்மிடம் இருந்து பிரிந்ததே தவிர அவனின் இலட்சியம், குறிக்கோள் எம்மாணவரிடமோ, மக்களிடமோ என்றும் பிரியப்போவது இல்லை. பிரிக்கவும் முடியாது.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –21




நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப்பரிசு வழங்கப்படும்.

### படத்திற்கு மெருகூட்டுங்கள் –21

......................................................................

......................................................................

......................................................................

......................................................................

பெயர் : ..........................................................

முகவரி : ..........................................................

..........................................................

**ஈழநாதம்**
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் 20



**காரை - விசாகன்**
**கனகா ஸ்ருடியோ**
**ஆலடி, காரைநகர்.**

### பரிசுக்குரிய வரிகள்

**பஞ்சினிலே தந்தசுமை நெஞ்சினிலே எரிக்குதையா**
**பஞ்சினையே ஒத்தபாதம் படுவெய்யில் மிதிக்குதையா**
**குஞ்சு உனை பெற்றவள்தான் நீரெடுக்க அனுப்பினாளா?**
**வஞ்சியவள் மடிந்ததனால் நீயெடுத்த முடிவிதுவா?**

### பாராட்டுக்குரிய வரிகள்

*ஆக்கிரமிப்பால் வந்ததுவோ இத்துயரம்*
*அதனால் வந்தது தான் இந்நிலையே*
*அன்பளிப்பு போர்வையில் வழங்கியதோ இக்குடம்*
*ஆக்கிரமிப்பாளர் இருக்கும் மட்டும் இந்நிலையே.*

இ.தனயந்தன்,
276 ஜெயந்திநகர்,
கிளிநொச்சி.

*நீர் கூட சுமந்துவர நீண்ட தூரம் நடக்க வேண்டும்*
*தினம் கண்ணீரில் உங்கள்வாழ்க்கை சொட்டுநீருக்கும் பஞ்சம்*
*சொந்தக் கிணற்றில் நீர் அள்ள சுதந்திரமில்லை*
*எப்போது கிடைக்கும் உங்களுக்கு இனிய வாழ்க்கை.*

ஆ.செந்தூர்மணி,
புளியம்பொக்கணைச்சந்தி,
புளியம்பொக்கணை.

*நாளைய தலைவி இவள் - ஆனால்*
*தமிழர் என்பதால் தாகம் தீர்க்க - தண்ணீர்*
*இன்றி முகாமில் வாடும் இவள் - நீர்*
*எடுப்பதற்காய் தரணியில் தனிமரமாய்*

பி.கங்கேஸ்வரி,
செ.ஜெயதீஸ்வரன்,
வண்ணாங்கேணி, பளை

*தங்கையின் தந்தையோ எறிகணையில் - பலி*
*தாயோ கண்டி வீதியில் கண்மூடிவிட்டார்*
*பசியால் துடிதுடிக்கும் தம்பிகளுக்கு*
*பசியாற்ற தங்கையோ தண்ணீர் குடத்துடன் வீறுநடை.*

பா.கில்மன்,
தமிழீழம்.

இந்தப் போட்டிக்கான நினைவுப்பரிசினை
**அருச்சுனா புகைப்படக் கலையகம்**
புதுக்குடியிருப்பு கிளிநொச்சி.
வழங்குகின்றது.

## ஜீவன்ஹூலிடமிருந்து வின்சன் புளோரன்சுக்கு ஒரு பதில்

**ஏப்ரல் -10 வெள்ளி நாதத்தில் வெளிவந்த UTHR - J என்பவர்கள் யார்? என்ற கட்டுரை தொடர்பாக இரத்தின ஜீவன்.ஹே.ஹூல் அவர்கள் எழுதிய பதில் கடிதம்.**

15/7 கேணல் ரீ.ஜீ ஜயவர்த்தனா
மாவத்தை கொழும்பு -03.
ஆசிரியர்,
வெள்ளிநாதம்,
யாழ்சாலை,
கிளிநொச்சி.

ஆசிரியர் அவர்கள் அறியவும்:

உங்களது 10 ஏப்பிரலான இதழில் நான் றோ இன் கையாள் என்றும் UTHR அறிக்கைகளின் பிரதான ஆசிரியர் என்றும், நான் யாழ்ப்பாணப் பக்கம் வந்து போவதில்லையென்றும், இவை யாவும் யாழ் பல்கலைக்கழக வட்டாரங்களால் உறுதியாக நம்பப்படுகிறதென்றும் அறிவித்திருக்கிறீர்கள்.

இது பொய்ப் பிரச்சாரம் மட்டுமல்ல எனக்குப் பதிலளிக்கச் சந்தர்ப்பம் தராமல் இதை உங்கள் பத்திரிகை மூலம் பிரசுரப்படுத்துவது பொறுப்பற்ற காரியமாகும். உண்மையாகவே இந்த UTHR அறிக்கைகளை எழுதுவதாய் இருந்தால், நான் வெளிமுகமாகப் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீட பேராசிரியராக, யாவருக்கும் தெரிந்த முகவரியில் இந்தச் சூழ்நிலையில் வாழ்வேனா என்பதை சிந்தித்துப்பாருங்கள்.

யாழ் பல்கலைக்கழகத்தாருக்கு நான் யார், அறிக்கைகளை எழுதுவது யார் என்பது நன்றாகத் தெரியும். வடகிழக்கில் உண்மையான நிலை படித்தோரில் அநேகமானோர் வெளியேறிவிட்டார்கள். பல்கலைக்கழகத்தில் மிஞ்சியோர் பலர் இந்த நிலைமையை தாண்டக் கடினமாக, இரண்டு மடங்காக வேலை செய்தாலும் ஒரு சிலர் ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப் பூ சக்கரை என்பது போல் மட்டமான படிப்புடனும் பூச்சிய ஆராய்ச்சியுடனும் புத்தி ஜீவிகளாக நடிக்கிறார்கள். இவர்களின் நாடகத்திற்கு படித்தவர்கள் அங்கு வருவது ஒரு பெரிய அபாயமாகிறது.

இலங்கையில் இப்போ மேல் நாட்டு உயர் கலாநிதி பட்டத்துடன் சேவையில் உள்ள ஒரே ஆள் நான். நோபல் பரிசு பெற்ற ஜோர்ஜ் ஓலாவின்கீழ் கலாநிதிப்பட்டம் பெற்றவர் என் மனைவி.

பல்கலைக்கழகத்தின் இந்த இருட்டிய வேளையில் தமிழ் பிரதேசங்களின் முன்னேற்றத்தைக்கருதி என்னையும் என் மனைவியையும் யாழ் பல்கலைக்கழகத்திற்கு வரவழைத்தவர்களை மதித்து நான் புதுப்பொறியியல் பீடத்து பேராசிரியர் பதவிக்கும், என் மனைவி இரசாயனப் பேராசிரியர் பதவிக்கும் விண்ணப்பித்த கட்டம் இது. என் மனைவியை நேர்முகப்பரீட்சைக்கு வரவழைத்த கட்டமுமே.

இது தான் உங்கள் யாழ் பல்கலைக்கழகச்செய்தி மூலங்கள் தந்த அறிக்கைகளின் பின்னணி. அவர்களின் நோக்கம் எம்மைப் பயமுறுத்தி வராமற்பண்ணுவது போல எனக்குத் தோன்றுகிறது. இப்படித்தகவல் தந்தது மட்டுமல்ல உங்கள்கட்டுரையின் ஒளிப்பிரதிகளை எனது சொந்தக்காரர் பலருக்கு நான் கட்டாயம் காணவேண்டும் என்ற நோக்குடன் அனுப்பி வைத்துள்ளார்கள்.

அடுத்தமுறை கொஞ்சம் விசாரித்து வடகிழக்கின் விருத்தியைக்கருதாது தமது அந்தஸ்தைப்பாதுகாக்கும் எரிச்சல் காரரை நம்பாமல் பொறுப்புடன் எழுதுமாறு தயவாக வேண்டிக்கொள்கிறேன்.

இப்படிக்கு
பேராசிரியர் சா.இரத்தினஜீவன் ஹே.ஹூல்

எச்சரிக்கை எனும் முழுப் பாலைவனத்துக்கு அனுபவத்தின் ஒருமுள், ஈடானது. - ஜேம்ஸ்ரஸ்ஸல்ஸோவெல்




# திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்!

நிகழும் சர்வ மங்களகரமான சுபானு வருஷம் வைகாசி மாதம்28ஆம் நாள் (11-06-2003) புதன்கிழமை பகல் 01 மணி 59 நிமிஷம் முதல் 02 மணி 47 நிமிஷம் வரையுள்ள கன்னிலக்கினமும் சித்தயோகமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்

எமது கனிஷ்ட புத்திரன்
திருநிறைச்செல்வன்
சுகுமாரன்
அவர்களுக்கும்

எமது புத்திரி
திருநிறைச்செல்வி
கஸ்தூரி
அவர்களுக்கும்

முருகன் திருவருள் துணையுடன் கிளிநொச்சி கந்தசுவாமி தேவஸ்தானத்தில் திருமணம் செய்து வைக்க பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதரராய் வருகை தந்து ஆசீர்வதித்து தொடர்ந்து இடம்பெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கிறோம்.

திரு. திருமதி. ந. கந்தசாமி
தெணி,
வல்வெட்டித்துறை.
த. மு :–நீர்ப்பாசனத் திணைக்கள விடுதி.
கிளிநொச்சி.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்
(இருவீட்டார் அழைப்பு)

திரு. திருமதி. ச. இரகுநாதன் (கட்டி)
காட்டுப்புலம்,
தொண்டமானாறு.
த. மு :–இல. 954,திருநகர்,
கிளிநொச்சி.

# 3ம் ஆண்டு நினைவலைகள்



பிறப்பு–15.01.1976 வீரச்சாவு–07.06.2000

கைகூப்பித் தொழுது -எம்
கண்ணீரால் விளக்கேற்றி
கல்லறைக்கு பூச்சொரிந்து -உன்
கனவுகளில் தொடர்கின்றோம்.
சிறுத்தைப்புலியாய் -நீ
சீறினாய் களங்களில்
கரைந்து செல்கின்றன ஆண்டுகள்
கரையாது எம்முடன் உன் நினைவுகள்

3ஆம் ஆண்டு நினைவு நிகழ்விலும் மதியபோசனநிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு போராளிகள்,உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரையும் அழைக்கிறோம்.

**மேஜர் அன்பரசி**
**(தர்மராஜா ஜெயந்தி)**
அல்வாய் திக்கம்
ஓயாத அலைகள் 03 முகமாலைப் பகுதியில்

குடும்பத்தினர்
தர்மபுரம்-கிளிநொச்சி




இப் பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஜூன் மாதம் 06ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.